அன்பளிப்பு

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மேலைச்சிதம்பரமாகிய

# திருப்பேரூர்க் கலித்துறை அந்தாதி.

திரிசிரபுரம்,

வித்வசிரோமணியாகிய மகா-ள-ள-ஸ்ரீ சி. தியாகராசசெட்டியார்
அவர்களிடம் கல்விபயின்றவரும், கோயமுத்தூர் இந்துக்
காலேஜ் பிரதம தமிழ்ப்பண்டிதரும் ஆகிய
கும்பகோணம்

**ஆர். சபாபதிபிள்ளையவர்கள் இயற்றியது.**

இஃது

மேற்படி பிள்ளையவர்கள் முதன் மாணாக்கரும் நாமக்கல் போர்டு
ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதரும் ஆகிய மதுக்கரை
சி. ஆனையப்பமுதலியார் செய்த உரையுடன்,

வெள்ளக்கிணறு சீமான் மகா-ள-ள-ஸ்ரீ
**சி. வெள்ளியங்கிரிக்கவுண்டர் அவர்களால்**
அரங்கேற்றுவித்து,

கோயமுத்தூர் கே. ஆர். வி. அண்டு கோ. அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1906 பராபவ-௵ ஆவணி-௴

*Copy right registered.*

PRICE ANNAS 8.] [இதன் விலை அணா 8.

அன்பளிப்பு

உ

## முகவுரை.

அறிவருளமைதியடக்கம்வாய்மை
பொறைநெறிகல்விப்புலமைநிறைந்த
பெரியோர்கட்கு விஞ்ஞாபனம்.

ஸ்ரீமேலைச்சிதம்பரமாகிய திருப்பேரூர்க் கலித்துறை யந்தாதி, இஃது இடை இடையே சில யமகமும், ஏனையவை திரிபாகவும் நூறு கட்டளைக் கலித்துறைகளாற் செய்யப்பட்டது. இதற்குச் சில நண்பர்கள் உரையியற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டமையால் மேற்கோள்களும், இலக்கணக்குறிப்புகளும் சில எடுத்துக்காட்டி அகப்பொருட்டுறைகட்கு முன்னோர்கள் விரிவாக வுரையெழுதி யிருக்கின்றதால் அவைகட்குச் சுருக்கமாக ஒருரையெழுதி அச்சிட்டு வெளிப்படுத்தினேன். மனிதர் இயற்கைக்கு மறதியும், அறியாமையும் இயல்பாதலால் எனக்குத் தோன்றாதவைகளையும், பிழைபட்டவைகளையும் எடுத்துத் திருத்தித் தருவீர்களாயின் அவற்றைப் பேருதவியாகப் பாராட்டித் தங்கள் பெயருடன் மறுபதிப்பில் அச்சிட்டு வெளிப்படுத்துவேன்.

இங்ஙனம் தங்கள்,

**சி. ஆனையப்பன்.**

உ

## விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டுவோர் கோயமுத்தூர்க் காலேஜ் புக் டிப்போவிலும், மேற்படியூர்ப் புத்தகக்கடை பெ. கோவிந்த கௌடர். இடத்திலும், உடுமலைப்பேட்டை புத்தகக்கடை சோ. சின்னப்ப செட்டியார் இடத்திலும், கும்பகோணம் புத்தகக்கடை மார்க்கண்டையர் இடத்திலும், என்னிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,

**ச. தியாகராஜபிள்ளை.**

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY

# சிறப்புப் பாயிரம்.

சென்னை கவர்ன்மெண்டு காலேஜ் தமிழ்ப்பண்டிதரும் மஹா மஹோபாத்தியாயருமாகிய மகா-௱-௱-ஸ்ரீ உ. வே. சாமிநாதை யரவர்கள் இயற்றிய,

## கட்டளைக்கலித்துறை.

ஆரைப் பிறையை முடிப்பிணை ரசம் பலகப்பேன்
பேரைக் கலித்துறை யந்தாதி பாடினன் பேரையுற்றான்
காரைப் பொருதண் ணளித்தியாக ராச கவிஞனிடைச்
சீரைப் பெறுதமிழ் தேர்ந்தோன் சபாபதிச் செம்மலின்றே.

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பின்னத்தூர் மகா-௱-௱-ஸ்ரீ அ. நாராயணசாமி அய்யரவர்கள் இயற்றியது.

தாரத்தினந் தாதியற் பாவுட னேபத்தி தான்விளங்கக்
காரத்தினந் தாதியன் பூமனந் தாதிமுன் காண்பருமா
திரத்தினந் தாதிய லாடையற் கேதிகழ் மேலைச்சிதம்
பரத்தினந் தாதி பகர்ந்தான் குடந்தைச் சபாபதியே.

கோயமுத்தூர் செண்ட் மைக்கல் காலேஜ் பிரதம தமிழ்ப் பண்டிதர் மகா-௱-ஸ்ரீ ச. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள் இயற்றியது.

திங்க டவழ்முடித் தென்பேரை யீசன் றிருவடிக்கே
சங்கையின் றென்று புலவோர் புகழச் சபாபதிமால்
அங்கவி நூறுசொ லந்தாதியை யரங் கேற்றுவித்தான்
கங்கைப ரருங் கவின்வெள்ளி யங்கிரிக் காவலனே.

இப்பிரபந்தஞ் செய்தார் முதன் மாணுக்கரும் நாமக்கல் போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும் ஆகிய மதுக்கரை **சி. ஆனையப்பமுதலியார்** இயற்றியது.

## நிலைமண்டிலவாசிரியப்பா.

நீராடை யுடுத்த நிலமக ளுக்கோர்
பேரா வணியெனப் பெட்பின் விளங்கும்
முத்தமிழ் பயிலும் மூவேந்தர் நாட்டுண்
முத்துடைக் கோட்டு மும்மத வேழம்
பத்தி பத்தியாய்ப் பயில்சேரர் நாட்டு
முன்னீர் குடித்த முனிவற் கருந்தமிழ்
முன்னருள் செய்த முருகவே ளுவந்து
மன்னி யிருக்கு மருத மலையும்
வெள்ளியங் கிரியாய் விளங்கிய கயிலை
வெள்ளியங் கிரியாய் விளங்கிய வைப்பும
மற்றதி னின்று மணிகொழித் திழிந்து
கற்றவர் புகழக் கரைபுரண் டோடி
வாஞ்சித் தாடுநர் மலவிரு ளகற்றுங்
காஞ்சிமா நதியுங் காமர் மஞ்ஞை
மாதர் கூந்தலை மஞ்செனு மதித்துள்
ஆதரத் துடனே யணைந்தவர் நோக்கை
அம்பெனக் கருதித் துன்புற் றகலும்
தும்பியுந் தேனும் பம்புபூஞ் சோலையுங்
கனக சபையுங் கற்றே ரவையுங்
கனகமு மோடு மொப்பக் காணும்
ஐந்தவித் துயர்ந்த வறவோர் மடங்களும்
இந்து தவழ்மணி யெழிற் கோபுரங்களும்
விற்பனர் புகழ விளங்கிச் சூழ்ந்து
சொற்பதங் கடந்த தொல்லோன் மேவிக்
கற்பனைக் கடங்காக் காமர் வாய்ந்ததனுற்

பேரு ரென்று பெரியோர் புகழுஞ்
சீரூர் மேலைச் சிதம்பர தலத்தில்
ஊரும் பேரு முருவு மில்லான்
ஊரும் பேரு முருவு முள்ளான்
அஞ்சக் கரத்த னருட்டிரு மேனியன்
பஞ்சின் மெல்லடிப் பாவை பாகன்
நஞ்சணி மிடற்றன் ஞான நாயகன்
கஞ்சனுங் கண்ணனுங் காணற் கரியவன்
வேண்டுவோர் வேண்டுவ வெறுப்ப வளித்து
மீண்டுந் தோன்றாக் கதியருள் புரிய
விரும்பி யெழுந்தருள் விமலன் றனக்குச்
சொற்சுவை பொருட்சுவை யாவுந் தொகுத்துக்
கவித்துறை யந்தாதி கவின்பெறப் புனைந்து
நலிவின்றிப் புலவர்முன் னன்றரங் கேற்றினன்
அவன்யா ரென்னி லறைகுவங் கேண்மோ
சபாபதி குரைகழல் சந்ததம் போற்றுஞ்
சபாபதி நாமந் தாங்கிய தக்கோன்
கோயில்கள் செறியுங் குடந்தைமா நகரோன்
குயிறவழ் பொழில்சூழ் கோய முத்தூர்
இந்துக் கல்லூரியி னியற்றமி ழாசான்
சந்தனப் பொதியச் செந்தமிழ்த் தானம்
மைந்தர்க் கருளும் வரைவிலா வள்ளல்
என்றன் மதியு மினிது விளக்கினோன்
மற்றிந் நூலை மதித்தா ராய்ந்தே
உற்றவர் தமக்கூ ணுலவா தளிப்போன்
வெள்ளக் கிணற்றில் விளங்குந் தனவான்
வெள்ளியங் கிரிவே ளுள்ள மகிழ்ந்து
எடுத்த *வச்சி னிருட்பய னெய்தத்
தொடுத்த வச்சிற் றொடுத்தணிந் தனனே.

அச்சு—உடல்.

இப்பிரபந்தஞ் செய்தார் மாணாக்கருள் ஒருவரும் உடுமலைப் பேட்டை போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும் ஆகிய **மூ. சிவகுருநாதபிள்ளை** இயற்றியது.

## கட்டளைக்கலித்துறை.

திங்களங் கண்ணி மிலைந்ததென் பேரைச் சிவபெருமான்
அங்கழல் போற்றியந் தாதிசொற் றானிவ் வவனிபுகழ்
கொங்கலர் சோலைக் குடந்தைச் சபாபதி யெங்குரவன்
பங்கமுற் றேகலை வாணி மறைந்திடப் பங்கயத்தே.

கோயமுத்தூர் வித்வானும் வக்கீலுமாயிருந்த மகா-௱-௱-ஸ்ரீ கந்தசாமிமுதலியார் குமாரரும், பண்டிதர் ச. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள் மாணாக்கருமாகிய **C. K. சுப்பிரமணிய முதலியார் B. A.** இயற்றியது.

கலித்துறை யந்தாதி சாற்றிச் சபாபதிக் கல்விவல்லோன்
கலித்துறை கங்கை முடிப்பட்டிநாதர் கழற் புனைந்தான்
கலித்துறை போக வவனிமுன் னீந்து களித்தனனோர்
கலித்துறை சேரும் புகழ்வெள்ளி யங்கிரிக் காவலனே.

கோயமுத்தூர் செண்ட் மைக்கல் காலேஜ் உதவித் தமிழ்ப் பண்டிதரும் மகா-௱-௱-ஸ்ரீ சாமிநாதபிள்ளை மாணாக்கரும் ஆகிய **அய்யாவுப்பிள்ளை** இயற்றியது.

கொங்கிற் றிகழணி காஞ்சிவாய்ப் பேரை குலவுமரன்
சங்கக் குழையணி பட்டிப் பிரான்றிருத் தாள்பரவித்
துங்கக் கலித்துறை யந்தாதி நன்று தொடுத்தணிந்தான்
நங்கள் சபாபதி மால்கோவைக் கல்லூரி நாவலனே.

இப்பிரபந்தஞ் செய்தார் மாணாக்கருள் ஒருவரும் கோயமுத்தூர் லண்டன் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய தேவம்பாடி சு. **இராமசாமிமுதலியார்** இயற்றியது.

கார்பூத்த சோலைத்தண் காஞ்சிவாய்ப் பேரைக் கவின்பதியிற்
பேர்பூத்த பச்சைக் கொடியோ டமர்ந்த பிரான்கழலிற்
சீர்பூத்த வண்மைநல் லந்தாதி மாலை தெரிந்தணிந்தான்
நார்பூத்த வென்னெஞ் சிருக்குஞ் சபாபதி நாவலனே.

போளன்பட்டி கருணீகரும் மகா-ா-ா-ஸ்ரீ சந்திரசேகரம் பிள்ளையவர்கள் மாணாக்கரும் ஆகிய மகா-ா-ஸ்ரீ **ஆறுமுகம் பிள்ளையவர்கள்** இயற்றியது.

போற்றுஞ் சிதம்பரப் பூசுரர் மேலைச் சிதம்பரமென் [ன்
றேற்றுந்தென் பேரைப் பெருமானைக் கன்பினந் தாதிசொற்
சாற்றும் புலவர் செவிக்கமு தாகத் தமிழ்க்குடந்தை
தோற்றுஞ் சபாபதி நாவலனாகிய தூயவனே.

இப்பிரபந்தஞ் செய்தார் மாணாக்கருள் ஒருவராகிய பள்ளபாளையம் **வையாபுரிப்பிள்ளை** இயற்றியது.

பாளையந் தாதிகழ் மாவலி யென்று பகர்ந்து பெறுஞ்
சீளையந் தாதியல் கொண்மேனி யன்பணி தேவன்பா
நீளையந் தாதியல் கொன்றையைச் சூடி நிருமலற்குப்
பேளையந் தாதி புனைந்தான் சபாபதிப் பேரவனே.

## அரங்கேற்றுவித்தவர் சிறப்பு.

---

கோயமுத்தூர் இந்துக்காலேஜ் உதவித் தமிழ்ப்பண்டிதரும் பவானி பாலபாரதி மகா-ா-ா-ஸ்ரீ முத்துச்சாமி அய்யரவர்கள் மருகரும், மாணாக்கருமாகிய பிச்சாண்டார்பாளையம் மகா-ா-ா-ஸ்ரீ **வெங்கடரமணய்யரவர்கள்** இயற்றியது.

## பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கொங்கிற் காஞ்சி வாய்ப்பேரூர்க் குலவு பட்டிப் பெருமான்மேற்
குடந்தைக் கவிஞன் சபாபதிமால் கூறுந் திரிபந் தாதிதனைத்
துங்கக் கலியை யாயிரத்தைத் தொடர்ந்த வருடம் பராபவத்திற்
றூய கடக நாலேழிற் றுலங்கு ரவிநாள் கிருத்திகையில்
எங்கும் பரவ வரங்கேற்றி, யெழுதா வெழுத்தி லியைவித்தான்
எழிலார் சோலை வெண் கூவலென்னும் பதியி லிசையுடனே
தங்கும் வேளாண் குடிமரபிற் றருகை யுறுசின் னப்பவேள்
தவமாம் வெள்ளி யங்கிரிப்பேர் சார்ந்த சுகுண தராபதியே.

## ஆக்கியோன் பெயர்.

சந்தா தியமலி தண்டலைப் பேரைத் தனிமுதல்வன்
முந்தா தியண்ண றிருத்தாளி னுவலர் முற்றுவப்ப
நந்தா தியலணி மன்னுங் கலித்துறை நற்கவியால்
அந்தாதி யன்பிற் புனைந்தான் சபாபதி *யாரியனே.

---

*புலவன்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ மேலைச்சிதம்பரமாகிய திருப்பேரூர்க் கலித்துறை யந்தாதி.

## விநாயகர் காப்பு.

*நீரா ரணிதண் மதிசூடு பேரையி னின்மலர்மேற்*
*சீரா ரணிதமி ழந்தாதி பாடுந் திறந்தருமாற்*
*பாரா ரணிதவர் முன்னுவ முற்றும் படியருளுந்*
*தாரா ரணிதனிப் பட்டி விநாயகன் றாண்மலரே.*

**(இதன் பொருள்)** அணி பாரார் தவர் = அழகிய பூமியிலுள்ள மாந்தர்களும், தவத்தையுடைய முனிவர்களும், முன்னுவ = நினைப்பனவாகிய பொருள்கள் யாவும், முற்றும்படி = கைகூடும் வண்ணம், அருளும் = கிருபை செய்கின்ற, தனி பட்டிவிநாயகன் = ஒப்பில்லாத ஸ்ரீ பட்டி விநாயகரது, ஆர் தார் அணி = ஒளிபொருந்திய கிண்கிணிமாலை யணிந்த, மலர்தாள் = செந்தாமரை மலர்போலுந் திருவடிகள், நீர் = கங்கையையும், ஆர் அணி = ஆத்திமாலையையும், தண் மதி = குளிர்ச்சி பொருந்திய சந்திரனையும், சூடு = (திருமுடியிற்) சூடியருளிய, பேரையின் நின்மலர் மேல் = திருப்பேரூரிலெழுந்தருளிய களங்கமில்லாராகிய ஸ்ரீ பட்டிநாயகரைக் குறித்து, சீர் ஆர் = சிறப்புப்பொருந்திய, அணிதமிழ் = அலங்கார விலக்கணங்களையுடைய தமிழ்ச் சொற்கள் பொருந்திய செய்யுள்களால், அந்தாதி = அந்தாதியென்னும் பிரபந்தத்தை, பாடும் திறம் தரும் = பாடுகின்ற வன்மையை எனக்குங்கொடுக்கும். என்றவாறு.

ஆல் ஏ—அசைகள்; தாரார், தாண்மலர்—இத்தொடர்கள் முன் பின்னாக மாற்றப்பட்டன; முன்னுவ—பலவின்பால் வினையாலணையும் பெயர்; எனக்கு என்பதும், இறந்தது தழுவிய எச்சவும்மையும் எஞ்சிநின்றன.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,

நின்மலர்—வடமொழி, நிர்—எதிர்மறை உபசர்க்கம்; சூடு—வினைத்தொகை. மேல்—§'யாதனுருபில்' என்ற விதியால் வந்த இரண்டாம் வேற்றுமை மயக்கம்; நின்மலரது விடயமாக வெனப்பொருள்கொண்டு ஆறாம்வேற்றுமை மயக்கமெனினும் அமையும்; தமிழ்—இனிமை, அதனையுடைய பாஷைக்காய்ப் பின்னர் அதனாலாகிய செய்யுளை யுணர்த்தலால் இருமடியாகுபெயர்; பேரை—பேரூர் என்பதன் மரூஉ. ஆற்றூர்—ஆறை என்றாற்போல. முதல் வினையை *'தாள்தரும்' எனச் சினைவினையாகக் கூறியது உபசாரம்; 'தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான் றருமொருவாரணத்தின் றாள்கள்' உணர்வோர் சிந்தைத் திருகோட்டும், என்றாற்போல. பேரூர் நின்மலர் மேலந்தாதி பாடுந்திறந்தருமென வினை முடிபு செய்க; பாடுந்திறம்—செய்யுள் செய்யும் வன்மை; பட்டி—தொழு அஃதாவது பசு முதலியன வசிக்குமிடம்; ஈண்டு காமதேனுவென்னுந் தெய்வப்பசு பட்டியிட்டு வழிபடலால் இத்தலத்திற்குப் பட்டி புரி யெனவும், சிவபெருமானுக்குப் பட்டிநாதரெனவும், பெயர் வந்தன.

## இதற்குப் பிரமாணம்:—

‡"காமதேனுபுரமென்ன விந்நகரி காமமல்கு பெயர் கொள்ளவு"
நீமனுதரவின் வைகலானரசி னீடுசூழ விதுபட்டியென்
னுமமேவவு நமக்குமப்பெயர் முனட்டி நாதனெனவோதவு
மேமமாருலக முற்றுமின்பமுற வீண்டுனக்குவரமாக்கினும்.

இச்செய்யுளின் உபலட்சணத்தால் விநாயகருக்குப் பட்டி விநாயகர் எனவும் கொள்ளப்பட்டது.

மலரெனப் பொதுப்படக் கூறினும் †பூவிற்குத் தாமரையே எனவும், $பொறிவாழ் பூவே எனவும் ஆன்றோர் கூறினமையின் ஈண்டு திருவடிக்கு உவமையாகிய செந்தாமரைமலர் கொள்ளப்பட்டது. நினைப்பனவாகிய பொருள்களாவன இம்மையில் அறம், பொருள் இன்பங்களும், மறுமையில் வீடும். தம்மை வழிபடுவார் நினைத்தவை முடித்தற்கும், வழிபடார் நினைத்தவை யழித்தற்கும் விநாயகருக்குச் சிவபெருமா னருளிய வரம் எனபதற்குப்பிரமாணம்:—

---

§ நன்னூல் பெயரியல் சூத்திரம் 60.
* சிவஞான சித்தியார், சுபக்கம், விநாயகர் வணக்கம்.
‡ பேரூர்ப் புராணம், குழகன் குளப்புச் சுவடுற்ற படலம் 103.
$ திருவள்ளுவமாலை, கவிசாகரப் பெருமாள் 36.
† நால்வர் நான்மணிமாலை, சிவப்பிரகாச சுவாமிகள் 40.

¶ "என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதன்"
முன்னரே யுனதுதாண் முடியுறப் பணிவரேல்
அன்னார்தஞ் சிந்தைபோ லாக்குதி யலதுனை
யுன்னலார் செய்கையை யூறுசெய் திடுதிநீ.

விநாயகர் நாயகருக்கெல்லாந் தலைமை யானவரென்பதற்குப் பிரமாணம் :-

சேயநன் மலர்மிசைத் திசைமுகன் மான்முதல்
ஆயபண் ணவர்தமக் காருயிர்த் தொகையினுக்
கேயபல் கணவருக் கெத்திறத் தோர்க்குநீ
நாயகம் புரிதியா னல்லருட் டன்மையால்.

இவ்வாசிரியர் மூத்தபிள்ளையாரது திருவடியைக் கிண்கிணிமாலையணிந்த தாளெனப் பிள்ளைப்பணியால் விசேடித்ததாற் றமது உபாசனு மூர்த்தியாகிய பால கணபதி வணக்கங் கூறினுரெனவுணர்க. (1)

## நூல்.

திருவலங் கார முலைசேர் மருமன் றிசைமுகன்றேர்
அருவலங் கார முறும்பண்ணை யாரணி யாதிபுரி
மருவலங் கார முறுங்குழற் பச்சை மயிற்குவகை
தருவலங் கார முடியீச வெற்குன் சரண்சரணே.

(இதன் பொருள்) திரு அலங்காரம் முலை சேர் மருமன் = இலக்குமி தேவியினுடைய அழகு பொருந்திய தனங்களைச்சேரும் மார்பையுடைய திருமாலும், திசைமுகன் = நான்கு முகங்களையுடைய பிரமதேவரும், தேர் அரும் = (வராகவடிவாகியும் அன்னவடிவாகியும் திருவடியையும் திருமுடியையும்) தேடி அறிவதற்கு முடியாத, அலங்கு ஆரம் உறும் = விளங்குகின்ற முத்துக்கள் பொருந்திய, பண்ணை ஆர் = வயல்கள் சூழ்ந்த, அணி = அழகினையுடைய, ஆதிபுரி = ஆதிபுரியாகிய திருப்பேரூரின்கண் எழுந்தருளிய, அல் அம் கார் அம் உறும் = இருண்ட நீருண்ட மேகம்போலும் அழகுமிக்க, மரு குழல் = மணம் பொருந்திய கூந்தலையுடைய, பச்சை மயில் கு = பச்சை நாயகியாகிய மயில்போலும் சாயலையுடைய உமாதேவியாருக்கு, உவகை தரு = (அக)மகிழ்ச்சியைக் கொடுத்தருள்கின்ற, அலங்கு ஆர் அம் = அசைகின்ற ஆத்திமாலையும், கங்கையுமணிந்த, முடி ஈச = திருமுடியையுடைய

¶ கந்தபுராணம் கயமுகனுற்பத்தி படலம் 152, 153.

பட்டி நாயகரே! எற்கு = எனக்கு, உன் சரண் சரண் = தேவரீருடைய திருவடிகளே புகலிடம் (தஞ்சம்) (எ-று.)

மயில்—உவமையாகுபெயர், *'குவ்வினவ்வரு' மென்ற அகரச்சாரியை தொக்கு வந்தது விகாரம். திருமாலும் பிரமனும் திருவடியையும் முடியையும் தேடியறிந்தில ரென்பதற்குப் பிரமாணம் :—

§ கீண்டுநில னிருவிசும்பிற் கிளர்ந்துமடி முடியுணரே
மீண்டுமவன் றன்னருளான் மிடல்பெற்று வந்தனமா
லீண்டுசிவன் றனைவழிபட் டிருவருமன் னவன்றேற்றங்
காண்டுமெனா யானுரைப்பக் கண்ணனுமங் கதற்கிசைந்தான்.

பிரம சிருஷ்டிக்குமுன் சிவபெருமானால் முதலிற் படைக்கப்பட்டதாதலின் ஆதிபுரி யெனவாயிற்று. இதற்குப்பிரமாணம்

†வண்டுமுரலத் தேன்றுளிக்கும் வனசப்பொகுட்டு நான்முகத்தோய்
பண்டு பூர்வ பரார்த்தத்துப் படைக்கு மாற்றல் பெறுபாக்குத்
தொண்டுபுரிந் தெம்மடிப் பூசை சூழ்ந்தாயந் நாளாதிநகர்
அண்டர் வியப்ப நாந்தாமே யாக்கி நடனம் புரிந்தேமால். (1)

சாதந் தருநிழல் வாழ்வீரென் றற்பரைச் சார்ந்தவர்மேல்
இரதந் தருகவி பற்பல பாடி யிரந்துழல்வீர்
பரதந் தருக்கிற்செய் பேரூர்ப் பிரான்முன் பணிந்துதிரு
அரதந் தருளெனப் பாடுநிர் வீடு மடைவதுவே.

(இதன் பொருள்) அற்பரை சார்ந்து = கீழ்மக்களை யடைந்து, இரதம் தரு கவி பல்பல = இன்பச்சுவையைக் கொடுக்கின்ற செய்யுள்கள் மிகுதியாக, தருநிழல் வாழ்வீர் என்று அவர் மேல்பாடி = கற்பக முதலிய பஞ்சதருக்களின் நிழலில் வாழ்கின்ற இந்திரன் போல்வீரே! என்று அவரைக்குறித்து (புகழ்ந்து) பாடி, இரந்து உழல்வீர் = அவரிடத்துப் (பொருளை) வேண்டி வருந்துகின்ற புலவர்களே! பரதம் தருக்கில் செய் = திரு நிருத்தத்தைக் களிப்புடன் (அரசம்பலத்திற்) செய்கின்ற, பேரூர் பிரான்முன் பணிந்து = திருப்பேரூரிலெழுந்தருளிய பட்டிநாயகரது சந்நிதியில் வணங்கி, திரு = செல்வங்களை, அர = அரனே, தந்து அருள் என = கொடுத்தருள்வீராக

* நன்னூல் உருபு புணரியல் சூத்திரம் 8.
§ கந்த புராணம் அடிமுடிதேடுபடலம் 85.
† பேரூர்ப் புராணம் தல விசேடப்படலம் 6.

என்று, பாடுதிர்=பாடுங்கள், வீடும் அடைவது=(அச்செல்வங்களையன்றி) மோக்ஷமாகிய செல்வத்தையும் பெறுவது, சரதம்=மெய்மை. (எ-று.)

பஞ்சதருக்களாவன—சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் என இவை; சரதம், இரதம், பாதம், அரன், தரு இவை வடசொற்கள். வீடும்—உம், இறந்தது தழுவிய எச்சம்; இச்செய்யுள் இறுதியும் முதலும் இயைந்து நிற்றலாற் பூட்டுவிற் பொருள்கோள். (2)

வேத வனத்தனை யாறன்றென் கூடல் விமலன்மெய்யிற்
போத வனத்தனை யாள்பவன் ஞான புரப்புனிதன்
மாத வனத்தனை மாமலர்ப் பாத மனத்துள்வைத்தேம்
ஆத வனத்தனை யன்றூர்த ருக்கினி யஞ்சிலமே.

(இதன் பொருள்) வேதம் வனத்தன்=திருமறைக் காட்டையுடையவரும், ஐயாறன்=திருவையாற்றையுடையவரும், தென்கூடல் விமலன்=தெற்கின்கண்ணுள்ளதாகிய (நான்மாடக்கூடலென்னும் பெயரையுடைய) மதுரையை இடமாக உடைய மலரகிதரும், மெய்யில்=தமது சரீரத்தில், போதவன் நத்தனை ஆள்பவன்=பிரமனையும் விட்டுணுவையும் (வைத்துக்) காப்பவரும், ஞானபுரம் புனிதன்=ஞானபுரமென்னும் பெயரையுடைய திருப்பேரூரிலெழுந்தருளிய பரிசுத்தமானவரும், மாது அவன்=பார்வதி தேவியை வாம பாகத்திலுடையவரும், அத்தன்=எவ்வுயிருக்கும் தந்தையானவருமாகிய, ஐ=ஸ்ரீ பட்டிநாயகரது, மா மலர் பாதம்=சிறந்த திருவடித்தாமரைகளை, மனத்துள் வைத்தேம்=(எங்களுடைய) மனதின்கண் தங்கும்படி இருத்தினோம், (ஆதலால்) ஆதவன=சூரியனுடைய, அ தனையன்=அந்தப் புத்திரனாகிய யமனுடைய, தூதர்க்கு=தூதுவர்களுக்கு, இனி அஞ்சிலம்=மேலே பயப்படமாட்டோம். (எ-று)

சிவபெருமான் பிரம விட்டுணுக்களைத் தமது திருமேனியில் உடையர் என்பதற்குப் பிரமாணம்.

* "அடுப்பார்க் கருளு மொருதாளு மம்பொற் கமல விழிமூன்றும்
படப்பாம் பணிந்த புயநான்குஞ் சூலப் படையு மெழில்வயங்க
விடப்பா லரியை வலத்தயனை யெழுநாற் கோடி யுருத்திரரை
நடுப்பாற் றோற்றி யையைந்து வடிவு முடனு நலம்பிறக்கி."

* காஞ்சிப்புராணம் சிவபுண்ணியப்படலம் 8.

திருமறைக்காடு, திருவையாறு—சோழநாட்டுள்ள, நூற்றிருபத்தேழு தலங்களுட் சேர்ந்தவை ; மதுரை—பாண்டிநாட்டிலுள்ள திருப்பதிகள் பதிறைன்கினுள் ஒன்று. (3)

**செவிலித்தாய் தலைவியின் தன்மையைக் கூறித் தலைவனை வேண்டல்.**

அஞ்சு வனக்கணை யாற்குந்தென் றற்கு மலைகடற்கு
நஞ்சு வனக்கலை சோர்ந்தாட்குக் கொன்றைநற் றாரருள்வாய்
பிஞ்சு வனக்கலைச் செஞ்சடைப் பேரூர்ப் பெருமபர
மஞ்சு வனக்கருங் கூந்தற் கிடந்தந்த மாமணியே.

(**இதன் பொருள்**) பிஞ்சுவனம்கலை = இளமையாகிய அழகிய கலைகளையுடைய சந்திரனையணிந்த, செம் சடை = சிவந்த சடையையுடைய, பேரூர் பெரும = திருப்பேரூரிலெழுந்தருளிய பெருமையிற் சிறந்தவரே! பர = மேலான கடவுளே! வனம் மஞ்சுகரு கூந்தற்கு = நீருண்ட மேகம் போலுங்கரிய கூந்தலையுடைய பார்வதி தேவியாருக்கு, இடம் தந்த மாமணியே = வாமபாகத்தைக் கொடுத்தருளிய பெருமையுள்ள மாணிக்கம்போன்ற ஸ்ரீ பட்டிநாயகரே, வனம் அஞ்சு கணையாற்கும் = சோலையிலுள்ள தாமரை முதலிய பஞ்சபாணங்களையுடைய மன்மதனுக்கும், தென்றற்கும் = தென்றற்காற்றுக்கும், அலைகடற்கும் = அலைகளையுடைய சமுத்திரத்துக்கும், நஞ்சு, (பொறுமல்) வருந்தி, வன்னம் கலை சோர்ந்தாள்கு = நிறமுள்ள ஆடையிழந்த எங்கள் பெண்ணுக்கு, கொன்றை நல்தார் அருள்வாய் = (தேவரீருடைய திருவடையாளமாகிய) கொன்றைமலராலாகிய அழகிய மாலையைக் கொடுத்தருள்வீராக. (எ-று.)

வனம்—இடைக்குறை; கொன்றை—பொருளாகுபெயர்; மணி—உவமையாகுபெயர்; அஞ்சு, நஞ்சு—முழுப்போலிகள் ; கருங்கூந்தல்—பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

தோத்திர ரூபமாகிய பிரபந்தங்களில் அகப்பொருட்டுறைச் செய்யுட்களை இடை இடையே கூறுதல் புலவர்கட்கியல்பாமென்பதை ஆன்றோர் இலக்கியங்கள் கொண்டுணர்க. இஃது ஐம்பொறிகளின் வழியே மனம் புலன்களிற் சென்று வருந்துவதும், அளவில்லாத பிறவியினால் வருந்துவதும், ஒரு வழி நில்லாமையுமாகிய துன்பங்களை யொழித்து மெய்யன்பர்கட்கருளியனபோலக் கொன்றைமாலை முதலியவற்றையருளி வீட்டின்பத்தைத் தந்தருளுவீராக என்பது இதனுள்ளுறைப் பொருள் கொள்க. (4)

மாதவ னஞ்ச னமரர்கண் மாய வருங்கொடிய
வோதவ னஞ்சமுண் டோன்மலைப் பூவை யொளிர்புரத்தான்
சூதவ னஞ்சமை பேரூ ரிறைவனைத் தோத்திரஞ்செய்
யாதவ னஞ்ச நமன்வருங் காலென் னறைகுவனே.

(இதன் பொருள்) மாதவன் = திருமகள் நாயகனாகிய விட்டுணுவும், அஞ்சன் = அன்னவாகனத்தையுடைய பிரமனும், அமரர்கள் = இந்திரன் முதலிய தேவர்களும், மாய = இறந்தொழியும் வண்ணம், வரு = வந்த, கொடிய = கொடுமையுள்ள, ஓதம் வல் நஞ்சம் உண்டோன் = (திருப்பாற்) கடலிற் றோன்றிய வன்மையாகிய விடத்தை யுண்டருளிய வரும், மலை பூவை = (இமய) மலையிற் றிருவவதாரஞ் செய்த நாகணவாய்ப் பறவை போலும் (இனிய மொழியுள்ள) பார்வதி தேவியார், ஒளிர்புரத்தான் = விளங்குந்திருமேனி யுடையவரும், சூதம் வனம் சமை = மாமரச்சோலைகள் சமைந்த, பேரூர் இறைவனை = திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகனை, தோத்திரம் செய்யாதவன் = துதி செய்யாத ஒருவன், அஞ்ச = (தான்) பயமடையுமாறு, நமன் வருங்கால் = இயமன் வரும்போது, என் அறைகுவன் = யாது கூறுவான்? (ஒன்றுஞ்சொல்ல முடியாதென்றபடி). (எ-று.)

ஏ—எதிர்மறை, பூவை—உவமையாகுபெயர், சமைதல்=உண்டாதல். (5)

அறைகா னனல்புன லுற்றெனற் காசி யடைந்து கங்கைத்
துறைகானத் தண்புன லாடிலென் றோகையர் தொக்குசதி
முறைகா னகுசிலம் பார்ப்பாடும் பேரூர் முதல்வனரன்
மறைகான நல்லிசை யான்சே வடியை மருவிலரே.

(இதன் பொருள்) தோகையர் தொக்கு = மயில் போன்ற சாயலையுடைய பெண்கள் (ஒன்றாகக்)கூடி, சதி முறை = தாள வொத்தின்படி, கால் நகு சிலம்பு ஆர்ப்ப = பாதங்களில் (தரிக்கப்பட்டு) விளங்குகின்ற சிலம்புகள் ஒலிக்கும்படி, ஆடும் = நடனஞ்செய்கின்ற, பேரூர் முதல்வன் அரன் = திருப்பேரூரிலெழுந்தருளிய தலைவரும் எப்பொருட்கு மிறைவரும், மறைகான நல் இசையான் = வேதமாகிய நல்ல திருப்பாடலையுடையவருமாகிய ஸ்ரீ பட்டிநாயகருடைய, சே அடியை மருவிலர் = சிவந்த திருவடியை அடையாதவர், அறை = மலைக்குகைகளிலும், கானம் = காடுகளிலும் அனலி = நெருப்பிலும், புனல் = நீரிலும், உற்று என் = தவஞ்செய்து பயனென்னை? நல்ல காசி அடைந்து = நல்ல காசி ஸ்தலத்தைச்சேர்ந்து, கங்கை துறை = கங்கை யாற்றில், கானம் தண் புனல் = வாசனை பொருந்திய

குளிர்ந்த நீரில், ஆடில் என் = முழுகினும் பயனென்னை? (ஒன்றுமில்லை) (எ-று.)

கங்கைத்துறை—இருபெயரொட்டுப் பண்புத்தொகை; ஆர்ப்ப— அகரந்தொகுத்தல், இருந்தயனும் என்பதுபோல. (6)

மருவரங் கொன்றைச் சடையார் நடம்புரி வண்டலங்கள்
திருவரங் கொள்வட கான்றில்லை கூடல் சிறந்த நெல்லை
பெருவரங் கொண்டிருக் குற்றாலம் பேர்முனி யாய யன்மால்
இருவரங் கொன்றிப் பணிசெய்நற் சிற்சபை யின்னவையே.

(இதன் பொருள்) மருவரம் கொன்றை சடையார் = மணம் பொருந்திய மேன்மையுள்ள கொன்றைப் பூ மாலையணிந்த சிவபெருமான், நடம் புரிவண் தலங்கள் = திருநடனஞ்செய்கின்ற வளப்பமுள்ள திருப்பதிகளாவன, திருவரம் கொள் = இலக்குமி (வசிப்பதற்கு விருப்பங்கொண்ட) வடம் கான் = திருவாலங்காடும், தில்லை = சிதம்பரமும், கூடல் = மதுரையும், சிறந்த நெல்லை = உயர்ந்த திருநெல்வேலியும், பெரு ஒள் அரங்கு திரு குற்றாலம் = பெருமையுள்ள ஒளிபொருந்திய அன்ன சத்திரங்களையுடைய திருக்குற்றாலமும், அயன்மால் இருவரும் = பிரமவிட்டுணுவாகிய இருவரும், முனிபேர் ஆய் அங்கு ஒன்றி = பட்டிமுனி கோமுனி என்னும் பெயரை உடையவராகி அவ்விடஞ்சேர்ந்து, பணிசெய் நல் சிற்சபை = வணங்குதலைச்செய்கின்ற நல்ல சிற்சபை என்னும் பெயரையுடைய திருப்பேரூருமாகிய, இன்னவை = இத்தலங்களாம். (எ-று.)

வரு அம் கொன்றை யெனப்பிரித்து, பொருந்திய அழகிய கொன்றை எனினுமாம்.

சிற்சபை—ஞானசபை, திருவாலங்காட்டில்—அரதன சபையிலும், சிதம்பரத்தில் — கனகசபையிலும், திருக்கூடலில் — வெள்ளியம்பலத்திலும் திருநெல்வேலியில்—தாமிரசபையிலும், திருக்குற்றாலத்தில்—சித்திரசபையிலுஞ் சிவபெருமான் திருநடனஞ்செய்தருளின ரென்பது. † "ஐவகை, மன்றுதொறுடிய வள்ளல்" என்றதனாலறிக. (7)

இன்னந் திகிரியி னிற்சுழல் வன்பிறப் பெய்துகிலீர்
மன்னந் திகரி யிரும்படை மான்முத லோர்வணங்கப்
பொன்னந் திகரி யிருந்தருள் பூரண புங்கவன்வாழ்
அன்னந் திகரிபிற் சேர்தடப் பேரூ ரடைந்திடினே.

---

† கந்தபுராணம், அவையடக்கம் 16.

(இ-ள்.) (மாந்தர்களே!) மன் அம் திகிரி = நிலைபெற்ற அழகிய சக்கரமாகிய, இருபடை = பெரிய ஆயுதத்தையுடைய, மால் முதலோர் = விட்டுணு முதலிய தேவர்கள், வணங்க = (தம்மைத்) தொழும்படி, அம் பொன் திகிரி = மேகந் தவழ்கின்ற வெள்ளி மலையின்கண், இருந்து அருள் = வீற்றிருந்து (யாவருக்கும்) அனுக்கிரகஞ்செய்கின்ற, பூரணம் புங்கவன் = (எங்கும் நிறைந்த பரிசுத்தராகிய ஸ்ரீ பட்டிநாயகரது, வால் அன்னம் = வெண்மையாகிய அன்னப்பறவைகள், திகிரி = வட்டமான, இல்சேர் = தத்தம் வீடுபோலடைகின்ற, தடம் = தடாகங்களையுடைய, பேரூர் அடைந்திடின் = திருப்பேரூரைச் சேர்வீர்களாயின், இன்னம் = இன்னமும் (மேலும்), திகிரியில் = (குலாலனது) சக்கரம்போல, சுழல் = (மாறிச்) சுற்றிவருகின்ற, வன்பிறப்பு = கடினமாகிய பிறவித்துன்பத்தை, எய்துகிலீர் = அடையமாட்டீர்கள். (எ-று.)

பொன் — உலோகங்களுக்குப் பொதுவாகிய பெயர், இருந்து என்ற குறிப்பால் ஈண்டு வெண் பொன்னுக் காயிற்று. (8)

அடையா தவர்புர நீறாக் கியநகை யாளவற
விடையா தவர்பணி பேரையின் மேவு விமலவிசும்
பிடையா தவநந்த வாண்டாய்நின் சேவடி யென்னிதயக்
கடையா தவற்கண்ட தாமரை போன்மலர் காலமென்றே.

(இ-ள்.) அடையாதவர் புரம் = பகைவர்களது முப்புரங்களையும், நீறு ஆக்கிய = சாம்பலாகச்செய்த, நகை ஆள = புன் சிரிப்பை உடையவரே! அறம் விடையா = தருமவிடபத்தையுடையவரே! தவர் பணி = தவத்தையுடைய முனிவர்கள் வணங்குகின்ற, பேரையின் மேவு விமல = திருப்பேரூரின்கண் எழுந்தருளிய களங்கமற்றவரே! விசும்பு இடை ஆ = சுவர்க்கத்திலுள்ள காமதேனுவானது, தவநந்த = (தவத்தால்) மிகவும் வருந்த, ஆண்டாய் = (அதற்குக் கருவூர் என்னும் வஞ்சி க்ஷேத்திரத்தில் சிருஷ்டித்தொழிலைக் கொடுப்போமென்று சொல்லியருளித் திருநடன தெரிசனம் காண்பித்துக்) காத்தருளிய ஸ்ரீ பட்டிநாயகரே! நின் சேவடி = தேவரீருடைய செம்மையாகிய திருவடிகள், ஆதவன் கண்ட தாமரைபோல் = சூரியனைக்கண்ட (செந்) தாமரை (மலர்) போல, என் இதயம் கடை = என்னுடைய மனத்தின்கண், மலர் காலம் என்று = தோன்றுஞ் சமயம் எப்பொழுது? (அருள்செய்வீராக.) (எ-று.)

காமதேனுக்கு நடன தரிசனங் கொடுத்ததற்குப் பிரமாணம் :—

வன்னிநீள்வன மிருத்தலானஃது வஞ்சியென்று பெயர் மேவிய
தன்மையாகக நடுத்துநம்முருவினைதுபூசைபுரி கிற்றியாங்
குன்னவாவினை நிரப்புதுங்கடிதி னென்றுரைத்தருளி யும்பரார்
துன்னுசூழலிடை யாரணங்கடுதி செய்யமாநடன மாடினான்.

(9)

காலந் தகாகடற் றோன்றிவெங் காளங் கடுத்துவரு
காலந் தகாவுண வென்னா தருந்திய கண்டவறு
காலந் தகார்வண் டறைபோதிக் கானத்த கண்ணெனுளக்
காலந் தகாரங் கெடவந் தருளென்றன் கண்ணெதிரே.

(இ-ள்.) கால் அந்தகா = (மார்க்கண்டேயர் பொருட்டு) இயமனுக்கு இயமனாகி உதைத்தவரே! கடல் தோன்றி = (திருப்பாற்) கடலிலுண்டாகி, வெம் காளம் = கொடிய விடமானது, கடுத்து வரு காலம் = வெப்பங்கொண்டுவருகின்ற பொழுது, தகா உணவு என்னாது = பொருந்தாத போசனமென்று கருதாமல், அருந்திய கண்ட = உண்டருளிய திருமிடற்றையுடையவரே! அறு கால் அந்த கார் வண்டு = ஆறு கால்களையுடைய அந்தக்கருமையாகிய வண்டுகள், அறை = இசைபாடுகின்ற, போதிக்கான் அத்த = (போதிக்கான் என்னும்) பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகரே! கண் என் உள்ளக்கால் = தியானிக்கின்ற எனது மனத்தினிடத்து, அந்தகாரம் = (உண்டாகிய அஞ்ஞானமாகிய) இருள், கெட = அழியும்படி என் கண் எதிர் வந்து அருள் = எனது கண்களுக்கு எதிராக (எழுந்தருளி) வந்து அனுக்கிரகஞ் செய் தருளுவீராக. (எ-று.)

அழகினையுடைய கார் வண்டு எனினுமாம். *அந்த கார்வண்டு—எதுகை நோக்கி ககரம் இயல்பாயிற்று. போதி—அரசு. (10)

கண்டனந் தந்த முலைமலை வேலொக்குங் காரிகையார்க்
கொண்டனந் தந்தன் னவர்பணி யாற்ற லொழித்துலகீர்
வண்டனந் தந்தகு பண்பாடு போதி வனத்திறைவன்
சண்டனந் தந்த மகலாத பாதந் தலைக்கொண்மினே.

(இ-ள்.) உலகீர் = மானிடர்களே! கண் தனம் தந்தம் = கண்களும் தனங்களும் பற்களும், வேல் மலை முல்லை = வேலையும் மலையையும் முல்லையரும்பையும், ஒக்கும் = கொடுமையாலும் பருமையாலும் வெண்மை

* குழகன் குளப்புச் சுவடுற்றபடலம் 108.

3952



யாலும் ஒத்து விளங்குகின்ற, காரிகை யார்க்கு = பெண்களுக்கு, ஒள் தனம் தந்து = ஒளியுள்ள பொருள்களைக் கொடுத்து, அன்னவர் பணி ஆற்றல் = அப்பெண்களது (குற்) றேவல்களைச் செய்தலை, ஒழித்து = நீக்கி, வண்டு = வண்டுகள், அனந்தம் = அளவில்லாத, தகு = பெருமையுள்ள, பண்பாடும் = இசைபாடுகின்ற, போதி வனத்து இறைவன் = போதிக்கானமென்னுந் திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகருடைய, சண்டன் நந்த = இயமன் கெடுதற்குக்காரணமாகிய, அந்தம் அகலாத பாதம் = அழகு நீங்காத திருவடிகளை, தலைகொண்மின் = (உங்கள்) சிரசின் மேல் சூடிக்கொள்ளுங்கள். (எ-று.) (11)

முலை—இடைக்குறை.

## செவிலித்தாயிரங்கல்.

தலையார மாலைப் பிறவா நெறியினர் தண்கயிலை
மலையார மாலை நிறத்தார் பவனிவரக் கண்டெம்மான்
கலையார மாலை வளையாழி மற்றுங் கழன்றிடமென்
முலையார மாலையு நீங்கநின் றாள்பெரு மோகங்கொண்டே.

(இ-ள்.) தலையார் = (எத்தேவர்கட்கும்) முதன்மையானவரும், அ மால் ஐ பிறவாநெறியினர் = அந்தப் பெருமையுள்ள அழகிய பிறவாநெறியென்னுந் திருப்பேரூரிலெழுந்தருளிய வரும், தண் கயிலை மலையார் = குளிர்ந்த கயிலாய மலையை (வசிக்கும்) இடமாக உடையவரும், அம் மாலை நிறத்தார் = அழகிய அந்திக் காலத்துச் செவ்வானம் போலுந் திருமேனியையுடைய வருமாகிய ஸ்ரீ பட்டி நாயகர், பவனி வர = (வீதியில்) திருவுலா வராநிற்க, எம்மான் = எங்கள் மான்போலும் நோக்கினையுடைய பெண், கண்டு = தரிசித்து, கலை = ஆடையும், ஆரம் = பதக்கமும், மாலை வளை = வரிசையுடைய வளைகளும், ஆழி = மோதிரங்களும், மற்றும் = வேறு சில ஆபரணங்களும், கழன்றிட = நீங்கவும், மெல் முலை ஆரம் மாலையும் நீங்க = மெல்லிய தனங்களிலணிந்த முத்துமாலையும் (மலர்) மாலைகளையும் தன்னினின்று நீங்கும் வண்ணம், பெருமோகம் கொண்டு = (அப்பெருமான் மீது) மிக்க காதலடைந்து, நின்றாள் = (மெய்மறந்து) நின்றாள். இஃதென்னவியப்பு என்றபடி. (எ-று.) (12)

மோதலை வாரியி னிற்கன் மிதப்பிக்கு மூங்கைதனை
யேதலை வாயிசைப் பிக்குங் கராவுண்ட வெச்சந்தரும்
மாதலை வார்குழ லாவென்பு செய்யும்வன் மீகநகர்க்
காதலை வார்குழை யானடி யார்சொல் கவின்கவியே.

(இ-ள்.) வன்மீகநகர் = வன்மீகநகரென்னும் பெயரையுடைய திருப்பேரூரின் கண் ணெழுந்தருளிய, காது அலே=செவியின்கண் (இடப்பட்டு) அசைகின்ற, வார் = நேர்மையுள்ள, குழையான் = குண்டலத்தையுடைய ஸ்ரீ பட்டி நாயகரது, அடியார் =(மெய்த்) தொண்டர்கள், சொல் கவின் கவி = (தோத்திரரூபமாகப்) பாடியருளிய அழகிய (தேவாரதிருவாசகமாகிய) திருப்பாடல்கள், மோது அலே வாரியில் = (கரைகளில் வந்து) தாக்குகின்ற அலேகளையுடைய கடலில், கல்மிதப்பிக்கும் = (கருங்) கல்லே மிதக்குமாறு செய்விக்கும், மூங்கைதனே = ஊமைப்பெண்ணே, தலேவாய் = முதன்மையாகிய வாயினல், இசைப்பிக்கும் = பேசுமாறு செய்யும், கரா உண்ட = முதலேயுண்ட, எச்சம் தரும் = (பிராமணப்) பிள்ளேயைக் கொடுக்கும் என்பு = எலும்பை, மா = சிறந்த, தலேவார் குழலா =தலேயின்கண் நீண்ட கூந்தலேயுடைய பெண்ணுமாறு, செய்யும்=செய்யா நிற்கும். (எ-று.)

தலேவாய்—என்றது கடவுளது திருநாமங்களேயே பயின்று ஆன்மாவிற்கு வீடுபேற்றைத் தருதலால்.

ஏகாரம்—இசை நிறை.

மேருமலே புற்றுருவங்கொண்டு சிவலிங்கப்பெருமானுருவை மூடியிருத்தலால் வன்மீக நகரெனப்பட்டது. இதற்குப் பிரமாணம்.

* வண்ண நம்முருவமுற்றும் வன்மீக வுருவாய் மூடி
நண்ண லாலனைய பேரூர் வன்மீக நகரமென்றும்.

I. கருங்கல்லே மிதப்பித்தது :—

† "சொற்றுணே வேதியன் சோதி வானவன்
பொற்றுணேத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணேப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணே யாவது நமச்சி வாயவே."

என்னுந் திருநாவுக்கரசுநாயனர் திருவாக்கானும்.

II. ஊமைப்பெண்ணேப் பேசுவித்தது :—

§ "பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னே
யீசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானுன் சாழலோ."

என்னும் ஸ்ரீ மாணிக்கவாசகர திருவாக்கானும்.

* பேரூர்ப்புராணம் தலவிசேடப்படலம் 35.
† நமச்சிவாயத் திருப்பதிகம் 1.
§ திருவாசகம் திருச்சாழல் 1.

III. முதலையுண்ட பாலனை அழைத்தது :—

‡ உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியா
யரைக்கா டரவா வாதியு மந்தமு மாயினாய்
புரைக்கா டுசோலைப் புக்கொளி யூரவி நாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே.

என்னும் சுந்தரமூர்த்தி நாயனார் திருவாக்கானும்.

IV என்பைப் பெண்ணாக்கியது:—

$ மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தா
னொட்டிட்ட பண்பி னுருத்திர பல் கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

என்னும் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்கானு முணர்க. (13)

கவிகா வலரிட நால்வகைத் தானைக் கடல்பரவும்
புவிகா வலனெனச் செய்பட்டி நாதனைப் போற்றியென்றும்
அவிகா வலந்தணர் சூழ்குந்த கான மடைந்திடினுற்
பவிகா வலன்றொழிந் தேயடை வீர்நற் பரகதியே.

(இ-ள்.) கவி கா அலர் இட = குரங்கு சோலையிலுள்ள மலரைத் (திருமேனியிற்) போடா நிற்க, நால்வகை தானை கடல் பரவ = (அதற்கு) நான்குவிதமான சேனாசமுத்திரஞ் சூழுமாறு, புவி காவலன் என = பூமியிலுள்ளோர் (முசுகுந்தச் சக்கரவர்த்தி) என்று சொல்ல, செய் = செய்தருளிய, பட்டி நாதனை போற்றி = ஸ்ரீ பட்டி நாயகரைத் துதித்து, என்றும் = எக்காலமும், அவி கா வல் அந்தணர் = யாகவாகுதியைப் பாதுகாக்கின்ற வன்மையையுடைய வேதியர்கள், சூழ் = சூழ்கின்ற, குந்த கானம் = குந்த கானம் என்னும் பேரூரை, அடைந்திடின் = நீங்கள் சேர்வீர்களாயின், உற்பவி காவல் = பிறக்குஞ் சிறைச் சாலையை, அன்று = அப்பொழுதே, ஒழிந்து = நீங்கி, நல்பரகதி அடைவீர் = நல்ல முத்தியுலகிற் சேர்வீர்கள். (எ-று.)

செல்வர்தருதலால் குந்தகானம் என்னப்பட்டது. இதற்குப்பிரமாணம்.

* அற்கிய செல்வ நல்கலாற் குந்தகானமென்றும்.

---

‡ திருப்புக்கொளியூர் அவிநாசிப்பதிகம் 4
$ திருமயிலாப்பூர் பூம்பாவைத் திருப்பதிகம் 1.
* பேரூர்ப்புராணம் தலவிசேடப்படலம் 42.

ஏ—இரண்டில் முன்னது தேற்றம், பின்னது அசைநிலை; அன்று—அசை எனினுமாம்; பூமி—இடவாகுபெயர். (14)

பரசங் கரபர காலனைக் காய்ந்தப தாம்புயசீர்
அரசங் கரவென்று பேரைப்பெம் மானை யறைவதல்லால்
முரசங் கறங்கரி தன்பதம் வேத முதல்வன்பதம்
வரசங் கரிபத மும்பொரு ளாக மதிக்கிலமே.

(இ-ள்.) பேரை பெம்மானை = திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகரை, பரசு அம் கர = மழுவைத் திருக்கரத்தி லுடையவரே! பர = பரனே! காலனை காய்ந்த = இயமனை உதைத்த, பதம் அம்புய = பாத தாமரையை யுடையவரே! சீர் அர = புகழையுடைய எப்பொருட்கு மிறைவரே! சங்கர = (ஆன்மாக்களுக்குச்) சுகத்தைச் செய்பவரே! என்று அறைவது அலால் = என்பதாகச் சொல்லித்துதிப்பதே யல்லாமல், முரசம் கறங்கு அரி தன் பதம் = பேரிகைகள் முழங்குகின்ற இந்திரனது சுவர்க்க பதவியும், வேதம் முதல்வன் பதம் = வேதங்கட்குத் தலைவனாகிய பிரமனது சத்தியலோகபதவியும், வரம் சங்கு அரி பதம் = மேலாகிய சங்கையுடைய திருமாலது வைகுந்த பதவியும், பொருளாக = (ஓர்) பொருளாக, மதிக்கிலம் = மதிக்கமாட்டோம். (எ-று.) (15)

பெம்மான்—பெருமானென்பதின் மரூஉ.

## இயலிடங் கூறல்.

மதிகந் தரங்குழல் வாண்முகஞ் சேல்வள்ளை வண்கமுகு
துதிகந் தரஞ்செவி கண்கோங்கு வாழை துகிர்தாளம்
அதிகந் தரநகை வாய்தொடை கொங்கை யறிஞருளம்
பதிகந் தரத்தனம் பேரூ ரியலிடம் பைந்தொடிக்கே.

(இ-ள்.) பை தொடிக்கு = பசுமையாகிய வளையல்களை யணிந்த (என்னால் விரும்பப்பட்ட) பெண்ணுக்கு, குழல் வாண் முகம் = கூந்தலும் ஒளி பொருந்திய முகமும், கந்தரம் மதி = மேகத்தையுஞ் சந்திரனையு மொக்கும் துதி கந்தரம் செவி கண் = (யாவராலும்) புகழப்பட்ட கழுத்தும் செவிகளும் விழிகளும், வண்கமுகு வள்ளை சேல் = வளப்பமுள்ள கமுகையும் வள்ளைக்கொடியையும் கெண்டை மீன்களையு மொக்கும், அதிகம் தரம் = மிகுதியாகிய முறையுள்ள, நகை வாய் தொடை கொங்கை = பற்களும் இதழ்களும் தொடைகளும் தனங்களும், தாளம் துகிர் வாழை கோங்கு = முத்தையும் பவளத்தையும் வாழையையுங் கோங்கரும்பையு மொக்கும், இயல் =

(இவை) அழகாம், அறிஞர் உளம் பதி கந்தர் அத்தன் = அறிவுள்ளோருடைய மனத்தின்கண் தங்குகின்ற முருகக்கடவுளுடைய பிதாவாகிய ஸ்ரீபட்டிநாயக ரெழுந்தருளிய, அம் பேரூர் இடம் = அழகிய திருப்பேரூரிடமாகும். (எ-று.)

இயலிடங் கூறலென்பது நின்னால் விரும்பப்பட்ட தலைவி எவ்வியல்பினள், எவ்விடத்தினள் எனவினாய பாங்கற்குத் தலைவன் கூறல். இச்செய்யுள் எதிர் நிரல் நிறைப் பொருள்கோள். (16)

கேச வனந்த னொருகண் ணிடந்துன் கிளர்பதக்கு
வாச வனந்தண் மலரெனச் சாத்தவன் னேமியருள்
ஈச வனந்த பணியாய் பணிபவ ரேய்பிறவி
நாச வனந்தழை பேரூர வெற்கரு ணற்கதியே.

(இ-ள்.) கேசவன் நந்தன் = கேசவனென்றும் நந்தனென்றுஞ் (சொல்லப்படுந்) திருமால், ஒரு கண் இடந்து = ஒரு விழியைத் தோண்டி, உன் கிளர் பதக்கு = தேவரீருடைய விளங்குந் திருவடிகளில், வனம் தண் வாசம் மலரென = நீரிலுள்ள குளிர்ந்த மணமுள்ள (தாமரை) மலர்போலருச்சிக்க, வல் நேமி அருள் ஈச = வலிமையுடைய சக்கரப்படையை அத்திருமாற்கு அருளிய கடவுளே! அனந்தன் பணியாய் = அனந்தனென்னும் பாம்பை ஆபரணமாக அணிந்தவரே! பணிபவர் = வணங்குபவரது, ஏய் பிறவி = பொருந்திய சன்மத்தை, நாச = அழிப்பவரே! வனம் தழை பேரூர = அழகு மிகுந்த திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டி நாயகரே! நல்கதி எற்கு அருள் = நல்ல பதவியை அடியேனுக்குத் தந்தருளுவீராக. (எ-று)

அனம் தழை எனப்பிரித்து அன்னப்பக்ஷிகள் மிகுந்த என்க் கொள்ளினுமாம் அப்பொழுது இடைக்குறை. கேசவன்—கேசி என்னும் அசுரனைக்கொன்றவன்; நந்தன்—நந்தகோபன் மகன், சங்கையுடையவன் எனினுமாம்.

## திருமாலுக்குச் சக்கர மருளியது:—

“நீற்றினை நிறையப் பூசி நித்தலா யிரம்பூக் கொண்டு
ஏற்றுழி யொருநா ளொன்று குறையக்கண் ணிறையவிட்ட
வாற்றலுக் காழி நல்கி யவன்கொணர்ந் திழிச்சுங் கோயில்
வீற்றிருந் தளிப்பர் வீழி மிழலையுள் விகிர்தனாரே.”

என்ற திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தானும் “மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்” என்ற சேந்தனார் திருவிசைப் பாவானுமுணர்க.

(17)

கதித்தவ ராக்கத ேனாவென் றலறக் கழல்விரலான்
மிதித்தவராக மொழியுமை பங்கவெண் பாற்கடலை
மதித்த வராக மருப்பணி பேரை வரவினியான்
உதித்த வாராக த்துழலாதுன் பாத முவந்தருளே.

(இ-ள்.) கதித்த அ ராக்கதன் = (வலிமை) மிகுந்த அந்த இராவணன், ஓ என்று அலற=ஓ (கெட்டேன்)னென்று கூவும்படி, கழல் விரலால் = (திருவடி விரலினால், மிதித்தவ = உழக்கினவரே! ராகம் மொழி உமைபங்க = பண்போலும் (இனிமையான) சொல்லையுடைய பார்வதி தேவியாரை வாம பாகத்திலுடையவரே! வெண்பால் கடலை= வெண்மையாகிய திருப்பாற் கடலை, மதித்த = (தனது வன்மையால்) கடைந்த, வராகம் மருப்பு அணி =திருமால் அவதாரங்களுள் ஒன்றாகிய பன்றியின் கொம்புகளை ஆபரணமாக வணிந்த, பேரை வர = திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகரே! இனி = மேலே, யான் உதித்து = நான் (ஒரு தாய் வயிற்றில்) பிறந்து, அவம் ராகத்து உழலாது = வீணாசையில்(வருந்தி) யலையாமல், உன் பாதம் =தேவரீருடைய திருவடி (தெரிசனத்தை), உவந்து அருள் = விரும்பித்தரிசிப்பித்தருள்வீராக. (எ-று.) (18)

அருங்கவி வன்றொண்டர் தம்மாடல் காண வமையொடுஞ் செய்
மருங்கவிர் பள்ளனும் பள்ளியு மாய வரற்பணிமின்
பெருங்கவின் வாழ்வு பெறவேண்டின் மானிடர் பேரரியைப்
பொருங்கவி வாழும் பொழிற் குருக்கேத்திரம் போதுமினே.

(இ-ள்.) மானிடர் = மாந்தர்களே! பெரு கவின் வாழ்வு பெறவேண்டின் = மிகுந்த அழகிய வாழ்வை (நீங்கள்) அடைய விரும்பினால், பேர் அரியை = பெரிய சிங்கத்தை, பொரும் = ஒத்த, கவி = குரங்குகள், வாழும்= வசிக்கின்ற, பொழில் = சோலைகள் சூழ்ந்த, குருக்கேத்திரம் = குருக்ஷேத்திரமென்னும் திருப் பேரூருக்கு, போதுமின் = வாருங்கள், அருகவிவன்றொண்டர் = அருமையாகிய (தேவாரத்) திருப்பாடல்களையருளிச் செய்த ஸ்ரீ சுந்தரமூர்த்திநாயனார், தம் ஆடல் = தமது திருநடனத்தை, காண = தெரிசிக்குமாறு, அம்மை யொடும் = (உலக) மாதாவாகிய ஸ்ரீ பச்சைநாயகியாரோடும், செய்மருங்கு = வயற்பக்கத்தில், அவிர் பள்ளனும் பள்ளியும் ஆய = விளங்குகின்ற பட்டிப்பள்ளன் பச்சைப்பள்ளி யென்று (சொல்லுமாறு) ஆகிய, வரன்பணிமின் = ஸ்ரீ பட்டிநாதரை வணங்குவீராக. (எ-று.)

அமை—இடைக்குறை.
பெருங்கவின் வாழ்வு என்றது—முத்தியுலக வாழ்வை.
பொருங்கவி—போர்செய்யுங் கவியெனினும் ஆம். (19)

போதவ னத்தன் புருகூதன் விண்ணவர் போற்றுதிருப்
போதவ னத்தனைப் பேரைப் பட்டீசனைப் போற்றுகிலீர்
போத வனத்தன மானாரைப் போற்றுவிர் கூற்றுவரும்
போதவ னத்த நகுதண்டங் கண்டு புலம்புவிரே.

(இ-ள்.) (மானிடரே)! போதவன் = தாமரைமலரிலிருக்கின்ற பிரமனும், நத்தன்=பாஞ்சஜன்னியமென்னும் சங்கத்தையுடைய திருமாலும், புருகூதன் = இந்திரனும், விண்ணவர்=தேவர்களும், போற்று= துதிக்கின்ற, திருபோதம் வனத்தனை=திருவானைக்காவை வாசஸ்தானமாகவுடையவரை, பேரை பட்டீசனை = திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகரை, போற்றுகிலீர் = துதிசெய்யமாட்டீர்கள், வனம் தனம் மானாரை=அழகிய கொங்கைகளையுடைய மான்போன்ற பெண்களை, போற்றுவிர் = துதிப்பீர்கள், (ஆதலால்) கூற்றுவரும்போது=இயமன் (உங்களிடம்) வருங்காலத்தில், அவன் அத்தம் = அவ்வியமனுடைய கையில், நகுதண்டம்கண்டு = விளங்குகின்ற தண்டாயுதத்தைக்கண்டு, புலம்புவிர் = அழுது பிதற்றுவீர்கள். (எ-று.) இங்ஙனஞ் செய்யாமல் இப்போதே பட்டீசனைத் துதியுங்கள் என்பது எஞ்சிநின்றது. (20)

புலக்க மலத்துக் கயல்பூகப் பாளையிற் புக்குளக்
கலக்க மலத்ததர் கம்பூரும் பேரைக் கவின்பதியான்
துலக்க மலத்தன் சுதந்தரி யேயென றோற்றுவிக்கும்
நலக்க மலத்தன் சிரங்காம னங்கமு நாடினற்கே.

(இ-ள்.) புலம் கமலத்து கயல் = வயல்களின் நீரில் வசிக்கின்ற கெண்டை மீன்கள், பூகம்பாளையில்=பாக்கு மரங்களின் பாளைகளில், புக்கு உகள=சென்றுகுதிக்குமாறு, கலக்கு=கலக்குகின்ற, அம் அலத்து அதர் = அழகிய கலப்பைச்சாலின் வழியே, கம்பு ஊரும் = சங்குகள் தவழுகின்ற, பேரைகவின்பதியான் = திருப்பேரூரென்னும் அழகிய தலத்தையுடையவரும், துலக்கு அமலத்தன் = எப்பொருளையும் விளக்குகின்ற களங்கமற்றவருமாகிய ஸ்ரீ பட்டிநாயகர், சுதந்தரி எனல்=தானே பரத்துவமானவர் (என்று வேதங்கள்) சொல்வதை, நல கமலத்தன் = நல்ல தாமரைமலரிலிருக்கின்ற பிரமனுடைய, சிரம் = தலையும், காமன் அங்கமும்=மன்மதனுடைய, சரீரமும், நாடினர்க்கு = ஆராய்ந்தவர்க்கு, தோற்றுவிக்கும்=புலப்படுத்தும். (எ-று.)

...ரு—இரண்டனுள் முன்னையது தோற்றத்தோடு பிரிநிலையும், பின்னையது தோற்றத்திலும் வந்தன. சுதந்திரி—தன் இஷ்டம்போல் எவற்றையும் நடத்துவோன் பிரமனும் காமனும் தலையும் உடலும் இழந்து பரதந்திரிகளென்பதை யுணர்த்தினரென்பதை யுணர்க. (21)

நாட்டிய மாவர சம்பலத் தேசெயு நம்பன்பதம்
வேட்டிய மாதவர் போற்றுநதென் பேரையை மேவினமால்
ஊட்டிய மாதர் முலையருந் தாமினி யோங்கெருமை
மாட்டிய மாவந்து காட்டற்க வெம்முனின் மாவலியே.

(இ-ள்.) மா அரசு அம்பலத்து = சிறந்த அரசமர நீழலின்கண் உள்ள (வெள்ளி)யம்பலத்தில், நாட்டியம் செய்யும் = திருநடனஞ் செய்கின்ற, நம்பன் பதம் வேட்டு = பட்டி நாயகருடைய திருவடி தரிசனத்தைக் காணவிரும்பி, மாதவர் போற்றும் = சிறந்த முனிவர்கள் துதிக்கின்ற, இயம் தென் பேரையை மேவினம் = வாச்சியங்கள் முழங்குகின்ற அழகிய திருப்பேரூரையடைந்தோம், இனி = மேல், மாதர் பெண்கள், முலை ஊட்டிய = முலைப்பாலையுண்பிக்க, அருந்தாம் = உண்ணமாட்டோம், ஓங்கு எருமை மாட்டு இயமா = உயர்ந்த எருமைக்கடாவை வாகனமாகவுடைய கூற்றுவனே! எம் முன்வந்து = எங்களுக்கு எதிரில் வந்து, நின் மாவலி = உனமிகுந்த வல்லமையை காட்டற்க = காட்டாதொழிவாயாக. (எ-று.)

ஊட்டிய—செய்யியவென்னும் வினையெச்சம், இறந்தகாலப் பெயரெச்சமாகக்கொண்டு சென்ற பிறப்புகளில் பாலுண்பித்த வெனக்கொள்ளினுமாம். *"நெடிலோடுயிர்" என்னும் விதியால், மாடு மாட்டு என இரட்டித்தது. (22)

## நற்றாயிரங்கல்.

மாதவ னத்தையெவ் வாறகன் றுள்வழி யேகொடிய
தாதவ னத்தைச் செயுமே யலரி யலாபரக்கும
நீத வனத்தைப் பெறுபய னேவிது நிச்சலுந்தண்
போதவ னத்தை பணிபேரை நாதன் பொருப்பகத்தே.

(இ-ள்.) நிச்சலும் = நாடோறும், தண்போதவன் = குளிர்ந்த (தாமரை) மலரிலெழுந்தருளிய பிரமதேவரும், நத்து ஐ = (பாஞ்சஜன்னியமென்னும்) சங்கையுடைய திருமாலும், பணி = வணங்குகின்ற, பேரை நாதன் = திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகருடைய, பொருப்பு இடத்

* நன்னூல் உயிரீற்றுப் புணரியல் 33.

து = வெள்ளிமலையினிடத்து, மாது = எங்கள் பெண், அ வன்துறை = அந்தக் காட்டை, எ ஆறு = எவ்வண்ணம், அகன்றாள் = (நீங்கிச்) சென்றாள், வழி ஓ கொடியது = வழி மிகவும் தீயது, ஆ = ஐயோ! அலரி தவனத்தை செய்யுமே = சூரியன விடாயைச் செய்வானே, அலர் பரக்கும் = பழிச்சொல் (உலகமெங்கும்) பரவி விடுமே, நீதம் அனத்தை பெறுபயனோ = செல்வமுள்ள (அந்த) அனனம்போன்ற பெண்ணைப்பெற்ற லாயமோ, இது = எனக்குண்டாய இத்துனபம். (எ-று.)

ஓ, ஆ—இரக்கக்குறிப்பிடைச்சொற்கள்; நிச்சல்—போலி, செயும்—இடைக்குறை, எனக்குண்டாயது என்பது எஞ்சி நின்றது. போதி—அரசு. (23

பொருவரு மாதங்கப் பிள்ளையை யீன்ற புராரிமணி
மருவரு மாதங்கம் வீசுந்தண் காஞ்சிவன் மீகநகர்
ஒருவரு மாதங்க கத்தாரெழுத் தைந்து மோதினர்க்குத்
திருவரு மாதங்கந் தீரும்பின் மோக்கமுஞ் சித்தியுமே.

(இ-ள்.) பொரு அரு மாதங்கம் பிள்ளையை ஈன்ற = ஒப்பில்லாத யானைமுக விநாயகக்கடவுளைக் குழந்தையாகப் பெற்றருளிய, புராரி = (திரி) புரங்களை நீறாக்கியவரும, மணி மருவு அரு மாதங்கம = முத்துக்களையும பொருந்திய அணுரூபமாகிய சிறந்த பொற்பொடிகளையும, வீசும் தண் காஞ்சி (இருகரைகளிலும) இறைக்கின்ற குளிர்ந்த காஞ்சிமாநதியையுடைய, வன்மீகம் நகர் ஒருவர் = வன்மீக நகரெனனும் காரணப்பெயருள்ள திருப்பேரூரிலெழுந்தருளிய ஒப்பற்றவரும், உமா தங்கு = பார்வதி தேவியார் (வாம பாகத்தில்) தங்கிய, அகத்தார் = திருமேனியையுடைய ஸ்ரீ பட்டிநாயகரது, ஐந்து எழுத்தும் = ஸ்ரீ பஞ்சாக்கர மகா மந்திரத்தை, ஓதினர்க்கு = தியானிப்பவர்கட்கு, திருவரும் = (இம்மையிற்) செல்வங்கள் யாவும் கைகூடும், ஆ தங்கம் தீரும் = ஆபத்துக்கள் (யாவும்) நீங்கும், பின் மோக்கமும் சித்தியும = மறுமையில் பரகதியும் (எண்வகையோக) சித்தியும் கிடைக்கும். (எ-று.)

உம்—உயர்வு சிறப்பு.

பின் என்றதனால் இம்மையில் என்றது பெறப்பட்டது. மோக்கமும்—உம் இறந்தது தழுவிய எச்சம். செல்வங்களாவன—பொன், புகழ், மக்கட்பேறு முதலியன.

மகாமேரு புற்றுருவங்கொண்டு சிவபெருமான் திருமேனிமுழுதும் மூடுதலால் வனமிக நகரெனப்பட்டது. இதற்குப் பிரமாணம்.

*விண்ணவர் வியக்குஞ் செம்பொன் மேருமால்வரை போந்தாங்கு
வண்ணநம் முருவமுற்றும் வன்மீக வுருவாய்மூடி
நண்ணலாலனைய பேரூர் வன்மீக நகரமென்றுந்
திண்ணிய செம்பொன்மேரு நகரென்றுந் திகழ்வதாகும். (24)

## வெறிவிலக்கல்.

சித்த சனங்கணை யால்வரு நோயினைத் தீர்ப்பதக்குப்
புத்த சனநகருங் காளத்தார் கொன்றை புரிவதின்றிக்
கத்த சனங்க டமர்தொலைத் தாரது காக்குறுமோ
பத்தச னங்கள் பணிகுந்த கானப் பருப்பதத்தே.

(இ-ள்.) பத்த சனங்கள் பணி=தொண்டர் கூட்டங்கள் வணங்குகின்ற, குந்த கானம் பருப்பதத்து=குந்தகானமெனனும் காரணப்பெயர் பூண்ட திருப்பேரூரைச்சேர்ந்த (வெள்ளி) மலைப்பிரதேசத்தில், சித்தசன அம் கணையால், வரு=(எங்கள் தலைவிககு) மன்மதனுடைய அழகிய (மலா) அம்புகளாலுண்டாகிய, நோயினை தீர்ப்பதற்கு=(காதலாகிய) பிணியை நீககுவதற்கு, கரு காளம் புத்து அசனத்தர்=கருமையாகிய விடத்தைப் புதிய உணவாக (உண்டருளிய) ஸ்ரீ பட்டிநாயகருடைய, கொன்றை புரிவது இன்றி=கொன்றைப்பூ மாலையை விருமபி வாங்கி வருதலில்லாமல், நீங்கள் தமர்=எங்களுடைய சுற்றத்தார்கள், கத்து அசம தொலைத்தா=சத்திக்கின்ற ஆட்டைப்போக்கினர்கள, அது காக்குறுமோ=அச்செய்கை காதல் நோயை நீக்குமோ? நீக்காதென்றபடி. (எ-று.)

திரிபு நோக்கி னகரம் மொழிக்கு முதலில் வந்தது.

தலைவனை விரும்பிய தலைவி புலம்பல் மெய்யிளைத்தல் முதலிய செயல்களைக்கண்ட சுற்றத்தார் தெய்வங்களின் குறையெனக்கருதிப் பலியிடுதல் முதலியவற்றை யறிந்து பாங்கி தனக்குட் சொல்லிக்கொளவது. (25)

பருதிக் குளம்பொலி பேரூ ரிறைவன் பாதாமபுயத்தைக்
கருதிக் குளம்பொலி கண்ணையென் றேத்துக காலமெலாங்
குருதிக் குளம்பொலி சோறும்பட டாடையுங் கூடுநமன்
வருதிக குளமபொலி யச்சிநதி யான்முதலி வாய்க்குநெஞ்சே.

* பேரூர்ப்புராணம் தலவிசேடப்படலம 35.

(இ-ள்.) நெஞ்சே = மனமே! பருதி குளம் பொலி = சூரிய தீர்த்தம் விளங்குகிற, பேரூர் இறைவன = திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டி நாயகருடைய, பதம அம்புயத்தை = பாத தாமரைகளை, கருதி = தியானஞ்செய்து, குளம் பொலி கண்ணும் = நெற்றியிற் பொருந்திய கண்களையுடையவரே, என்று = என்று சொல்லி, ஏத்துக = துதிக்கக்கடவை, (இவ்வாறு துதிப்பையாயின்) காலம் எலாம = எக்காலங்களிலும், குருதி குளம் பொலி சோறும = செம்மையாகிய சர்க்கரை சேர்ந்த மிகுந்த அன்னமும், பட்டு ஆடையும = பட்டு வஸ்திரமும், கூடும் = கிடைக்கும், நமன = இயமனுனவன, வருதிக்கு = (உன்னைக்குறித்து) வருந்திசையை, உளம் பொலிய சிந்தியான = மனதிலுண்டாமாறு நினையான், முத்திவாய்க்கும் = மோக்ஷமுங் கிடைக்கும. (எ-று.) (26)

நெஞ்சக் கரவொழித்தாதி புரீசனை நெஞ்சிருத்திச்
செஞ்சக் கரதடந் தோய்ந்துமெய் யன்பர் திரள்வணங்கி
யஞ்சக் கரமுந் தியானிப் பவர்கட் கறும்பவநோய்
விஞ்சக் கரக்கனி போலட்ட சித்தியு மேவிடுமே.

(இ-ள்.) ஆதி புரி ஈசனை = ஆதிபுரியென்னுந் திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டி நாதரை, நெஞ்சம் கரவு ஒழித்து = மனத்தின்கண்ணுண்டாகிய வஞ்சத்தை நீக்கி, நெஞ்சு இருத்தி = மனத்தில் தியானித்து, செஞ் சக்கரம் தடம் தோய்ந்து = சிவந்த சக்கரதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, மெய் அன்பர் திரள்வணங்கி = உண்மைத்தொண்டர் கூட்டங்களைத் தொழுது, அஞ்சு அக்கரமும = ஸ்ரீ பஞ்சாக்கரமகாமந்திரத்தையும், தியானிப்பவர்கட்கு = மனத்தில் நினைப்பவர்களுக்கு, பவம் நோய் அறும் = பிறவிப்பிணி நீங்கும, (அஃதன்றி) அட்டசித்தியும் = எண்வகை மகாசித்திகளும், விஞ்ச = மிகுதியாக, கரம் கனிபோல் = உள்ளங்கை (நெல்லிக்)கனிபோல, மேவிடும் = கைகூடும். (எ-று.)

ஆதிபுரீசனை—நீக்கசந்தி, அக்கரமும்—உம்மை இறந்தது தழுவிய உயர்வு சிறப்பு, எண்வகைச்சித்திகளாவன—அணிமா, மகிமா, கரிமா, இலகிமா பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம, வசித்துவம் என இவை. (27)

## செவிலித்தாயிரங்கல்.

மேவம் பரம்பணி தோலென் புணவு விடமுகைத்தல்
சேவம் பரமெய் சுடலையி லிர்த்தனம் விற்கை செயல்
பூவம்ப ரங்கம் பொடியாக்கு பேரைப் புராதனர்க்கு
நாவமப ரங்குறக் கொண்டாளென் மையலங் கந்துதலே.

(இ-ள்.) (மாந்தர்களே! மான் அத்தர் = (தாருகவனத்து முனிவர்கள் செய்த அபிசாரயாகத்தினின்றும் வந்த) மானைத்திருக்கரத்திலுடையவரும், அத்தி முகன் தாதையார் = யானைமுக விநாயகக்கடவுளுக்கும் பிதாவானவரும், பனி = குளிர்ந்த, மால் = மேகந் தவழ்கின்ற, இமயம் மான் = இமய மலையில் அவதரித்த மானபோன்ற பார்வதி தேவியாரை, அத்தர் = வாமபாகத்திலுடையவரும், அத்தியை = எலும்பை, பெண் ஆக்கு = பெண்வடிவாகச்செய்தருளிய, காழிமன = சீகாழியில் அவதரித்த ஸ்ரீ திருஞானசம்பந்த மூர்த்திநாயனார், வாழ்த்து = (தேவாரப்பாக்களால்) துதிக்கின்ற, பொன் விமானத்தா = பொன்னாலாகிய விமானத்தையுடையவரும், அ திருப்பேரூர் = அந்தத் திருப்பேரூரிலெழுந்தருளியவருமாகிய ஸ்ரீ பட்டிநாதருடைய, சீர் பதம் வந்திபபீரேல் = அழகிய திருவடிகளை வணங்குவீர்களாயின், மாம் நதத்தா = பெரிய (பாஞ்சசன்னியமென்னும) சங்கையுடையவரும், அத்தி துயில்வார்க்கு = (பாற்) கடலில் யோகநித்திரை செய்பவருமாகிய திருமாலுக்கும, அரும்பதம் = (கிடைப்பதற்கு) அருமையாகிய மூத்தியுலகம், வாய்க்கும = கிடைக்கும். (எ-று)

மான்—உவமையாகுபெயர், திருமாலுக்கும்—உயர்வு சிறப்பும்மைவிகாரத்தாற்றொக்கது; பொன = சுவர்ணம், அழகு; விமானம் = சிகரம், கோவில். (30)

வாரியை வாரி யருந்திய மாமுனி வந்திறைஞ்சுங்
காரியை வாரபொழிற் பேரைய மாணிக்க வாசகர்க்கா
வோரியை வாவு பரியாக்கிப் பிட்டன் றுவந்தளித்த
நாரியை வானின் வைத தாயநுள் வாயெற்குன் னற்பதமே.

(இ-ள்.) வாரியை = சமுத்திரத்தை, வாரி = அருந்திய = (விருத்திராசுரனைக் கொல்லும பொருட்டுத் தேவேந்திரன வேண்டத்தமது கையால்) முகந்துண்டருளிய, மாமுனி = பெருமையையுடைய அகத்திய முனிவர், வந்து இறைஞ்சும = (எக்காலத்தும) வந்து துதிக்கின்ற, கார இயை வார் பொழில் = மேகந்தவழ்கின்ற பெரிய சோலைகள் சூழ்ந்த, பேரை = திருப்பேரூரை (வசிக்கும) இடமாக உடையவரே! மாணிக்க வாசகர்க்கு ஆ = மாணிக்கவாசகரின நிமித்தமாக, ஓரியை = நரிகளை, வாவு பரியாக்கி = தாவுகின்ற குதிரைகளாகச் செய்து, பிட்டு அன்று உவந்து அளித்த = பிட்டாகிய உணவை அக்காலத்து விரும்பி தேவரீருக்குத் தந்த, நாரியை = வந்தி நாச்சியாரை, வானின் வைத்தாய் = ஸ்ரீ கைலாய பதவியில் (இருக்கும்படி வைத்தருளிய) ஸ்ரீ பட்டிநாயகரே! எற்கு உன் நல் பதம் அருள்வாய் = எனக்குத் தேவரீருடைய நல்ல பதவியைக் கொடுத்தருள்வீராக. (எ-று)

வான்—இ_வாகுபெயர் ; ஆ—ஆக என்னும் வினையெச்சம் ஈறு கெட்டது. (31)

நரைமா லறவிடை யானர சம்பல நாயகன்சீர்
விரைமா லறற்குழன் மெல்லியல் பாகன் விரும்புமணித்
திரைமா லறற்பெருங் காஞ்சியு வண்பிற வாநெறியும்
புரைமா லறப்பத்துப் புன்பிறப் பும்மென் புரிந்திலனே.

(இ-ள்.) மால்=திருமாலானவர், புரை=குற்றமான, பத்து புல்பிறப்பும்=(மச்சம் முதலிய) பத்துப்புல்லிய பிறவிகளும், அற= நீங்கும் வண்ணம், நரைமால் அற விடையான் = வெண்மையாகிய பெரிய தரும விடபத்தையுடையவரும், அரசம்பல நாயகன் = அரசம்பல நாயகரும், சீர் =அழகிய, விரை=மணமுள்ள, மால்=மேகம்போலும், அறல் = கருமணல் போலும், குழல்=கூந்தலையுடைய, மெல் இயல் பாகன = மென்மையாகிய சாயலையுடைய பார்வதி தேவியாரை வாமபாகத்திலுடையவருமாகிய ஸ்ரீ பட்டிநாயகர், விரும்பு=விரும்புகின்ற, மணி= மணிகளையும், மால்=பழமையாகிய, திரை அறல்=அலைகளையும் நீரையுமுடைய, பெருகாஞ்சியும =பெருமையுள்ள காஞ்சிமாநதியையும், வண்பிறவா நெறியும = வளமையாகிய பிறவாநெறியெனனுந் திருப்பேரூரும, என = யாதுகாரணம் புரிந்திலன் விரும்பினான் இல்லை. (எ-று.)

காஞ்சி நதியில் மூழ்கவும் பிறவா நெறியைத் தரிசிக்கவும் விரும்பினனாகில் பத்துப்பிறப்பும் நீங்குமென்பது. மெல்லியல்—பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. மணி=அரதனம், அழகு; மகரம் —விரித்தல் விகாரம்; திருமால் பிருகு முனிவரால் பத்துப்பிறவி பிறக்குமாறு சபிக்கப்பட்டனர் என்பதற்குப்பிரமாணம்.

† எடுத்தியம்பிய சைவமேயெவற் றுள்ளுமுத்தம மென்னில் யாங்களுங்
கடுத்ததும்பிய கண்டனாரடிக் கமலமன்றிவே றறிகிலோமெனிற்
றொடுத்துரைக்குமிச் சத்தியத்தினாற் றுயருழந்துநீ நரகவல்வினை
மடுத்தவெம்பிறப் பொருபதெய்துக வழுவுபாதகக் குழிசி யாயினாய்.
(32)

† காஞ்சிப்புராணம், அரிசாப பயந்தீர்த்த தானப்படலம் 6.

புரியங்க மாலை மதியெருக் கார்கொன்றை பொங்கரவு
வரியங்க மாலையர் பத்திபு ரீசர்மன் வாக்கரசர்
விரியங்க மாலை கொளல்போற் பிறவி வினையுழந்து
திரியங்க மாலையன் சொன்மா லையுந்தஞ் செவிக்கொள்வரே.

(இ-ள்.) புரி=கங்கையும், அங்கம் மாலை = எலும்புமாலையும், மதி = சந்திரனும், எருக்கு = எருக்கும், ஆர்=ஆத்தியும், கொன்றை = கொன்றை மாலையும், பொங்கு அரவு=விளங்குகின்ற சர்ப்பமும், வரி=கட்டிய, அங்கம்மாலையர் =உறுப்புக்களையுடைய அந்திவானம்போலுந் திருமேனியையுடையவராகிய, பத்திபுரி ஈசர் =திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகர், வாக்கரசர் = திருநாவுக்கரசு நாயனார் (திருவாய் மலர்ந்) தருளிய, விரி அங்கமாலை = விரிந்த திருவங்கமாலையென்னுந் தேவாரப்பாசுரத்தை, கொளல்போல் = (தமது) திருச்செவியிலேற்றுக் கொள்ளுதல்போல, பிறவி வினை உழந்து = பிறத்தலாகிய (தீ) வினையில் வருந்தி, திரி = உலாவுகின்ற, அங்கம்மாலையன் = சரீரவாஞ்சையையுடைய யான், சொல்மாலையும்=(தமிழ்ச்சொற்களைத் தொடுத்துப்பாடுகின்றவிப்) பிரபந்தத்தையும், செவி கொள்வர் ஏ=தமது திருச்செவியில் ஏற்றுக்கொள்வரோ, ஏற்றுக்கொள்ளார். (எ-று.)

† பத்திபுரி யென்பது—பத்தியில்லாருமங்கு, வைத்த தங்கருமமுற்றவை கினுமவர்க்கும்பத்தி, மெத்துதலானும் பத்தி புரியென விளக்கஞ்சாலும். என்பதனலறிக.

ஏ—எதிர்மறை. எருக்கு, ஆர், கொன்றை=முதலாகுபெயர்கள். (33)

செவிக்கணி வார்குழை யார்தில்லை யந்தணர் சேர்ந்துதொழும்
புவிக்கணி யாயவண் பேரைப்பட் டீசர் புகழ்வன்றொண்டர்
கவிக்கணி முன்றிரு வாரூர்த் தெருவிரு கால்வருந்த
நவிக்கணி மாபர வைக்கே நடந்தனர் நள்ளிரவே.

(இ-ள்.) செவிக்கு=திருச்செவிகளில், அணி=அணிந்த, வார்குழையார் = நீண்ட (சங்க) குண்டலமாகிய காதணியையுடையவரும், தில்லை அந்தணர் = சிதம்பரத்திலுள்ள பிராமணர் (மூவாயிரவரும்) சேர்ந்து தொழும் = (ஒருமித்துவந்து) கூடி வணங்கப்பெற்ற, புவிக்கு அணி ஆய=பூமிக்கு அலங்காரமாகிய, வண்பேரை பட்டீசர் = வண்மையுள்ள திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாதர், புகழ் = (உலகத்தார்) புகழ்கின்ற, வன்றொண்டர்

† பேரூர்ப்புராணம் தலவிசேடப்படலம் 29.

=(வன்றொண்டர் என்னுங் காரணப்பெயர்பூண்ட) ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாய னார் (திருவாய்மலர்ந்தருளிய), கவிகண்ணி=(தேவாரமாகிய)திருப்பாசுரங் களைக்குறித்து, முன்=முற்காலத்தில், திருவாரூர் தெரு=திருவாரூரென் னுந்திருப்பதியின் வீதியில், இருகால் வருந்த=இரண்டு திருவடிகளும் நோ கும்படி, நவ்விகண்ணி மாபரவைக்கு=மான்போலுங்கண்களையுடையளா கிய அழகுள்ள பரவை நாச்சியாரிடத்து, நள் இரவு=நடு இராத்திரியில் நடந்தனர்=தூது சென்றனர் (இஃதென்ன வியப்பென்றபடி). (எ-று.)

பின்னுள்ள கணிகள் இரண்டும், நவியும்—இடைக்குறைகள்.
இருகால்—இருமுறையெனினுமாம்.
செவிக்கு, பரவைக்கு, இரண்டும் ஏழாம்வேற்றுமை மயக்கம். (34)

நண்ணிய வந்திகைப் பிட்டோ விருப்பெது நற்கவுரி
யுண்ணிய வந்தி விடுமுணவோவிம்ப ரும்பரெலாம்
எண்ணிய வந்திரு மாத்திண்ணனாரிடு மின்றசையோ
புண்ணிய வந்தி வணபேரை நாத புகலெனக்கே.

(இ-ள்.) புண்ணிய=புண்ணியவடிவானவரே! அந்திவண்ண=மா லைக்காலத்துச் (செவ்வானம் போலுந் திருமேனியை) யுடையவரே! பே ரைநாத=திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகரே! நண்ணியவந் திகைபிட்டோ=பொருந்திய வந்தி நாச்சியார் கையால் (கொடுத்த) பிட் டாகியவுணவோ, நல்கவுரி=நல்ல கவுரியம்மையானவர், உண்ணிய=(தே வரீர்) நண்ணும்படி, இடும்=படைத்த, உணவோ=திருவமுதோ, இம்பர்= இவ்வுலகத்தவரும், உம்பர்=சுவர்க்கவுலகத்தவரும், எல்லாம=ஆகிய யாவ ரும், எண்ணிய=கருதிய, அம்திருமா=அழகிய ஞானச்செல்வத்தையும மேன்மையுமுடைய, திண்ணனார்=திண்ணனாரெனனும்பிள்ளைத் திருநாம முடைய ஸ்ரீ கண்ணப்பநாயனார், இடும்=அருத்திய, இன் தசையோ=இனி மையாகிய வூனோ,(இவைகளில்) விருப்பு எது=தேவரீருக்கு அன்பு எப்பொ ருளிடத்து, எனக்கு புகல்=எனக்குச்சொல்லுவீராக. (எ-று.)

அந்தில்—அசைநிலை, இம்பர், உம்பர்—இடவாகுபெயர்கள். ஓகாரம்— மூன்றும்வினா, வணம்—இடைக்குறை, உண்ணிய—செய்யிய வென்னும் வா ய்பாட்டு வினையெச்சம்.

வந்தியாரது பிட்டுண்டருளியதும், கவுரியம்மையாரது அமுதுண்டருளி யதும், திருவிளையாடற்புராணம் மண்சுமந்தபடலத்தானும், விருத்தகுமார பாலரானபடலத்தானுமுணர்க. (35)

புகரானைத் தந்த மிறுத்தா னயனொடும் போற்றுறுசீர்த்
தகரானைத் தந்தருள் சிற்சபை நாதன் றவம்புரிவிண்
நகரானைத் தந்த மெனுநடங் காட்டி நனிபுரந்த
நிகரானைத் தந்தமிற் போற்றுமின் றீவினை நீங்குதற்கே.

(இ-ள்.) புகர் = புள்ளிகளையுடைய, ஆனைத்தந்தம் =(குவலயாபீடம் என்னும்) யானையினுடைய கொம்புகளை, இறுத்தான் = முறித்த திருமால், அயனொடும் = பிரமனோடும், போற்றுறு = துதிக்கின்ற, சீர் = சிறப்பினையுடைய, தகரானை=(நாரதமுனிவரது வேள்வியில் தோன்றிய) ஆட்டுக்கடாவை வாகனமாகவுடைய முருகக்கடவுளை, தந்தருள் = பெற்றருளிய, சிற்சபைநாதன் = சிற்சபையென்னும் திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகர், தவம்புரி = (தம்மைக்குறித்துத்) தவஞ்செய்த, விண் நகர் ஆனை= தேவருலகத்திலுள்ள காமதேனுவென்னுந் தெய்வப்பசுவை, தம் தம் எனும் நடம் காட்டி=தம் தம் என்னும் (பாதவேறுபாடுடைய) திருநடனத்தைத்தரிசிக்கச்செய்தருளி, நனிபுரந்த=மிக அக்காமதேனுவைக்காத்தருளிய, நிகரானை=தமக்குத்தாமே யொப்பானவரை, (மானிடரே!) தம்தமில்=நீங்கள் ஒவ்வொருவரும், தீவினை நீங்குதற்கு= (உமது) கொடிய துன்பங்கள் நீங்கும் பொருட்டாக, போற்றுமின் = துதிசெய்யுங்கள். (எ-று.)

முருகக்கடவுள் ஆட்டுக்கடாவை வாகனமாக உடையரென்பதற்குப் பிரமாணம்.

* அவர்புரிதவத்தினாலன் றுதொட்டமலமூர்த்தி.

உவகையாலனையமேடமூர்ந்தன னூர்தியாக. எனவும்.

§ நாரதனொம்பியசெந்தீக்கொடுத்த, திருகுபுரிகோட்டுத்தகர் வருமதியோய்.

எனவும் கூறிய ஆன்றோர் செய்யுள்களாலுணர்க. (36)

## செவிலித்தாயிரங்கல்.

நீடும் பரவை துயின்மாலும் வேதனு நின்றிறைஞ்ச
ஆடும் பரவை யணிபேரை யீச வணங்கனம்பால்
வாடும் பரவை விழிநீ ருகுக்கு மலரிதழி
நாடும் பரவை யெனுமாதைக் காத்தரு ணம்பரனே.

---

* கந்தபுராணம் தகரேறுபடலம் 25.
§ கல்லாடம் கடவுள் வாழ்த்து முருகக்கடவுள் துதி.

(இ-ள்.) நீடும்பரவை துயில்மாலும் வேதனும்=விசாலமாகிய (பாற்) கடலினிடத்து யோகநித்திரை செய்கின்ற திருமாலும் பிரமதேவனும், நின்று இறைஞ்ச=(தேவரீரது திருமுன்) நின்று வணங்க, ஆடும்=(வெள்ளியம்பலத்தின்கண்) திருநடனஞ்செய்தருள்கின்ற, பரவை அணி=கங்கையை (திருமுடியிற்)றரித்தருளிய, பேரை ஈச=திருப்பேரூரினிடத்து எழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகரே! நம்பரனே=எங்கள் கடவுளே! அனங்கன்=மன்மதனுடைய, அம்பால் வாடும்=மலர்க்கணைகளால் துன்பப்படுவாள், பரவு ஐவிழிநீர் உகுக்கும்=விசாலமான அழகையுடைய கண்களினின்றும், நீரைச்சிந்துவாள், மலர் இதழிதாடும்=மலர்ந்த கொன்றைப்பூமாலையை விரும்புவாள், பர=பரனே, ஐ=கடவுளே, எனும்=என்று சொல்லுகின்ற, மாதை=(எங்கள்) பெண்ணை, காத்து அருள்=இரட்சித்தருள்வீராக. (எ-று.)

வாடும், உகுக்கும், நாடும்—செய்யுமென் முற்றுகள்,
எனும்—செய்யுமென்னும் எச்சம். (37)

நம்பர் தரத்தவர் மங்கையர் கண்டத்து நாண்பொலிய
வெம்பந் தரத்தவிட முண்ட பேரை விமலரெழிற்
சம்பந் தரத்தர் புரமூன் றழித்திடச் சார்ந்தவந்நாள்
அம்பந் தரத்த ரதந்திரு மாலு மகிலமுமே.

(இ-ள்.) நம்பு அந்தரத்தவர்=விரும்புகின்ற சுவர்க்கவாசிகளாகிய தேவர்களுடைய, மங்கையர் கண்டத்து=மனைவியரது கழுத்தின்கண் அணிந்துள்ள, நாண்=திருமங்கிலியம், பொலிய=விளங்கும் வண்ணம், வெம்பு அந்தரத்த=வெவ்விய அந்த அச்சத்தையுடைய, விடம் உண்ட=(ஆலகாலமென்னும்) விஷத்தை யுண்டருளிய, பேரை விமலர்=திருப்பேரூரின்கண் எழுந்தருளிய களங்கமற்றவரும், எழில் சம்பந்தர் அத்தர்=அழகிய சம்பந்தமூர்த்திநாயனாருக்குப் பிதாவாகிய ஸ்ரீ பட்டிநாயகர், புரம் மூன்றும்=திரிபுரங்களையும், அழித்திட=அழிக்கும்படி, சார்ந்த அந்நாள்=அடைந்த அக்காலத்து, அம்பு அந்தரத்த இரதம்=கணையும் வெளியிடங்களிற் செல்கின்ற தேரும், திருமாலும் அகிலமும்=விட்டுணுவும் பூமியுமாம். (எ-று.)

அந்தரம்—மெலித்தல் விகாரம்.
மூன்றும்—முற்றும்மை விகாரத்தாற்றொக்கது.
விட்டுணு—சிவபெருமானுக்கு அம்பாகியது. (38)

† போகம்மீன்றபுண்ணியனெய்தகணையேபோல்.

என்றதனாலறிக.

---

† சீவகசிந்தாமணி நாமகளிலம்பகம் 133.

## தலைவன் பாகனொடுரைத்தல்.

அகிலார வார மெறிகாஞ்சிப் பேரை யரன்வரையின்
முகிலார வாரத்தை நந்தேர் வரவென முன்னியெழின்
நகிலார வாரக் குழலேக்கு காலையி னும்விரைந்து
புகிலார வார முறும்வல வாவிடு பொன்வையமே.

(இ-ள்.) அகில் ஆர் அ ஆரம் எறி = அகிலும் ஆத்தியும் அந்தச் சந்தன மரங்களையும் (வீசி) யெறிகின்ற, காஞ்சி = காஞ்சிமா நதியையுடைய, பேரை அரன் = திருப்பேரூரின்கண்உள்ள ஸ்ரீ பட்டிநாயகர், வரையின் = தக்கிணகயிலாயத்திலுள்ள, முகில் = மேகங்களுடைய, ஆரவாரத்தை = முழக்கத்தை, எழில் = அழகிய, நகில் = தனங்களில், ஆரம் = சந்தனமணிந்த, வார் குழல் = நீண்ட கூந்தலையுடைய தலைவி, நம் தேர் வரவு என முன்னி = நம்முடைய தேரின் வருகையென்று நினைத்து, நோக்கு காலையில் = (புறம் போந்து) பார்க்குங்காலத்தில், நாம் விரைந்து புகில் = நாம் மூடுகிச்செல்வோமாயின், ஆரம் ஆர உறும் = விருப்பம் மிகவும் அடைவாள், (ஆகையால்) பொன்வையம் = பொற்றேரை, வலவா = தேர்ப்பாகனே! விடு = (நீ விரைவிற்) செலுத்துவாயாக. (எ-று.)

பொன்வையம்—அழகிய தேர் எனினுமாம். வார—அ சாரியை. குழல்—வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. (39)

வையம் பரவை மறைபரி யாவம் வயங்கிரதம்
வையம் பரவை யணைமான் மனைவி வளர்மலைப்பா
வையம் பரவை மதிபூண் செவிக்கொளல் வண்டமிழ்க்கோ
வையம் பரவைக்கண் டோம் பரம்புர வானவர்க்கே.

(இ-ள்.) அம் = அழகிய, பரவைகண் = பரவை நாச்சியாரிடத்து, தூது ஆம் = (ஸ்ரீ சுந்தரமூர்த்திநாயனர் வேண்டுகோளுக்கிரங்கி) தூதாக (இருமுறை) சென்றருளிய, பரம் புரம் வானவர்க்கு = பரம்புரமென்னும் திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகருக்கு, மறைபரி = வேதங்கள் குதிரையாம், பரவை ஆவம் = (திருப்பாற்) கடல் அம்புப் புட்டிலாம், வையம் வயங்கு இரதம் = பூமி விளங்குகின்றதேராம், அரவை = சேடனென்னும் பாம்பை, அணைமால் = மெத்தையாகச் சேர்ந்த திருமால், வை அம்பு = கூர்மையான கணையாம், வளர்மலை பாவை = உயர்ந்த (இமய)மலையில் அவதரித்த பிரதிமைபோன்ற பார்வதி தேவியார், மனைவி = நாயகியாம், அம் = கங்கையும், பரவு(யாவரும்) புகழ்கின்ற, ஐ = அழகிய, மதி = சந்திரனும்

MAHAMAHOPADHYAYA

பூண் = ஆபரணங்களாம், செவிகொளல் = (தமது திருச்) செவிகளாற் (கேட்டு உட்)கொள்ளுதல், வள் = வளமையான, தமிழ்கோவை = (ஸ்ரீ சம்பந்தமூர்த்தி நாயனர் முதலிய மெய்யடியர்கள் செய்தருளிய தேவார திருவாசகங்கள் முதலாகிய) தமிழ்ப்பாக்களாம். (எ-று.)

பாவை—உவமையாகுபெயர். இச்செய்யுள் எதிர்நிரனிறைப்பொருள் கோள். (40)

வானத்த னம்புய மெட்டாற் கெட்டாதவன் மாமறைசொன்
ஞானத்த னம்புலிச் செஞ்சடை யானல மாரரசங்
கானத்த னம்புயச் சேவடி நாளுங் கருதுகபுன்
மானத் தனம்புவி மேலாசை கொண்ட மடநெஞ்சமே.

(இ-ள்.) புல் மானம் = அற்பமான அகங்காரமுள்ள, தனம்புவிமேல் ஆசைகொண்ட = பொருளிடத்தும் பூமியினிடத்தும் விருப்பங்கொண்ட, மடம் நெஞ்சமே = அறியாமையையுடைய மனமே! வால் நத்தன் = வெண்மையாகிய சங்கத்தையுடைய திருமாலுக்கும், அம் = அழகிய, புயம் எட்டான் கு = எட்டுத்தோள்களையுடைய பிரமனுக்கும், எட்டாதவன் = (வராகமாகவும் அன்னமாகவும் திருவடியையும் திருமுடியையுந்தேட) அகப்படாதவரும், மாமறை சொல் ஞானத்தன் = மகத்தாகிய (இருக்கு முதலாகிய) வேதங்களைத் திருவாய்மலர்ந்தருளிய அறிவுடையவரும், அம்புலி செஞ்சடையான் = சந்திரனையணிந்த சிவந்த சடையையுடையவரும், நலம் ஆர் அரசம் கானத்தன் = அழகு நிறைந்த போதிக்கானமென்னும் திருப்பேரூரை வாசஸ்தானமாகவுடையவருமாகிய ஸ்ரீ பட்டி நாயகரது, சே அடி நாளும் கருதுக = செம்மையாகிய திருவடிகளை எக்காலமுந் தியானிக்கக்கடவை. தியானிப்பின் வீட்டின்பம் பெறுவையென்பதெஞ்சிநின்றது. (எ-று.) (41)

மடக்கொடி யாரு மகாரும் புவியும் வளர்நிதியும்
விடக்கொடி யாருற வுஞ்சத மல்ல விளங்குறுகுக்
குடக்கொடி யாருயர் தாதைக் கடிமை கொடுபுலமைந்
தடக்கொடி யாருனைப் போல்வார்தென் பேரை யடை
மனமே.

(இ-ள்.) மனமே = நெஞ்சமே! மடம் கொடியாரும் = அறியாமைக்குணத்தையுடைய கொடிபோன்ற மகளிரும், மகாரும் = பிள்ளைகளும், புவியும் = பூமியும், வளர்நிதியும் = மிகுந்த பொருள்களும், விடம் கொடியார் உறவும் = நஞ்சுபோன்ற தீயாருடைய நட்பும், சதம் அல்ல = நிலையுடை

மையன்று, (மற்றியாது நிலைமையெனின்) விளங்குற = பிரகாசிக்கின்ற, குக்குடம் கொடியார் = கோழிக்கொடியையுடைய முருகக்கடவுளது, உயர் = மேன்மையாகிய, தாதைக்கு = பிதாவாகிய ஸ்ரீ பட்டிநாயகருக்கு, அடிமைகொடு = அடிமைத்தன்மை பெற்று, புலம் ஐந்து அடக்கு = (சுவை முதலாகிய பஞ்சப்புலங்களையும், (இந்திரியங்களின்வழியே செல்லவிடாமல் உனக்குள்ளே) ஒடுக்கு, ஒடி = அவற்றை முறித்துவிடு, தென்பேரை அடை = அழகிய திருப்பேரூரைச்சென்று சேர்வாயாக (சேரின்) உனைப்போல்வார்யார் = உன்னைப்போன்றவர்கள் யாவர் (ஒருவருமில்லை). இவைகளே நிலைமையாம் என்பதெஞ்சிநின்றது. (எ-று.)

* மடமை—பெண்களின் குணம் நான்கனுளொன்று. கொடு—இடைக்குறை. (42)

முருகக்கடவுள் கோழிக்கொடியை யுடையரென்பது.

† அக்கணமெம்பிரான்றனருளினு லுணர்வுசான்ற
குக்குடவுருவைநோக்கிக்கடிதினீகொடியேயாகி
மிக்குயர்நமதுதேரின்மேவினையார்த்திியென்னத்
தக்கதேபணியிதென்றுவெழுந்ததுதமித்துவிண்மேல்.

‡ போழ்படக்கிடந்தவொருபங்கெழுந்து
மின்னன்மாண்டகவிரலர்பூத்த
சென்னிவாரணக்கொடும்பகையாகித்
தேவர்மெய்பணிப்புறவான்மிடையுடுத்திரள்
பொரியிற்கொறிப்பப்புரிந்தபொருணூடித்
தாமரைபழித்தகைமருங்கமைத்தோய்.

என்பவைகளானுணர்க.

## கலைமான் விறுதல்.

மனக்கலை மாத்தழல் சேரிழு தாக்கி வலிந்தெனையாள்
வனக்கலை மாமதி சூடுகல் யாண புரர்மலைவாழ்
கனக்கலை மாணிழை மென்முலை யீருங்கள் கண்பொருவு
மினக்கலை மானென்று வந்ததுண் டாகிற் புகலுவிரே.

---

† கந்தபுராணம் சூரபன்மன் வதைப்படலம் 497.
‡ கல்லாடம் பாயிரம் 2.

(இ-ள்.) மனம்கல்லை = (எனது) மனமாகிய (கருங்)கல்லை, மாசழல்சேர் இழுதாக்கி = மிகுந்தநெருப்பையடைந்த நெய்போல் உருகச்செய்து, வலிந்து எனை ஆள் = (வேறுசமயங்களிற் செல்லவிடாமல்) தடுத்து என்னை அடிமை கொண்ட, வனம் கலைமாமதி சூடும் = அழகிய கலைகளையுடைய சிறந்த சந்திரனைத் (திருமுடியிற்சூடிய), கலியாண புரர் = கலியாணபுரமென்னும் திருப்பேரூரை (வசிக்கும் இடமாக) உடைய ஸ்ரீ பட்டிநாயகரது, மலைவாழ் = வெள்ளிமலையினிடத்து வாழ்கின்ற, கனம் கலை = சீர்மையுள்ள ஆடையும், மாண் இழை = மாட்சிமையுள்ள ஆபரணங்களும் அணிந்த, மெல் முலையீர் = மென்மையான தனங்களையுடைய பெண்களே! உங்கள் கண் பொருவு = உங்களுடைய விழிகளையொத்த, புனம் கலைமான் ஒன்று = (தினைக்)கொல்லைகளிற் (சஞ்சரிக்கின்ற) ஒரு கலைமான், வந்தது உண்டாகில் = வந்தது உளதானால், புகலுவிர் = சொல்லுங்கள். (எ-று.)

கலை—இடைக்குறை. (43)

புக்கந் தரத்த ரபயமென் றேதொழப் போற்றுவன்னஞ்
சக்கந் தரத்த ரரும்புனத் தேவள்ளி யார்தருமின்
பக்கந் தரத்தரம் பட்டி புரீசர் பதமடைந்தேந்
துக்கந் தரத்தரச் சன்மவன் னோயிடைத் தோற்றிலமே.

(இ-ள்.) அந்தரத்தர் = ஆகாயவாசிகளாகிய (பிரமன் முதலிய) தேவர்கள், அபயம் என்று = (நாங்கள் தேவரீருடைய) அடைக்கலம் என்று சொல்லி, புக்கு தொழ = தமது திருமுன்வந்து (தோத்திரஞ்செய்து) வணங்க, போற்று = (அவர்களைக்) காத்தருளிய, வல் நஞ்சம் கந்தரத்தர் = வன்மையாகியவிடத்தை (அறிகுறியாக வைத்த) ஸ்ரீ கண்டத்தையுடையவரும், அரு புனத்து = மேன்மையாகிய (தினைக்கொல்லையில்), வள்ளியார் தரும் = வள்ளியம்மையாரால் கொடுக்கப்பட்ட, இன்பம் கந்தர் அத்தர் = சுகத்தையுடைய முருகக்கடவுளின் பிதாவானவரும், அம் = அழகிய, பட்டி புரீசர் = பட்டிபுரியென்னும் திருப்பேரூரின்கண் எழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாதரது, பதம் அடைந்தேம் = திருவடிகளைச்சேர்ந்தோம், துக்கம் தரு அ தரம் = (ஆகையால்) துன்பத்தைக் கொடுக்கின்ற அந்த அச்சமுள்ள, சன்மம் வல் நோயிடை = பிறவியாகிய வலிய பிணியினிடத்து, தோற்றிலம் = உதிக்க மாட்டோம். (எ-று.)

சிவபெருமான் விடத்தைக் கண்டத்தில் வைத்துளாரென்பதற்குப் பிரமாணம்.

* மாயிரு ஞாலத்து மன்னுயிர்கள் களிப்ப மன்றுளாடும்
நாயகன் கண்டங் கறுத்தன்றே பொன்னுலகை நல்கிற்றம்மா.
(44)

## தழை விருப்புரைத்தல்.

தோடணி வார்செவிப் பேரைப் பிரான்றுணைத் தாண்மலரைச்
சூடணி வான்றுதி சொல்வெற்ப நீதந்த தொல்லரசங்
காடணி வாகத் தழைவாங்கிப் போர்த்துக் களித்தணைத்து
நீடணி வார்குய மின்பூச வுண்ண நினைந்தனளே.

(இ-ள்.) வெற்ப=வெள்ளிமலைப் பிரதேசத்தையுடைய தலைவனே! நீ தந்த=நீகொடுத்த, தொல் அரசம் காடு=பழமையாகிய வரசங்கானிலுண்டாகிய, அணி வாகு=பெருமையும் அழகுமுள்ள, அ தழை=அந்தத்தழையை, நீடு=மிகுந்த, அணி=ஆபரணங்களும், வார்=இரவிக்கையுமணிந்த, குயம்மின=தனங்களையுடைய மின்போன்ற (எங்கள்) தலைவியானவள், வாங்கி=(யான் கொடுக்க) வாங்கி, போர்த்து=(உடம்பில்) மூடி, களித்து=மனமுவந்து, அணைத்து=(பின்கல்லில்) அணைத்து, பூச=(உடம்பிற்)பூசவும், உண்ண=(வாயி) னருந்தவும், நினைந்தனள்=எண்ணினள், (ஆதலின்) தோடு அணி=(சங்க) குண்டலத்தையணிந்த, வார்செவி=நீண்ட (திருச் செவிகளையுடைய, பேரைபிரான்=திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகருடைய, துணைமலர்தாள்=இரண்டுதாமரைமலர்போலுந்திருவடிகளை; சூடு=உன்முடிமேல் தரித்துக்கொள், அணி=(மலர்களால்) அலங்காரஞ்செய், வான்துதிசொல்=மேலாகிய தோத்திரங்களைச் சொல்லுவாயாக. (எ-று.) மின்—உவமையாகுபெயர்.

தழைவிருப் புரைத்தல் என்பது—நீ கொடுத்த தழையை தலைவி ஏற்றுக்கொண்டு செய்யாதனவில்லையெனப்பாங்கி தலைவனிடங்கூறல். (45)

நினையா தவரை நினையார் நினைப்பவர் நெஞ்சகமாம்
மனையா தவரை நிகர்ப்பார் பரம்புரர் மாணிதனைத்
தனையா தவரையொப் பாயஞ்ச லென்றவற் சார்ந்தவந்த
கனையா தவரையென் றேயுதைத்தா ரெங்கள் கண்ணுதலே.

(இ-ள்.) பரம்புரர்=பரம்புரமென்னுந் திருப்பேரூரையுடையவரும், எங்கள் கண்ணுதல்=நெற்றிக்கண்ணையுடையருமாகிய எங்கள் ஸ்ரீ பட்டிநாயகர், நினையாதவரை நினையார்=(தம்மைச்) சிந்தியாதவரைப் (பிறவி

*சிதம்பரஞ் செய்யுட் கோவை 49.

யினின்றுங்காக்கக்) கருதார், நினைப்பவர் நெஞ்சு அகம் ஆர் = சிந்திப்பவரது மனமாகிய, மனை = வீட்டில், ஆதவனை நிகர்ப்பார் = (அஞ்ஞான இருளை நீக்கலால்) சூரியனை ஒத்து விளங்குவார், மாணி தனை = (தம்மைப் பூசித்த) பிரமசாரியாகிய மார்க்கண்டேய முனிவனை, தனையா = குழந்தையே! தவனைஒப்பாய் = முனிவர்களை யொப்பாவாய், அஞ்சல் என்று = பயப்படாதே என்று சொல்லி, அவன் சார்ந்த = அம்மார்க்கண்டேயமுனிவனைக் (கொல்லும்பொருட்டு) வந்த, அந்தகனை = இயமனை, ஆத = அறிவில்லாதவனே, வனை என்று = (நீ உயிர்) நீங்கக்கடவையென்று, உதைத்தார் = (தமது திருவடியால்) உதைத்தினர். (எ-று.)

அவன் + சார்ந்த = அவற்சார்ந்த: இயல்பின் விகாரமாயிற்று.

அடைந்தோர்கட்கு ஆனந்தத்தைக் கொடுத்தலால் பரம்புரமெனப்பட்டது.

மார்க்கண்டேய முனிவருக்காக இயமனை உதைத்தாரென்பது:—

*மட்டுலாமலர்கொண்டடியிணைவணங்கு மாணிதன்மேன்மதியாதே
கட்டுவான்வந்தகாலனை மாளக்காலினாலாருயிர்செகுத்த, சிட்டனே.

என்ற ஸ்ரீ சுந்தரமூர்த்திநாயனார் திருவாக்கானும்.

† மதுமலர்பறித்துத்திருவடிநிறைத்த
நான்மறைப்பாலனை நலிந்துயிர்கவருங்
காலனைக்காய்ந்தகாலினன்.

என்ற கல்லாடர் திருவாக்கானுமுணர்க. (46)

## கிள்ளைவிடுதூது.

கணையாக மாலை யுடையார்தென் பேரைக் கடவுளருக்
கிணையாக மாலை வரமாரன் பூங்கணை யெய்யநைந்து
பணையாக மாலை முலைபடும் பாட்டைப் பகர்ந்துவரத்
துணையாக மாலைக் கிளியீர்சொல் லீரெங்க டோன்றலுக்கே.

(இ-ள்.) மாலை கிளியீர் = (கண்டத்தின்கண்) வரியையுடைய கிளிகளே! கணை ஆக = அம்பாக, மாலை உடையார் = திருமாலையுடையவரும், தென்பேரைகடவுளருக்கு = அழகிய திருப்பேரூரை யுடையவருமாகிய ஸ்ரீ பட்டிநாயகருக்கு, இணை ஆக = சமானமாக, மாலை வர = செவ்வானம்

* திருவடமுல்லைவாய்த்தேவாரம் 9.
† கல்லாடம் 56.

வாராநிற்க, மாரன் = மன்மதன், பூகணை எய்ய = மலரம்புகளைப் பிரயோகிக்க, நைந்து =(அவைகளால்) வருந்தி, ஆகம் மாலை பணை முலை = மார்பில் மாலையை யணிந்த பெருத்த தனங்களையுடைய யான், படும் பாட்டை = அடைகின்ற வருத்தத்தை, எங்கள் தோன்றலுக்கு = எங்கள் தலைவருக்கு, துணை ஆக வரசொல்வீர் = என் (உயிருக்குத்) துணையாக வரும்படி சொல்லுங்கள். (எ-று.)

முலை—இரண்டாம்வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இஃது ‡'ஒருமையிற் பன்மையும்' என்றவிதியால் தன்மையில் படர்க்கைவந்த இடவழுவமைதி.

"சாத்தன்றாயிவை செய்வலோ என்றாற்போல."

ஆக—என்னும் எச்சத்தை இறந்தகால வினையெச்சமாகக்கொண்டு நீ துணையாகி எனக்கொள்ளினுமாம். (47)

கேதார மாப்பதி யார்மரு தூரர் கிளருலகுக்
காதார மானவர் பேரூ ரிறைவ ரடியருன்னுந்
தாதார மாமலர்ச் சேவடியே யென்றுந் தாழ்வதல்லாற்
போதார மாதவர் முன்னாய தேவரைப் போற்றிலமே.

(இ-ள்.) கேதாரம் மாபதியார் = திருக்கேதாரம் என்னும் சிறந்த திருப்பதியையுடையவரும், மருதூரர் = திருவிடைமருதூரையுடையவரும், கிளர் உலகுக்கு = விளங்குகின்ற (எவ்) வுலகங்கட்கும், ஆதாரம் ஆனவர் = ஆதாரமானவரும், பேரூர் இறைவர் = திருப்பேரூரிலெழுந்தருளியவரும் ஆகிய ஸ்ரீ பட்டிநாயகரது, அடியர் உன்னும் = அடியார்கள் தியானிக்கின்ற, தாது ஆர் = மகரந்தம் நிறைந்த, அம் = அழகிய, மா மலர் = வண்டுகள் மொய்க்கின்ற மலர்போன்ற, சே அடியே = சிவந்த திருவடிகளையே, என்றும் = எக்காலமும், தாழ்வது அல்லால் = பணிவதல்லாமல், போதார் = (தாமரை) மலரில் வசிக்கும் பிரமதேவரும், அ மாதவர் = அந்த திருமகள் கொழுநராகிய விட்டுணுவும், முன் ஆய = முதலாகிய, தேவரை = தேவர்களை, போற்றிலம் = (ஒருபொருளாகத்) துதிக்கமாட்டோம். (எ-று.)

ஏ—இரண்டில் முன்னது பிரிநிலையோடு தேற்றம்; பின்னது அசைநிலை.

திருக்கேதாரம் — வடநாட்டிலுள்ள திருப்பதிகள் ஐந்தனுளொன்று, திருவிடைமருதூர்—சோழநாட்டிலுள்ள நூற்றிருபத்தேழு திருப்பதிகளுள் ஒன்று. (48)

‡ நன்னூல் பொதுவியல் 29.

போனக மாக விடமுண்ட போத புரேசனெல்லாந்
தானக மாக வுளானெனல் யாவர்க்குஞ் சாற்றிடுமான்
மீனக மாகக் கொடிக்கை தவன்கையின் வேத்திரமும்
வானக மாகண் டலன்சேய்த் தனஞ்சயன் வல்விலுமே

(இ-ள்.) விடம் = ஆலகாலவிடத்தை, போனகம் ஆக உண்ட = உணவாகவருந்திய ,போதபுரம் ஈசன் = போதபுரமாகிய திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகர், எல்லாம் = எப்பொருள்களையும், தான் = தானே, அகம் ஆக உளான் = தன்னிடத்ததாகவுள்ளவர், எனல் = என்று (வேதங்கள்) சொல்வதை, யாவர்க்கும் = எவ்வகையினோர்க்கும், மீன் அகம் = மீன் வடிவைத்தன்னுள் (எழுதப்பட்ட) மாகம் கொடி = ஆகாயம் வரையில் உயர்த்திய கொடியையுடைய, கைதவன் = பாண்டியனது, கையின் வேத்திரமும் = கையின் கண்ணுள்ள (பொற்) பிரப்பும், வான் நகு அம் = சுவர்க்கலோகத்தில் விளங்குகின்ற அழகிய, ஆகண்டலன் சேய் = இந்திரனுடைய பிள்ளையாகிய, தனஞ்சயன் = அருச்சுனனுடைய, வல்வில்லும் = வலிமையுள்ள வில்லும், சாற்றிடும் = அறிவிக்கும். (எ-று.)

புரேசன்—குணசந்தி. விலும்—இடைக்குறை.

எப்பொருளும் தானேயன்றி வேறில்லையென்பது பாண்டியன் கைப்பிரம்பும் அருச்சுனனது வில்லும் உணர்த்தியதென்பதை

* கோமகனடிக்கவவனடி வாங்கி
யெவ்வுயிரெவ்வுலகெத்துறைக்கெல்லாம்
அவ்வடிகொடுத்தவருணிறைநாயகன்.

என்ற கல்லாடத்தானும்.

மகாபாரதம் அருச்சுனன் தவநிலைச்சருக்கத்தானும் உணர்க.

யாவர்க்கும் என்றதன் உபலக்ஷணத்தினால் அஃறிணைப்பொருள்கள் எவற்றிற்குங் கொள்ளப்படும். (49)

வல்லிக் குவளை முலைமொழி கந்தரம் வாள்விழியம்
வல்லிக் குவளை முகமதி வாய்துகிர் வாய்ந்த வெங்கள்
வல்லிக் குவளை முதற்கொண்ட யாவும் வழங்கிலர்மா
வல்லிக் குவளை முதுபேரை வெள்ளி வரையிறையே.

---

* கல்லாடம் 49.

(இ-ள்.) வல்முலை = சூதாடுகருவிபோன்ற தனங்களும், இக்குமொழி =கரும்பு(போலுமினிய) சொல்லும், வளைகந்தரம் = சங்கு(போலும்) கழுத்தும், அம் வல்லி குவளை = அழகிய கொடியின்கண்ணுள்ள நீலமலர் (போன்ற), வாள்விழி = ஒளிபொருந்திய கண்களும், மதிமுகம் = சந்திரன் போன்ற வதனமும், துகிர்வாய் = பவளம்போன்ற வாயும், வாய்ந்த = பொருந்திய, எங்கள் வல்லிக்கு = எங்கள் பெண்ணுக்கு, மா = பெரிய, வல் = வலிய, இ கு = இந்தப்பூமியிலுள்ளோர், வளை = சூழ்கின்ற, வெள்ளி வரை = வெள்ளிமலையைத் (தன்னிடத்துக்கொண்ட), முது பேரை இறை = பழமையாகிய திருப்பேரூரின்கண் எழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகர், கொண்ட வளை முதல் யாவும் = (கை) வளை முதலாகக்கவர்ந்த (பொருள்கள்) எல்லாம் வழங்கிலர் = கொடுத்தனரில்லை. (எ-று.)

முதலாகிய என்றது—ஏனைய அணிமுதலியன. கு—இடவாகுபெயர். இச்செய்யுள் முறைநிரனிறைப்பொருள்கோள். (50)

வரைச்சங் கரியை யிடத்துவைத் தார்வரை யேந்தியகார்
புரைச்சங் கரியை வலத்துவைத் தார்புக ழார்ந்தவண்ம
துரைச்சங் கரிக்கு வயற்பேரை நாதர் துணையடியை
யுரைச்சங் கரிப்பர் நந்தீவினை யாவுமி துண்மைநெஞ்சே.

(இ-ள்.) நெஞ்சே = மனமே! வரைசங்கரியை=(இமய)மலையில் அவதரித்தருளிய பார்வதி தேவியை, இடத்துவைத்தார் = வாமபாகத்தில் வைத்தவரும், வரை ஏந்திய=(பசுக்களையும் ஆயர்களையும் காப்பது காரணமாகக்கோவர்த்தனம் என்னும்) மலையைக் (குடை) யாகத்தாங்கிய, கார் புரை சங்கு அரியை = (நீருண்ட) மேகத்தையொத்த சங்கையுடைய விட்டுணுவை, வலத்து வைத்தார் = வலது பாகத்தில் வைத்தவரும், புகழ் ஆர்ந்த = கீர்த்தி நிறைந்த, வண் மதுரை சங்கர் = (பல) வளப்பங்களையுடைய மதுரையின் கண்ணுள்ள (தமிழ்ச்) சங்கத்திற்குத் தலைவரும், இக்கு வயல்=கரும்புகள் நிறைந்த வயல்கள் சூழ்ந்த, பேரை நாதர்=திருப்பேரூரின்கண் எழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகரது, துணை அடியை = இரண்டு திருவடித்தாமரைகளையும், உரை = (நீ புகழ்ந்து) பாடுவாயாக. (அவ்வாறு பாடினால்) நம் தீவினையாவும்=நமது (முற்பிறப்பிலுண்டாகிய) தீமையாகிய வினையெல்லாம், சங்கரிப்பார் = அழித்துவிடுவார், இது உண்மை = இஃது மெய்மையாம். (எ-று.)

இடப்பால் அரியை என்று கூறினும் தேவியாரை இடப்பால் வைத்த காலத்து விட்டுணுவை வலப்பால் வைத்தனர் என்க.

கார்—பண்பாகுபெயர், உறை—என்னும் முன்னிலை வினைமுற்றின் முன் வல்லினம் எதுகைநோக்கி மிகுந்தது. (51)

நெஞ்சக் கரவரித் தாருளத் தென்று நிலவுபர
செஞ்சக் கரவரி தாழுந்தென் பேரைச் சிவசங்கர
பஞ்சக் கரவரி யானையத் தாவுயிர் போம்பகல்யான்
அஞ்சக் கரவரி தாமனு வோத வருளுகவே.

(இ-ள்.) நெஞ்சம் கரவு அரித்தார் உளத்து=மனத்தின்கண்ணுள்ள வஞ்சத்தை நீக்கிய (மெய்யடியார்களுடைய) உள்ளத்தின்கண், என்றும் நிலவு பர=எக்காலத்தும் விளங்குகின்ற மேலானவரே! செம் சக்கரம்=சிவந்த (சுதரிசனம் என்னும்) சக்கரத்தையுடைய, அரிதாழும்= விட்டுணுவானவர் வணங்குகின்ற, தென் பேரை சிவ= அழகிய திருப்பேரூரின்கண் எழுந்தருளிய மங்களமானவரே! சங்கர=(விரும்பிய ஆன்மாக்களுக்குச்) சுகத்தைச்செய்பவரே! பஞ்சக்கரம் அரி ஆனை அத்தா= ஐந்து திருக்கரங்களையுடைய ஒளிபொருந்திய யானைமுக விநாயகக்கடவுளுக்குப் பிதாவானவரே! உயிர் போம் பகல்=(எனக்கு உடலைவிட்டு) உயிர் நீங்குங்காலத்தில், யான் =எளியேனாகிய நான், அரிது ஆம் (யாவர்க்கும்)கிடைப்பதற்கருமையாகிய, அஞ்சு அக்கரம் மனு =ஸ்ரீ பஞ்சாக்கர மகாமந்திரத்தை, ஓத அருளுக= செபிக்கும் வண்ணம் கிருபை செய்வாயாக. (எ-று.)

ஐந்து—அஞ்செனறாயது முழுப்போலி. (52)

அருநாக வன்சினை மீதேறி நாக மமரருறை
தருநாக வண்மை தனைநோக்கு பேரைத் தனிமுதல்வன்
பருநாக வல்லி மரகத வல்லிதன் பாகனுயர்
திருநாக வண்ணலை நாமஞ்சொல் வீர்கதி சேர்தற்கே.

(இ-ள்.) நாகம்=குரங்குகளானவை, அரு நாகம் வல் சினை மீது= (தங்களாலும்) ஏறுதற்கு அருமையாகிய புன்னைமரங்களின் வலியகிளைகளின்மேல், ஏறி=ஏறி, அமரர் உறை தரு= தேவர்கள் வசிக்கின்ற, நாகம் வண்மையை= அமராவதிப் பட்டணத்தின் வளப்பத்தை, நோக்கு=பார்க்கின்ற, பேரை= திருப்பேரூரிலெழுந்தருளிய, தனி= ஒப்பற்ற, முதல்வன்= எத்தேவர்கட்கும் தலைவரானவரும், பருநாகம் வல்லி= பெருமை பொருந்திய (இமய) மலையிலவதரித்த கொடிபோன்ற, மரகதவல்லி= மரகதவல்லியை, தன்பாகன்=தமது வாமபாகத்திலுடையவரும், உயர் திருநாகம் அண்ணல் ஐ= மேன்மையாகிய அழகியயானைமுக விநாயகக்கடவுளுக்குப் பிதாவுமா

கிய ஸ்ரீ பட்டிநாயகருடைய, நாமம் = (ஆயிரந்) திருநாமங்களையும், கதி சேர்தாற்கு (நீவிர்) பேரின்ப பதவியடைதற் பொருட்டு, சொல்வீர் = துதிக் கக்கடவீர். (எ-று.)

உறைதரு—தரு துணைவினை.

நாமம்—ஸ்ரீ பஞ்சாக்கர மகாமந்திரமெனினுமாம், தன்—இரண்டும் சாரியைகள். (53)

சேர்ந்தாரைக் கொல்லியங் கையும் தினகரன் பல்லுஞ்செற்றார்
தேர்ந்தாரைக் கொல்லியன் போற்றும்பெம் மானறுஞ் செவ்விதழி
யீர்ந்தாரைக் கொல்லியற் றேராரும் பேரை யிறைவரடி
நேர்ந்தாரைக் கொல்லிய வாரா னமனென்று நிச்சயமே.

(இ-ள்.) சேர்ந்தாரைக் கொல்லி அம் கையும் = அக்கினிதேவனுடைய அழகிய கைகளையும், தினகரன்பல்லும் = சூரியதேவனுடைய பற்களையும், செற்றார் = அழித்தவரும், ஐ ஆர் = அழகுபொருந்திய, கொல்லியன் தேர்ந்து = கொல்லிமலையைத் (தனதாகவுடைய) சேரராஜன் ஆராய்ந்து, போற்றும் = வணங்குகின்ற, பெம்மான் = பெருமானும், நறும் = மணமுள்ள, செவ் இதழி ஈரம தார் ஐ = செவ்வையாகிய கொன்றைமலராலாகிய குளிர்ந்தமாலையையுடைய கடவுளும், கொல் இயல் தேர் ஆரும் = கொல்லனாற் செய்யபபட்ட இரதங்கள் நிறைந்த, பேரை இறைவர் அடி = திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகருடைய திருவடிகளை, நேர்ந்தாரை = விரும்பியடைந்தவர்களை, நமன் = இயமன, கொல்லிய = கொல்லுமாறு, என்றும் வாரான = எக்காலத்தும் வரமாட்டான், நிச்சயம் = (இஃது) உண்மை. (எ-று.) ஈரம—கடைக்குறை. இ—விகுதி வினைமுதற்பொருளில் வந்தது.

உம்—முற்று. சேர்ந்தாரைக்கொல்லி—காரணப்பெயர். கொல்லிய—செய்யியவெனும் வினையெச்சம். (54)

## செவிலித்தாயை ஆறு செல்லந்தணர் தேற்றல்.

சயவேலைக் காளையுந் தாரோதி யுந்தடஞ் சாரலின்முன்
கயவேலைக் கானகன் றுற்றார்நன் செய்மலர் நண்ணுவண்டு
தயவேலைக் காமரம் பாடக கிளிதுயில் சார்மனைக்கண்
பயவேலைக் காரரி போற்றுந்தென் பேரைப் பதியிடத்தே.

(இ-ள்.) பயம் வேலை = பாற்கடலில் (யோகநித்திரை செய்கின்ற), கார் அரி = கருமைநிறமுள்ள திருமால், போற்றும் = வணங்குகின்ற, தென்பே

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.

ளாயபதி இடத்து = அழகிய திருப்பேரூராகிய திருப்பதியினிடத்து, நல் செய் = நல்ல வயல்களிலுள்ள, மலர் = தாமரை முதலிய மலர்களை, நண்ணு வண்டு = அடைந்த வண்டுகள், உதயம்வேலை = விடியற்காலத்தில், காமரம் பாட காமரமென்னும் பண்ணைப்பாடாநிற்க, கிளி துயில்சார் = (பைங்) கிளிகள் (அந்தப்பண்ணைக்கேட்டு) நித்திரையடைகின்ற (தூங்குகின்ற), மனைக் கண் = (மருதநிலத்தூரிலுள்ள) வீட்டினிடத்து, சயம்வேல் ஐ காளையும் = வெற்றியுள்ள வேலேந்திய அழகிய தலைவனும், தார் ஓதியும் = பூமாலை யையணிந்த தலைவியும், தடம் சாரலில் = விசாலமான மலைப்பக்கத்தில், ஐ = நுண்மையான, முள் நயம் = முள்மிகுந்த, வேல் கான் அகன்று = வேலமரங்கள் நிறைந்த காட்டைக்கடந்து, உற்றூர் = போய்ச்சேர்ந்தார்கள். (எ-று.)

காளை—உவமையாகுபெயர். ஓதி—அன்மொழித்தொகை.

சயவேலைக்காளை யென்றதாலும், தாரோதி என்றதாலும் அச்சமும் வருத்தமும் இன்றிச்சென்றாரென்க.

தலைவியோடுகூடிய தலைமகன் ஆங்குப் பழிமிகுதலைப் பாங்கியறிவிக்கவறிந்து தலைவியை அருஞ்சுரத்தின்வழியே கொண்டுபோனமையை பாங்கியாலறிந்த செவிலித்தாய் அத்தலைவியைத் தேடிச்செல்லுங் காட்டுவழியிலே எதிரே வரும் அறவோரை நோக்கி ஓர் பெண் ஓர் மகனுடன் வரக்கண்டதுண்டோவென வினவ அவர்கள் நீ கூறும் அவ்விருவரும் குறித்த அவ்வூர்க்கண் இடையூறின்றி இப்பொழுது சேர்ந்திருப்பாரெனக்கூறல். (55)

பத்தி யகத்துச் சிறிதுமில் லாத படிறனெனை
முத்தி யகத்துவைத் தாள்வைகொல் லோமுழ வின்னொலிபோல்
தத்திய கத்து திரைக்காஞ்சிப் பேரைத் தனிமுதல்வ
நித்திய கத்து தவிர்ந்தோர் பணிந்திடு நின்மலனே.

(இ-ள்.) முழவின் ஒலிபோல் = பேரிகை முதலிய வாச்சியங்களின் ஓசைபோல, தத்திய = பாய்ந்துசெல்கின்ற, கத்து = ஒலிக்கின்ற, திரை காஞ்சி = அலைகள்பொருந்திய காஞ்சிமாநதியையுடைய, பேரை தனி முதல்வ = திருப்பேரூரிலெழுந்தருளிய ஒப்பில்லாத தலைவரே! நித்திய = அழிவில்லாதவரே! கத்து = (உண்மைப்பொருள் இதுவோ அதுவோவென்று) பிதற்றுதல், தவிர்ந்தோர் = நீங்கிய (மெய்) அன்பர்கள், பணிந்திடும் = வணங்கப்பெற்ற, நின்மலனே = மலரகிதராகிய ஸ்ரீ பட்டிநாயகரே! அகத்து = உள்ளத்தில், சிறிதும் = அற்பமேனும், பத்தி இல்லாத = அன்பில்லாத, படிறன் எனை = பொய்யேனாகிய என்னை, முத்தி அகத்து = மோக்கபதவியில்,

வைத்து = வைத்து, ஆள்வைகொல் = அடிமைகொள்வாயோ. (எ-று.)

தத்திய—செய்யிய என்னும் வினையெச்சம். 'கொல்—ஐயம்,' இஃதெதிர்மறையோடுவினா. (56)

மலையத் துவசற் கருள்பேரை நாத வளரிடப
நிலையத துவச மரகத வல்லிமென் னேயமுலைக்
கலையத் துவச பிறவிக டோறுங் கலநதவினை
யுலையத் துவசந்தத் தாளருள் வாயெங்கட் குத்தமனே.

(இ-ள்.) உத்தமனே = சற்குணமுள்ளவரே! மலையத்துவசன்கு = மலையத்துவச பாண்டியனுககு, அருள = (முததியுலகைக்) கொடுத்தருளிய, பேரைநாத = திருபபேரூரிலெழுந்தருளிய இறைவரே! வளர் இடபம் நிலை = உயர்ந்த இடபக்குறி யெழுதபபட்ட. அ துவச = அந்தக்கொடியையுடையவரே! நேயம = அனபுள்ள, மரகதவல்லி = பச்சைநாயகியாரது, மென்முலைகலையத்து = மெல்லிய முலைகளாகிய கும்பங்களிடத்து, வச = வசமானவரே! பிறவிகளதோறும = (சென்ற) ஒவ்வொரு பிறவிகளிலும், கலந்த வினை உலைய = (எங்களைவிடாது) பற்றிய தீவினைகள் கெடும் வண்ணம், சந்தம துவம தாள் = அழகிய (தேவரீருடைய) இரண்டு திருவடிகளையும், அருள்வாய் = (தரிசனங்கொடுத்து) அருள்வீராக. (எ-று.)

கலையம்—கலயம், அகரத்துக்கு ஐகாரமும், நேயம் சகரத்துக்கு யகரமும் போலிகளாகவந்தன. தவயம் என்னும் வடமொழி துவம் எனத் தற்பவமாயிற்று. (57)

உதகந் தருசெங்கை மங்கைபங் காவொளிர் பூங்கமல
பதகந் தருவ ரிசைபாடும் பேரைப் பரவறியார்ச்
சதகந் தருவனை யாயெனப் பாடுஞ் சழக்கொழித்துன்
னதகந்த ருள்ளுநின் மாப்புகழ் பாடு நலமருளே.

(இ-ள்.) உதகம் தரு செம் கை மங்கை பங்கா = கங்கையைக்கொடுத்தருளிய செட்யகரங்களையுடைய உமாதேவியாரை இடமபாகத்திலுடையவரே! ஒளிர பூ கமலம் பத = பிரகாசிக்கின்ற அழகிய (செந்) தாமரைமலர்போன்ற திருவடியையுடையவரே! கந்தருவர் இசைபாடும்பேரை பர = கந்தருவர் இராகம்பாடித் துதிக்கின்ற திருப்பேரூரிலெழுந்தருளிய கடவுளே! அறியார் = கல்வியுணர்வில்லாத மாந்தாகளை, தரு அனையாய் என = (கற்பகமுதலிய்தெய்வத்) தருககளை ஒப்பானவரேயென றுதுதித்து, சதகம் = சதகமென்னும் (நூறுசெய்யுள்கொண்ட) பிரபந்தத்தை, பாடும் = அவர்களுக்கு

றித்துப்பாடும், சழக்கு ஒழித்து = குற்றத்தை ஒழித்து, உன்னதம் = உயர்வாகிய, கந்தர் உள்ளும் = முருகக்கடவுள் தியானிக்கின்ற, நின்மாபுகழ் = தேவரீருடைய சிறந்த கீர்த்தியை, பாடும் நலம் அருள் = (மெய்யடியாருக்கருளியதன்றி இழிந்த எனக்கும்) பாடும் தன்மையை தந்தருள்வீராக. (எ-று.)

எனக்கு என்பதும், இறந்தது தழுவிய இழிவு சிறப்பு உம்மையும் செய்யுள் விகாரத்தால் எஞ்சிநின்றன. (58)

## இரவுவருவானைப் பகல்வருகென்றல்.

நலத்தகை யாள்பொருட் டாலத்திற் கார்த்தபுன் னள்ளிரவில்
வலத்தகை யார்வில் விடலாய் வரற்க மடங்கலெண்கு
பலத்தகை யாளி முதற்றீ விலங்கு பயின்றிடுவண்
தலத்தகை யாத்திருப் பேரைப் பரமன் றடவரைக்கே.

(இ-ள்.) கை = கையினிடத்து, வலத்த வில் ஆர் = வெற்றியைத்தரத் தக்க வில்லையுடைய, விடலாய் = புருடரிற்சிறந்த தலைவனே! நலம் தகையாள் பொருட்டு = அழகும் பெருமையுமுடைய தலைவியின் நிமித்தமாக, ஆலத்தில் = விடம்போல, கார்த்த = கருமையான, புல் = அற்பமாகிய, நள் இரவில் = நடு இராத்திரியில், மடங்கல் எண்கு = சிங்கங்களும் கரடிகளும், பலத்த = வலிமையும், கை = கோபத்தையுமுடைய, யாளி முதல் = யாளி முதலாகிய, தீ விலங்கு = கொடியமிருகங்கள், பயின்றிடு = சஞ்சரிக்கின்ற, வண் தலத்த = வளப்பமுள்ள இடங்களையுடைய, கையா திருபேரை = (யாவரும்) வெறுக்காத திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகரது, தடம் வரைக்கு வரற்க = விசாலமாகிய வெள்ளிமலையின்கண் வாராதொழிவாயாக. (எ-று.) கு—வேற்றுமை மயக்கம். (59)

வரைக்கொடி யாடனஞ் சேர்பட்டி நாதனை வானுலகு
வரைக்கொடி யாடு மதிற்பேரை யீசனை வாழ்த்தயற்றே
வரைக்கொடி யாரை மருவாது வன்மன னேயடியார்
வரைக்கொடி யாரக் கழுகோ டருந்துடல் வாஞ்சைவிட்டே.

(இ-ள்.) வல் மனனே = கடினமான மனமே! கொடி = காக்கைகள், கழுகோடு = கழுகுடனே, ஆர அருந்து = (வயிறு) நிறைய உண்ணுகின்ற, உடல் வாஞ்சைவிட்டு = உடம்பின் ஆசையை நீக்கி, அயல் தேவரை = வேறாகிய தெய்வங்களையும், கொடியாரை = தீயவர்களையும், மருவாது = சாராமல், அடியார் வரை = மெய்யடியார்களை ஏற்றுக்கொள், வரை கொடியாள் = இமயமலையில் திருவவதாரஞ்செய்த கொடிபோல் வாளாகிய பார்வதி

தேவியாரது, தனம்=முலைகளை, சேர்=சேர்கின்ற, பட்டி நாதனை = ஸ்ரீ பட்டிநாயகரை, வான் உலகு வரை=சொர்க்கலோக மட்டும், மதில் கொடி ஆடும் = மதிலில் நாட்டப்பட்ட துவசங்கள் அசைகின்ற, பேரை ஈசனை = திருப்பேரூரிலெழுந்தருளிய சிவபெருமானை, வாழ்த்து = துதிப்பாயாக. (எ-று.) (60)

விடையங் களைந்தின் வழிச்சென்று பொய்யைமெய் யென்றுணருங்
கடையங் களையநின் றாட்டா மரையைக் கருதலென்றோ
படையங் களைமல ராளியை நீற்றிய பாலவிழிச்
சடையங் கலைமதி சூடும் பரம்புரச் சங்கரனே.

(இ-ள்.) அம் கள் = அழகிய தேனையுடைய, ஐ=நுண்மையான, மலர் படை ஆளியை = மலர்களை ஆயுதமாகக்கொண்ட மன்மதனை, நீற்றிய = சாம்பலாகச்செய்த, பாலவிழி = நெற்றிக்கண்ணையுடைய, சடை = சடையினிடத்து, அம் = கங்கையையும், கலைமதி = கலையையுடைய சந்திரனையும், சூடும் = தரித்த, பரம்புரம் = பரம்புரமெனனும் திருப்பேரூரின்கண் எழுந்தருளிய, சங்கரனே = ஆன்மாக்களுக்கு சுகத்தைச் செய்கின்ற ஸ்ரீ பட்டி நாயகரே! ஐய = பிதாவானவரே! விடயங்கள் ஐந்தின் வழிசென்று =மெய்முதலாகிய இந்திரியங்களாலும் நுகரப்படும் ஊறு முதலிய ஐம்புலன்களின்பின்போய், பொய்யை மெய்யென்று உணரும் = பொய்யாகிய உடம்பை உண்மையென்று கருதுகின்ற, கடையங்கள் = கீழோராகிய நாங்கள், நின் = தேவரீருடைய, தாள் தாமரையை = திருவடித்தாமரைகளை, கருதல் என்றோ = தியானிப்பது எக்காலமோ. (எ-று.)

விடயம்-அகரத்துக்கு ஐகாரம் போலி. கலை-களை, ளளபேதம். (61)

சங்கந் தரங்கந் தருகாஞ்சிப் பேரைத் தனிமுதல்வன்
எங்கந் தரங்கந் தளிர்மேனி யாக்கி யிறைவரிடைப்
பொங்கந் தரங்கந் தவோதிப்பொன் மங்கலம் போற்றினமைக்
கங்கந் தரங்கந் தரணியுள் ளோருக் கறிவிக்குமே.

(இ-ள்.) தரங்கம் சங்கம் தரு = அலைகளாகிய (கைகளால்) சங்குகளை (யெடுத்துக்கரைகளில்) வீசுகின்ற, காஞ்சி பேரை தனிமுதல்வன = காஞ்சி மாநதியையுடைய திருப்பேரூரிலெழுந்தருளியவரும் ஒப்பற்ற தலைமையானவரும், எம் கந்தா = எங்கள் முருகக்கடவுளுக்கும், அங்கம் தளிர் மேனி ஆக்கி = எலும்பைத் தளிர்போலும் சரீரத்தையுடைய பெண்ணாகச்செய்த (ஸ்ரீ சம்பந்தமூர்த்திநாயனாருக்கும்), இறைவர்=பிதாவாகிய ஸ்ரீ பட்டி நாயகர், பொங்கு அந்தரம் இடை=விளங்குகின்ற ஆகாயம் போலுமிடையையும்,

கந்தலேஞதி = மணமுள்ள கூந்தலையுமுடைய; பொன் = திருமகளது, மங்கலம் போற்றினமைக்கு = திருமங்கிலியத்தை பாதுகாத்த விஷயத்தை, கம் = சுவர்க்கலோகத்திலும், தரணி = பூலோகத்திலும், உள்ளோர்க்கு = இருக்கின்ற தேவர்களுக்கும் மனிதர்களுக்கும், அம் கந்தரம் அறிவிக்கும் = அழகிய அக்கடவுளுடைய ஸ்ரீ கண்டம் தெரிவிக்கும். (எ-று)

போற்றினமைக்கு—இரண்டாம்வேற்றுமை மயக்கம். தளிர்மேனி—அன்மொழித்தொகை. ஆக்கி—இ விகுதிவினைமுதலையுணர்த்திற்று. (62)

## தலைவியினலங்கண்டு செவிலித்தாயிரங்கல்.

அரிக்கு வளைகதி ராழிதந் தாண்ட வரன்ககன
புரிக்கு வளைகுழற் பொன்போந்து மாநடம போற்றினளக்
கரிக்கு வளைக்களக் கண்ணுத னீதி கடந்தெழிற்கு
மரிக்கு வளைமென் றுகிலுட னேகொண்ட மாயமென்னே.

(இ-ள்.) வளை = வளைத்துக் கட்டப்பட்ட, குழல் = கூந்தலையுடைய, பொன் = திருமகள்போன்ற (எங்கள்) பெண், வளை = சங்கத்தை ஏந்திய, அரிக்கு = திருமாலுக்கு, கதிர் ஆழி = ஒளியுள்ள சக்கராயுதத்தை, தந்து = கொடுத்து, ஆண்ட = அடிமை கொண்ட, அரன் = ஸ்ரீ பட்டிநாயகரெழுந்தருளிய, ககனபுரிக்கு = திருப்பேரூருக்கு, போந்து = சென்று, மா நடம = (அரசம்பலத்தினகண் அப்பெருமான செய்கின்ற) ஆனந்த தாண்டவத்தை, போற்றினள் = (தரிசித்து) வணங்கினாள், கரி = நஞ்சுதங்கிய, குவளை = நீலமலர்போலும, களம = கண்டத்தையுடைய, கண்ணுதல் = (அச்) சிவபெருமான், நீதிகடந்து = (அருளவேண்டும) முறைமையை விலக்கி, எழில் குமரிக்கு = அழகிய (எங்கள்) பெண்ணினுடைய, வளை = (கைகளிலணிந்த) கங்கணங்களை, மெல் துகிலுடனே = மென்மையாகிய ஆடையுடனே, கொண்ட = அபகரித்த, மாயம் என = வஞ்சகம யாது. (எ-று.)

குமரிக்கு—ஆறாம்வேற்றுமை மயக்கம். பொன—உவமையாகுபெயர். குவளை—முதலாகுபெயர். கரி—பிரமன முதலாகிய தேவர்களைக்காத்ததற்குச் சாட்சியாக எனினும ஆம். (63)

## பாங்கியிரங்கல்.

தூயவ ராகங் கலந்தருள் பேரை வரர்பரியால்
தீயவ ராகக் குருநிலைக் கமுதருள் செய்யாகம்
பேரியவ ராக வுடல்வெளுத் தங்கலை போய்மதனை
பயவ ராக மொழிசைந்த தென்னை பரியவமே.

(இ-ள்.) மாயவர் ஆகம் கலந்தருள் = திருமாலைத் (தமது) திருமேனி யிற் கொண்டருளிய, பேணாவரர் = திருபபேருரிலெழுந்தருளிய சிவபெரு மானும், பசியால் = பட்டினியால், தீ = வருந்திய, அ வராகம் குருளைக்கு = அந்தப்பன்றிக்குட்டிகளுக்கு, அமுது அருள் = பாலுண்பித்த, செய்யர் ஆகம் = செம்மைநிறத்தை யுடையருமாகிய ஸ்ரீ பட்டிநாயகரிடத்து, அராகம் மொழி = பண்போலுஞ் சொல்லையுடைய (எங்கள் பெண்), போய் = செ ன்று, அவராக உடல் வெளுத்து = (நீறுபூசிய) அப்பெருமானது மெய்போல த்தனது மெய்பும் வெண்மையடைந்து, அண் கலை போய் = பொருந்திய ஆடையும் அவிழ்த்து போட், மதன் ஏ பாய = மன்மதனுடைய (மல) ரம்பு கள் (தனமேல்) பிரவேசிக்க, நைந்தது என்னை பரிபவம = வாடியது யாதுபா வம். (எ-று.) மொழி— உவமெமொழித்தொகை.

என்னை—இரக்ககுறிப்பு வினாவிடைச்சொல், ஏ—அசைநிலை. (64)

மேரு மலைத்தவ ரார்பட்டி நாதர் விளங்கடியும்
தேரு மலைத்தண் புனற்காஞ்சி யுஞ்சிந்திப் பார்பிறவி
யாரு மலைத்தணிக் கும்பிற வாநெறி யாயதிருக்
காரு மலைதத பொழிற்பே ரையுமென் றுங் கண்ணுநெஞ்சே.

(இ-ள்.) நெஞ்சே = மனமே! மேருமலை தவரார் = மகாமேருமலையை வில்லாகவுடையவராகிய, பட்டிநாதா = ஸ்ரீ பட்டிநாயகருடைய, விளங்கு = பிரகாசிக்கின்ற, அடியும் = திருவடிகளையும், தேரும் = தெளிந்த, அலை தண் புனல் = அலைகள் (பொருந்திய) குளிர்ந்த நீரையுடைய, காஞ்சியும் = காஞ்சிமாநதியையும், சிந்திப்பார் = தியானிக்கின்றவருடைய, ஆரும் பிறவி அல்லை = மிகுந்த சனனமாகிய இருளை, தணிக்கும் = போக்குகின்ற, பிறவா நெறி ஆய = பிறவாநெறியென்னும் பெயரையுடைய, திரு கார் = அழகிய மேகங்கள், மலைத்த = (உயர்ச்சி நோக்கித்) தடுமாறப்பெற்ற, பொழில் = சோலையையுடைய, பேரையும் = திருப்பேரூரையும், என்றும் = எக்காலமும், கண்ணு = தியானிக்கக்கடவை. (எ-று.)

மேருமலை—இருபெயரொட்டுப்பண்புத்தொகை. அலை—இடைக்குறை. காரும்—உம்மை உயர்வு சிறப்பு. (65)

கண்ணன் மணித்தலை மேற்பதம் வைத்த கடவுண்முனிக்
குண்ணன் மணித்தலைப் பாற்கட லீந்த வருந்திரர்விண்
நண்ணன் மணித்தலை ஞானபு ரேசனை நாடலன்றி
யெண்ணன் மணித்தலை வேறுய தேவரை யேத்துநெஞ்சே.

(இ-ள்.) நெஞ்சே=மனமே! கண்ணன் = ஸ்ரீகிருஷ்ணருடைய, மணி =துளபமாலையணிந்த, தலைமேல்=தலையின்மேல், பதம் வைத்த=திருவடிகளைச் (சிவதீக்ஷை செய்தகாலத்து) வைத்தருளிய, கடவுள் முனிக்கு=தெய்வத்தன்மையுள்ள உபமன்னிய முனிவருக்கு, அண்ணல் = பெருமையுள்ள, மணி = முத்து (முதலிய) மணிகளையுடைய, தலை= (கடல்களுக்கெல்லாம்) முதன்மையாகிய, பால்கடல் = திருப்பாற்கடலை, ஈந்த = (உண்ணும்படி) கொடுத்தருளிய, உருத்திரர் = சிவமூர்த்தி, விண் நண்ணு அல் = ஆகாயம் வரையினும் உயர்ந்த மதில்களையுடைய, அணி=அழகிய, தலை=முதன்மையாகிய, ஞானபுரம் ஈசனை = ஞானபுரமென்னுந் திருப்பேரூரில் எழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகரை, நாடல் அன்றி=விரும்புவதல்லாமல், இ மண்தலை = இப்பூமியினிடத்து, வேறு ஆய தேவரை = அந்நியமாகிய தெய்வங்களை, ஏத்தி எண்ணல் = துதித்துச்சிந்தியாதே. (எ-று.)

உபமன்னியர் கிருஷ்ணருக்கு சிவதீக்ஷை செய்தகாலத்துத் தமது திருவடியை முடியின்மேல் வைத்தது,

* யாத வன்றுவ ரைக்கிறை யாகிய
மாத வன்முடி மேலடி வைத்தவன்.

என்பதனாலும்.

சிவன் உபமன்னியருக்குப் பாற்கடல் தந்தது,

† பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்.

என்பதனாலுமுணர்க. (66)

சேணு வலாரி தொழச்சாபந் தீர்த்தருள் செல்வர்விடத்
தேணு வலாரியல் கண்டர் தென்பேரை யிறைபுகழைப்
பேணு வலாரிளங் கொங்கையர்ப் போற்றுறு பேதையர்கள்
கோணு வலாரி யமன்றூத ராணிலை கோடுவரே.

(இ-ள்.) சேண் ஆ = உயர்வாகிய, வலாரி = இந்திரன், தொழ = தம்மை வணங்க, சாபம் தீர்த்து அருள் = (பிருகுமுனிவரால் இடப்பட்ட) சாபத்தை நீக்கியருளிய, செல்வர் = பெருஞ்செல்வமுடையவரும், ஏண் = வலிய, விடத்து ஆ = விஷத்தாலாகிய, அல் ஆர் இயல் கண்டர் = கருமைபொருந்திய அழகிய கண்டத்தையுடையவரும், தென் = அழகிய, பேரை = திருப்பே

* பெரியபுராணம் திருமலைச்சிறப்பு 14.
† திருப்பல்லாண்டு 9.

ளுணையுடைய, இறை = ஸ்ரீ பட்டிநாயகரது, புகழை = கீர்த்தியை, பேணு = விரும்பாமல், வல் ஆர் இள கொங்கையா = சூதாடுகருவிபோலும் (அழகு) பொருந்திய இளமையான தனங்களையுடைய பெண்களை, போற்றுறு = துதிக்கின்ற, பேதையர்கள் = அறிவில்லாதவர்கள், கோணு = (தந்தொழில்) வேறுபடாத, வலவார் = வலிமையுடையோராகிய, இயமனதூதரால் = இயமதூதர்களால், நிலைகோடுவர் = நிலைதளர்ந்து வருந்துவார்கள். (எ-று.)

அத்து—சாரியை, வலனென்னும் அசுரனைக்கொன்றதனால் வலாரியெனப்பெயராயிற்று. வலார்—இடைக்குறை. கொங்கையர்—இயல்பின் விகாரமாயிற்று. (67)

கோமுனி பட்டி முனியாகி மாலயன் கும்பிடுஞ்சீர்
மாமுனி பட்டி முனியாருஞ் சோலைவன் மீகநகர்
யாமுனி பட்டி முனிந்தேத்தி னோநமற் கஞ்சிலமால்
ஆமுனி பட்டி முனிட்டேத்தும் பட்டி யரனடியே.

(இ-ள்.) மால் அயன் = திருமால் பிரமன் (ஆகிய இருவரும்), கோமுனிபட்டிமுனி ஆகி = கோமுனி பட்டிமுனியென்னும் பெயரையுடையவர்களாகி, கும்பிடும் சீர் = (கைகுவித்து) வணங்குஞ் சிறப்பினையுடைய, மா = மாமரங்களும், முனி = அகத்திமரங்களும், பட்டி = பட்டிப்பூடுகளும், முனி = பலாமரங்களும் (ஆகிய இவைகள்), ஆரும் சோலை = பொருந்திய சோலைகள் சூழ்ந்த, வனமீகம் நகர் = வன்மீகநகரென்னும் திருப்பேரூரினிடத்து, மால் = இந்திரனுடைய, ஆ = காமதேனுவானது, முன = முற்காலத்தில், பட்டி இட்டு = தொழுவிட்டு, முனனி = தியானித்து, ஏத்தும் = துதிக்கின்ற, பட்டி அரனடி = பட்டிநாயகரது திருவடியை, யாம் = நாங்கள், உனனி = தியானித்து, பட்டி முனிந்து = களவு முதலிய தீயவற்றைவெறுத்து, ஏத்தினேம் = துதித்தோம், (ஆதலின) நமற்கு அஞ்சிலம் = இயமனுக்கு (ஓர்நாளும்) பயப்படமாட்டோம். (எ-று.)

யாம்—உளப்பாட்டுத்தன்மைப்பன்மை, முனி உனி—இடைக்குறைகள், பட்டி—அருச்சனைக்குரிய பூடுகளுள் ஒன்று. (68)

அரசம் பலம்பணிந் தோங்காஞ்சி மாநதி யாடினமா
முரசம் பலமுழங் கும்பிற வாநெறி முந்துபன்னீர்ப்
பரசம பலக்கனி கொண்டோ மினிவெம் பலமடையோம்
விரசம் பலவெய் யவன்மைந்த வெம்முன மேவற்கவே.

(இ-ள்.) அரசம் பலம் பணிந்தோம் = (நாங்கள்) அரசம் பலத்தின்கண் எழுந்தருளிய ஸ்ரீ நடராஜப்பெருமானை வணங்கினோம்; காஞ்சிமாநதி ஆடினம் = காஞ்சிமாநதியில் மூழ்கினோம், மா = பெரிய, முரசம்பல முழங்கும = பலவாகிய பேரிகைகள் சத்திக்கின்ற, பிறவாநெறி = பிறவாநெறியென்னுந் திருப்பேரூரின்கண், முந்துபனனீர் = முற்பட்ட பனைனீர் மரத்தினிடத்து, பரசு = (யாவருந்) துதிக்கின்ற, அம பலம் கனி கொண்டோம = அழகிய பலமாகிய கனியை (உள்) கொண்டோம், இனி = மேல், வெம்பவம் அடையோம = கொடிய பிறவியை யடையமாட்டோம், (ஆகையால்) விரசு அமபல = நெருங்கிய பழிச்சொல்லையுடையவனே! வெய்யவன மைந்த = (கொடிய கிரணங்களையுடைய) சூரியன புதல்வனே! எம முனம மேவற்க = எங்கள் முன வாராதொழிவாயாக. (எ-று)

முந்து—வினைத்தொகை. (69)

மேலைச் சிதம்பர வாநடுங் காபொறி வெம்பிநையா
மேலைச் சிதம்பர வாதுழன் முன்மன னேமிளிர்கம்
மேலைச் சிதம்பர வாரணிந் தமபல மீநடஞ்செய்
மேலைச் சிதம்பர வாகாத் தருளெனின் வீடெளிதே.

(இ-ள்.) மனமே = நெஞ்சே! மேல் = இனி, ஐ பரவா = கோழையானது மிகுந்து, சித்தம் நடுங்கா = சித்தம் நடுங்கி, பொறி வெமபி நையா = (மெய்முதலியவைவம்) பொறிகளும் கொதித்து வருந்தி, மேல் அச்சு = மேனமையாகிய சிவன், இதம்பரவாது = (யாதொரு) நனமையையுமடையாமல், உழல் முன் = வருந்துவதற்கு முனனே, மிளிர் கம மேல் = விளங்குந்திருமுடியினமேல், ஐ = அழகிய, சித்த அம்பு = ஆகாயகங்கையும, அரவு = பாம்பும், ஆர் அணிந்து = ஆத்திமாலையுஞ்சூடி, அம்பலம் = அரசம்பலத்தினகண், மீ = மேலாகிய, நடம் செய் = (ஆநந்த) தாண்டவஞ் செய்தருளுகினற, மேலைச்சிதம்பர = மேற்குத்திசையிலுள்ள சிதம்பரமென்னுந் திருப்பேரூரையுடையவரே! வா = (என்முன) எழுந்தருளுவீராக, காத்து அருள் = இரட்சித்தருள்வீராக, எனின = என்று துதிப்பாயாகில், வீடு எளிது = மோக்கமானது எளிதாகக் கிடைக்கும். (எ-று.)

பரவா, நடுங்கா, நையா—செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். சிதம்—இடைக்குறை, இஃது அந்தக்கரணம் நான்கனுள் ஒன்று. ஐச்சு—அச்சு, அகரத்துக்கு ஐகாரம்போலி. பரவாது—எதிர்மறை வினையெச்சம். சித்த—கடைக்குறை. மரணகாலத்தில் ஐயம் முதலியவைகள் தனனிலைதடுமாறும் என்பது,

புலனைந்தும்பொறிகலங்கிநெறிமயங்கியறிவழிந்திட்டைமேலுந்தி
அலமந்தபோதாகவஞ்சேலென்றருள்செய்வானமருங்கோயில்.

எனக்கூறிய ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்திநாயனார் வாக்காலுணர்க. (70)

தேவார மாமணி வீசுந்தண் காஞ்சித் திரைபடிந்து
தேவார மாமணி வாசகம் பாடிநற் றேனுபுரச்
சேவார மாமணி கண்டன் பதமலர் சிந்தைசெய்து
நாவார மாமணி யேயென்று வாழ்த்துன் னவையறுமே.

(இ-ள்.) (மனமே!) தே ஆரம்=தெய்வத்தன்மையுள்ள சந்தனமரங்களையும், மா=மாமரங்களையும், மணி=முத்துக்களையும், வீசும்=(இருகரைகளிலும்) எறிகின்ற, தண்காஞ்சி திரை படிந்து=குளிர்ந்த காஞ்சிமாநதியில் மூழ்கி, தேவாரம்=(ஸ்ரீ திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய மூவரருளிச்செய்த) தேவாரப்பாக்களையும், மா=பெருமையுள்ள, மணிவாசகம்=(மாணிக்கவாசகரருளிச்செய்த) திருவாசகமும், பாடி=———, நல்தேனுபுரம்=நல்ல காமதேனுபுரமாகிய திருப்பேரூரிலெழுந்தருளிய, சே ஆர்=இடபவாகனத்திலெழுந்தருளிய, அம் மா மணி கண்டனை=அழகிய சிறந்த (நீல) மணிபோலும் (திரு) மிடற்றையுடைய ஸ்ரீ பட்டிநாயகரது, பதம் மலர்=பாததாமரைகளை, சிந்தை செய்து=தியானித்து, மாமணியே என்று=சிறந்த மாணிக்கமேயென்று சொல்லி, நா ஆர=நா நிரம்ப, வாழ்த்து=துதிப்பாயாக, உன் நவை அறும்=உன்னுடைய (சன்மங்கடோறுந்தொடர்ந்த) தீவினை நீங்கும். (எ-று.) (71)

## தலைவனைச் செவிலித்தாய் வேண்டல்.

அறுகு தலைமதி சூடிய பேரை யரனையணி
மறுகு தலைமதி நாள்வரக் கண்டண்ணன் மால்வரைமான்
குறுகு தலைமதி மானதி மானுங்கொள் கொள்கையிலெஞ்
சிறுகு தலைமதி மானுங்கொள் வாயென்று செப்புவளே.

(இ-ள்.) அறுகு=அறுகையும், தலை=முதன்மையாகிய, மதி=சந்திரனையும், சூடிய=(திருமுடியிற்) றரித்த, பேரை அரனை=திருப்பேரூரின் கண்ணுள்ள ஸ்ரீ பட்டிநாயகரை, அணி=அழகிய, மத்தி மறுகு தலை=நடுவீதியில், நாள்=(திருவிழா) நாளில், வர கண்டு=எழுந்தருளிவரத்தரிசித்து, அண்ணல்=பெருமையிற்சிறந்தவரே! மால் வரை மான்=மேகந்தவழ்கின்ற (இமய) மலையிற்றோன்றிய பார்வதி தேவியாரையும், குறுகு தலை

=சிறிய தலையையுடைய, மதிமான் = (யாவராலும்) மதிக்கப்பட்டமானை யும், நதிமானும் = கங்கையாகிய பெண்ணையும், கொள் கொள்கையில் = (முறையே வாமபாகத்திலும் திருக்கரத்திலும் திருமுடியிலும்) ஏற்றுக்கொண்ட செய்கைபோல, எம் = எங்களுடைய, சிறு குதலை=இளமையும் மழலைச்சொல்லையுமுடைய, மதிமானும் = அறிவையுடைய பெண்ணையும், கொள்வாய் என்று=ஏற்றுக்கொள்வாயென்று, செப்புவள்=செவிலித்தாய் சொல்லுவாள். (எ-று.)

மதி—இடைக்குறை. இல்—ஒப்புப்பொருளில்வந்த ஐந்தாம் வேற்றுமை யுருபிடைச்சொல். உம்மைகள் இரண்டனுள்—முன்னது செவ்வெண்; பின்னது இறந்தது தழுவிய எச்சம். வரைமான், நதிமான், மதிமான்—இம்மூன்றும் உவமையாகுபெயர்கள். (72)

## பாங்கன் தலைவனை வியத்தல்.

செப்பு வளமணி வண்ணன் றினம்பணி தேனுபுரத்
தப்பு வனமணிந் தாடுபெம் மான்றன் னணிவரையில்
துப்பு வனமணி வாய்க்கண்டிங் குற்றெழில் சொற்றனனால்
இப்பு வனமணில் யாவரொப் பாரெம் மிறைவனுக்கே.

(இ-ள்.) செப்பு = (யாவராலும் புகழ்ந்து) சொல்லப்பட்ட, வளம் = துளபமாலை யணிந்த, மணி வண்ணன் = நீலமணிபோலுந்திருமேனியையுடைய விட்டுணுவானவர், தினம்பணி = நாடோறும் வணங்குகின்ற, தேனு புரத்து = காமதேனுபுரமென்னுந்திருப்பேரூரின்கண், அப்பு வனம் அணிந்து = கங்கையைத் (திருமுடியில்) தரித்து, ஆடு பெம்மான் = திருநடனஞ் செய்கின்ற பட்டிப்பெருமானுடைய, அணி வரையில் = அழகிய வெள்ளிமலையில், துப்பு வன்னம் =பவளநிறம் போலும், மணிவாய் = அழகிய வாயினையுடைய (தலைவியை), கண்டு=பார்த்து, இங்கு உற்று= இவ்விடம் (பிழைத்து) வந்து, எழில் சொற்றனன் = (அவளது) அழகை (தலைவன் எனக்குச்) சொன்னான், (ஆதலின்) இ புவனம் மண்ணில்=இந்தப்பூமியில், எம் இறைவனுக்கு= எங்களுடைய தலைவனுக்கு, ஒப்பார் யாவர்=யாவர் ஒப்பாவார்கள்? (ஒருவரும் ஒப்பாகார்.) (எ-று.)

மணிவாய்—அன்மொழித்தொகை. வாய்க்கண்டு—இயல்பின் விகாரமாயிற்று. அப்புவனம், புவனமண்—ஒருபொருட் பன்மொழிகள். (73)

இரைவளை யாகம் வருந்தித் தருமுத் தெழிலனஞ்செய்க்
கரைவளை யாகரு வென்றடை* காக்குங் ககனபுரித்
திரைவளை யாகலை சேர்முடி யார்த்தொழு சேர்வைநெஞ்சே
நிரைவளை யாகலைச் செய்தாற்கெட் டாதவந் நீளுலகே.

(இ-ள்.) நெஞ்சே = மனமே! இரை வளை = ஒலிக்கின்ற சங்குகள், ஆகம் வருந்தி = உடல் நொந்து, தரு = பெற்ற, முத்து = முத்துக்களை, எழில் அன்னம் = அழகிய அன்னப்பறவைகள், செய் கரை வளையா = வயல்களினருகிற் சூழ்ந்து, கரு என்று = (தமது) முட்டைகளென்றெண்ணி, அடைகாக்கும் = அடை கிடக்கும், ககனபுரி = ககனபுரியென்னுந் திருப்பேரூரின்கண் எழுந்தருளிய, திரை = கங்கையும், வள் = வளப்பத்தையுடைய, ஐ ஆ = அழகாகிய, கலை = சந்திரனும், சேர் முடியார் = சேர்ந்த (திரு) முடியையுடைய ஸ்ரீ பட்டிநாயகரை, தொழு = வணங்கு, (வணங்கின்) கல்லை = (கருங்) கல்லை, நிரை வளையா = வரிசையாகிய வளையல்களணிந்த பெண்ணாக, செய்தான் கு = செய்த திருமாலுக்கு, எட்டாத = அடைவதற்கருமையாகிய, அ நீள் உலகு = அந்தப்பெரிய மோட்சவுலகத்தை, சேர்வை = நீ அடைவாய். (எ-று.)

கலை—இடைக்குறை, முடியார்த்தொழு—இயல்பின் விகாரமாயிற்று. செய்தான—வினையாலணையும்பெயர். நிரைவளை—அன்மொழித்தொகை.

கல்லைப்பெண்ணாகச்செய்தது,

† கண்ட கன்மிசைக் காகுத்தன் கழற்றுகள் கதுவப்
பண்டை வண்ணமாய் நின்றனள்.

என்றதனாலுணர்க. (74)

## விறலிவிடுதூது.

நீண்ட வராக மருப்பணிந் தார்பொன் னெடுவரையை
மாண்ட வராக வெடுத்தார் பரம்புர மன்வயிற்போய்
வேண்ட வராக மணிதார்பண் பாடிமண் விண்ணனைத்தும்
ஆண்ட வராக மொழிக்கரு ளென்றணி யாயிழையே.

*(இ-ள்.) அணி = அழகிய, ஆய் இழையே = ஆராய்ந்தெடுக்கப்பட்ட ஆபரணங்களையுடைய பெண்ணே! நீண்ட = பெரிய, வராகம் = (திருமால் அவ

† இராமாயணம் அகலிகைப்படலம் 71.

தாரங்களுள் ஒன்றாகிய) பன்றியினது, மருப்பு = கொம்பை, அணிந்தார் = பதக்கமாக அணிந்தவரும், நெடு பொன் வரையை = பெரிய மேருமலையை, மாண் = பெருமையுள்ள, தவர் ஆக = வில்லாக, எடுத்தார் = (தமது திருக் கரத்தில்) எடுத்தவரும், பரம்புரம் = பரம்புரமென்னுந்திருப்பேரூரின்கண் எழுந்தருளியவருமாகிய, மன் வயின் = ஸ்ரீ பட்டிநாயகரிடத்து, போய் = (நீ) சென்று, மண் விண் அனைத்தும் ஆண்டவ = பூவுலகத்தாரையும் விண்ணுலகத்தாரையும் மற்ற எப்பொருள்களையும் பாதுகாத்தவரே! (என்று) பண்பாடி = இசை (யுள்ள பாடல்களால் அவரைக்குறித்துப்) பாடி, அவர் ஆகம் = அவரது மார்பினிடத்து, அணி = அணிகின்ற, தார் = (கொன்றை முதலிய மாலைகளை, இராகம் மொழிக்கு = பண்போலுஞ் சொல்லையுடைய (எங்கள்) தலைவிக்கு, அருள் என்று = தந்தருளுவீரென்று, வேண்டு = இரந்து கேட்பாயாக. (எ-று.)

மொழி—உவமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. மண், விண்—இடவாகுபெயர்கள்.

விறலிவிடுதூது—தன்னைக்கூடிப்பிரிந்த தலைவனது வரவு தாழ்ப்பப் பொறாத தலைவி பாடினியை நோக்கி யெனது காதல் நோயைத் தலைவருக்குக்கூறியவரது மாலையை யாயினும் பெற்றுவரக்கடவையெனத் தூதுவிடுத்தல்.

சிவபெருமான் பன்றியின்கொம்பை அணிந்தாரென்பது,

* இந்தவர் மார்பந் தூங்கு மேனவெண் கோடு போன்ற.

என்பதனாலுணர்க. (75)

ஆழும் பரவை யகிலமும் வானு மயனரியுந்
தாழும் பரவை யயிலார் கரனத்த தண்மலர்தூய்ச்
சூழும் பரவை மலிபிற வாநெறி யைத்தொழுது
வாழும் பரவைச் சுகமருள் வாயெற்கு மாசொழித்தே.

(இ-ள்.) ஆழும் = ஆழமாகிய, பரவை = கடலாற் சூழப்பட்ட, அகிலமும் = (இந்) நிலவுலகிலுள்ள மனிதர்களும், வானும் = சுவர்க்கலோகத்திலுள்ள தேவர்களும், அயன் அரியும் = பிரமாவும் விட்டுணுவும், தாழும் பர = வணங்குகின்ற மேலாகிய கடவுளே! வை = கூர்மையாகிய, அயில் ஆர் கரன் அத்த = வேலாயுதத்தைக் கையிற்றரித்த முருகக்கடவுளுக்குப் பிதாவானவரே! தண்மலர்தூய் = குளிர்ச்சிபொருந்திய புட்பங்களைத் தூவி யருசித்து, சூழ் = சூழ்கின்ற, உம்பர் அவை = தேவர் கூட்டங்கள், மலி = மிகுந்த, பிறவாநெறியை தொழுது = பிறவாநெறியென்னுந் திருப்பேரூரை

* திருவிளையாடற்புராணம் நரிபரியாக்கியபடலம் 11.

வணங்கி, வாழும்=வாழ்கின்ற, பரம்=மேலான, ஐ=அழகிய, சுகம்= பேரின்பவாழ்வை, என் கு=எனக்கு, மாசு ஒழித்து=குற்றங்களைப்போக்கி, அருள்வாய்=கிருபைசெய்வாயாக. (எ-று.)

அகிலம், வான்—இடவாகுபெயர்கள். (76)

மாசி மகவைக் குடந்தை கராவுண் மகத்தரவி
நாசி மகவை யரிந்தார்செங் காடு நணுகமலை
காசி மகவையஞ் சூழ்பே ரையுறை கண்ணுதலைப்
பூசி மகவைச் சிரற்கரி தாம்பதம் போதுநெஞ்சே.

(இ-ள்.) நெஞ்சே=மனமே! மாசி=மாசிமாதத்தில், மகம்=மக நாள் திருவிழாவையுடைய, ஐ குடந்தை=அழகிய கும்பகோணமும், கரா உண்=முதலையுண்ட, மக=(பார்ப்பனப்) பிள்ளையை, தரு=கொடுத்தருளிய, அவிநாசி=(தென்காசியாகிய) அவிநாசியும், மகவை=(சீராளனென்னும்) தமது புதல்வனை, அரிந்தார்செங்காடு=அரிந்தவராகிய சிறுத்தொண்டநாயனார் திருவவதாரஞ்செய்த திருச்செங்காட்டங்குடியும், நணு=பவானியும், கமலை=திருவாரூரும், காசி=காசியும், மக வையம் சூழ் பேரையும்=மகத்தாகிய பூமியிலுள்ள பெரியோர்கள் சூழ்கின்ற திருப்பேரூரும் ஆகிய இவைகளை, உறை=இடமாகக்கொண்டு உறைகின்ற, கண்ணுதலை=ஸ்ரீ பட்டிநாயகனை, பூசி=பூசனை செய்வாயாக, மகம் வச்சிரன் கு உம்=(நூறுயாகஞ்செய்து) விண்ணுலகரசு பெற்றவச்சிராயுதத்தையுடைய இந்திரனுக்கும், அரிது ஆம் பதம்=கிடைத்தற் கருமையாகிய ஸ்ரீ கைலாயபதவியும், போதும்=உனக்குக் கிடைக்கும். (எ-று.)

மக—கடைக்குறை, அரிந்தார்—வினையாலணையும் பெயர், உம்—செவ்வெண், தரு+அவிநாசி=தரவிநாசி *முற்றுமற்றொரோவழி. வைச்சிரற்கு—அகரத்துக்கு ஐகாரம்போலி. வச்சிரற்கும்—உம் விகாரத்தாற் றொக்கது. கும்பகோணம், திருச்செங்காடு, திருவாரூர்—சோழநாட்டிலுள்ள தலங்கள். அவிநாசி, பவானி—கொங்கநாட்டிலுள்ள தலங்கள். காசி—வடநாட்டிலுள்ள தலம். (77)

போதங் கரங்கொண் டருச்சித்தி லேம்பொரு ளாமெழுத்தைத்
தோதங் கரமென வேயுழல் வேங்க ளுயவருள்வாய்
மாதங் கரங்கெனு மார்புடை யானயன் வந்திறைஞ்சும்
வேதங் கரணத் தொலிக்கும பரம்புரா வித்தகனே.

---

*நன், உய், 14.

(இ-ள்.) மா தங்கு = திருமகள் வசிக்கின்ற, அரங்கு எனும் மார்பு உடையான் = இடமென்னும் மார்பையுடைய விட்டுணும், அயன் = பிரமனும், வந்து இறைஞ்சும் = (நாடோறும்) வந்து துதிக்கின்ற, வேதம் காரணத்து = (நான்கு) வேதங்களும் விருப்பத்துடன், ஒலிக்கும் = முழங்குகின்ற பரம்புரம் = பரம்புரமென்னுந் திருப்பேரூரிலெழுந்தருளிய, வித்தகனே = ஞானமயமாகிய ஸ்ரீ பட்டிநாயகரே! அம் போது = அழகிய மலர்களை, கரம் கொண்டு = கைகளிற்கொண்டு, அருச்சித்திலேம் = (தேவரீருடைய திருவடிகளை) அருச்சனை செய்தோமில்லை, பொருள் ஆம் = வேதங்களின் சாரமாகிய, எழுத்து ஐந்தும் = ஸ்ரீ பஞ்சாக்கர மகாமந்திரத்தையும், ஓதம் = செபித்தோமில்லை, கரம் எனவே = (கண்டோர்) கழுதை என்னும்படி, உழல் வேங்கள் = (சன்மமாகிய பிறவிகளில்) வருந்துகின்ற நாங்கள், உய்ய = பிழைக்கும் வண்ணம், அருள்வாய் = கிருபைசெய்வாயாக. (எ-று.)

உய—இடைக்குறை. (78)

வித்தக ரானைப் புரந்தார்நல் யாழ்முனி வேள்விவரு
புத்தக ரானைப் புழைக்கை யனைத்தரு புண்ணியனை
நத்தக ரானைமன் பேரூ ரிறைவனை நற்கயிலை
மத்தக ரானை மடித்தான் வணங்க மருவுவரே.

(இ-ள்.) வித்தகர் = ஞானசொரூபமாயுள்ளவரும், ஆனைப்புரந்தார் = காமதேனுவைக் காத்தவரும், நல் யாழ் முனி = நல்ல (மகதி என்னும்) யாழையுடைய நாரதரது, வேள்விவரு = யாகத்திற்றோன்றிய, புத்தகரானை = புதிய ஆட்டுக்கடாவை (வாகனமாக ஏறிய) முருகக்கடவுளையும், புழைக்கையனை = துதிக்கையையுடைய விநாயகக்கடவுளையும், தரு = பெற்றருளிய, புண்ணியனை = புண்ணிய சொரூபமானவரும் (ஆகிய), ஆனைமன் = யானைகள் பொருந்திய, பேரூர் இறைவனை = திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகனை, நத்து அகர் = விரும்பிய மனத்தையுடையவர்கள், மத்தம் கரானை = களிப்புடைய முதலையை, மடித்தான் = கொன்ற விஷ்ணுவானவர், வணங்க = வணங்கும் வண்ணம், நற்கயிலை மருவுவர் = நல்ல கயிலாயபதவியை அடைவார்கள். (எ-று.)

‡ புதுமை + தகர் = புத்தகர் ஈறுகெட்டுத் தன்னொற்றிரட்டியது. (79)

‡ நன், பதவியல் சூத்திரம் 9.

மருத வரைக்கண் மலர்தூவும் பேரை வரர்சனகன்
மருத வரைக்கணைத் தேயிறுத் தாற்கருள் வள்ளல்குகா
மருத வரைக்கண் டவஞ்செயென் றேவினர் மன்னுமைகா
மருத வரைக்கணிற் கண்டார்க்குண் டோகுறை மாநிலத்தே.

(இ-ள்.) தவர் = முனிவர்கள், மரு = வாசனையும், ஒ = அழகும் (பொருந்திய), கள் மலர் தூவும் = தேனையுடைய மலர்களாலருச்சிக்கின்ற, பேரை வரர் = திருப்பேரூரின்கண்ணெழுந்தருளிய மேலானவரான ஸ்ரீ பட்டிநாயகர், சனகன் = (மிதிலைக்கு அரசனாய) சனகராஜனுடைய, மரு தவரை (வில்லை) பொருந்திய வில்லை, கணத்தேயிறுத்தான்கு = இமைப்பொழுதினில் முறித்தவராகிய திருமாலுக்கு, அருள் = அநுக்கிரகம் பண்ணிய, வள்ளல் = பெருமையிற்சிறந்தவரும், குகா = முருகனே, மருதம் வரைக்கண் = மருதமலையினிடத்து, தவம் செய் என்று = (எம்மைக்குறித்துத்) தவத்தைச் செய்யக்கடவையென்று, ஏவினர் = கட்டளையிட்டவரும், மன் = பெருமை பொருந்திய, உமை = பார்வதிதேவியாருடைய, காமர் = அழகிய, தவனை = நாயகனை = கண்ணில் கண்டார்க்கு = கண்களால் தரிசித்தவருக்கு, மாநிலத்து = சிறந்த இந்நிலவுலகில், குறை உண்டோ = குறைபாடு உளதோ? (ஒன்றுமில்லை.) (எ-று.)

கணில்—இடைக்குறை. உ—சாரியை.

* சனகன் வில்லை இராமர் 'கணத்தேயிறுத்தார்' என்பது.

தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
கடுப்பினில் யாரு மறிந்திலர் கையால்
எடுத்தது கண்டன ரிற்றது கேட்டார். (80)

நிலத்தே வருஞ்சுர ருந்தவ ரும்பணி நீர்மலர்மால்
வலத்தே வரும்வெள் விடையார் பரம்புரர் மாவெளியம்
பலத்தே வருமுய வாடும்பட் டீசர் பதம்பரவார்
மலத்தே வருந்திக் கிடப்பர்பல் லூழிவெம் மாலடைந்தே.

(இ-ள்.) நிலம் = பூலோகத்திலுள்ள, தேவரும் = அந்தணர்களும், சுரரும் = (தேவலோகத்திலுள்ள) தேவர்களும், பணி = வணங்குகின்ற, நீர்மலர்

* இராமாயணம் பாலகாண்டம் கார்முகப்படலம் 34.

=மலராகிதரும், வலத்து=வலிமையோடு, வரும்=வருகின்ற, வெள் விடையார்=வெள்ளிய இடபவாகனத்தையுடையவரும், பரம்புரர்=பரம்புரமென்னுந் திருப்பேரூரிலெழுந்தருளியவரும், மா வெள்ளியம்பலத்து=சிறந்த வெள்ளியம்பலத்தின்கண், ஏவரும்=சகல ஆன்மகோடிகளும், உய்ய=(பிறவித்துன்பத்தினின்றும்) உச்சீவிக்கும் வண்ணம், ஆடும் பட்டீசர்=திருநடனஞ் செய்தருளுகின்ற ஸ்ரீ பட்டிநாயகரது, பதம்=திருவடித்தாமரைகளை, பரவார்=துதியாதவர்கள், மலத்து=நரகத்தில், பல் ஊழி=அநேக யுகங்கள், வெம்மால் அடைந்து=கொடிய மயக்கத்தையடைந்து, வருந்திக்கிடப்பர்=வருத்தப்பட்டுக்கொண்டிருப்பார்கள். (எ-று.)

ஏ—இரண்டனுள் முன்னது அசைநிலையிலும், பின்னது தேற்றத்திலும் வந்தன. வெளியம்பலம், உய—இடைக்குறைகள். (81)

மாலவ னான்மறை யோன்கா சியனருண் மன்னுதவக்
காலவ னாயவர் காணத் திருநடங் காட்டுவிழிப்
பாலவ னால்சடைப் பண்ணவன் பேரைப் பதியடைந்து
சாலவ னாவிற் றுதிப்பீர் பரகதி சார்தரற்கே.

(இ-ள்.) மாலவன்=திருமாலும், நான்மறையோன்=நான்குவேதங்களையுடைய பிரமனும், காசிபன் அருள்=காசிப முனிவர் பெற்ற, மன்னு தவம் காலவன்=நிலைபெற்ற தவத்தையுடைய காலவ முனிவரும், ஆயவர்=ஆகிய இவர்கள், காண=தரிசிக்கும்படி, திருநடம் காட்டு=அழகிய ஆனந்ததாண்டவத்தைத் தரிசிப்பித்தருளிய, விழி பாலவன்=நெற்றிக்கண்ணையுடையவரும், நால் சடை பண்ணவன்=தொங்குகின்ற சடையையுடையவருமாகிய ஸ்ரீ பட்டிநாயகரது, பேரை பதியடைந்து=திருப்பேரூராகிய தலத்தைச்சேர்ந்து, சால=மிகுதியாக, வல் நாவில்=வன்மையாகிய நாவினால், பரகதி சார்தரற்கு=மோக்கமாகிய பதவியை யடைவதற்கு, துதிப்பீர்=வணங்குவீர்களாக. (எ-று.) பாலம்—நெற்றி. தீய சொற்களைப் பயில்தலால் வன்னாவெனப்பட்டது. (82)

சாரங்க சங்கர பேரூர நின்கழற் றஞ்சமென்றே
காரங்க சங்க ரயன்முதற் றேவர் கரைந்திறைஞ்சும்
பேரங்க சங்கத் தலைவ நினைப்பழி பேசுதக்க
னாரங்க சங்க மடைந்தா னிஃதென்னை யறிவின்மையே.

(இ-ள்.) சாரங்க=மானைத்திருக்கரத்திலுடையவரே! சங்கர=(ஆன்மாக்களுக்குச்) சுகத்தைச் செய்பவரே! பேரூர=திருப்பேரூரிலெழுந்தரு

ளியவரே! நின்கழல் தஞ்சமென்று = தேவரீருடைய பாதங்களை பற்றுக்கோடென்று, கார் அங்கம் = மேகம்போலுந் திருமேனியையுடைய, சங்கர் = சங்கை யேந்திய திருமாலும், அயன் முதல் தேவர் = பிரமன்முதலிய தேவர்களும், கரைந்து இறைஞ்சும் = மனமுருகித்துதிக்கின்ற, பேர் அங்க = பெருமைபொருந்திய என்புமாலையையுடையவரே! சங்கம் தலைவ = சங்கப் புலவர்களுக்கு முதன்மையானவரே! நினை = தேவரீரை, டழி பேசு தக்கனுர் = நிந்தனைபேசிய தக்கனுர், அங்கு = அவ்விடத்தில், அசம் கம் = ஆட்டின தலையை, அடைந்தார் = பெற்றார், இஃது என்னை = இதென்னை? அறிவின்மை = பேதமை. (எ-று.) தேற்றத்தை உணர்த்தும் ஏகாரம், செய்யுள் விகாரத்தாற்றொக்கது.

அங்கு — அசைநிலை எனினுமாம். (83)

வில்லா லடிபெற்றும் பார்த்தற் கருள்செய் விமலமறைச்
சொல்லா லடிதொழும் வல்லார்க ணல்வர்க்குந் தூயநறைக்
கல்லா லடியிருந் தேயோக ஞானங் கரைந்தநினை
அல்லா லடியெங்கட் கார்துணை பேரை யருமருந்தே.

(இ-ள்.) பேரை அருமருந்தே = திருப்பேரூரிலெழுந்தருளிய (கிடைத்தற்கு) அருமையாகிய அமிர்தம்போன்றவரே! வில்லால் அடிபெற்றும் = வில்லாலடிக்க (அதனை) மேற்கொண்டும், பார்த்தற்கு = அருச்சுனனுக்கு, அருள் செய் விமல = அனுக்கிரகஞ்செய்த மலரகிதராகிய ஸ்ரீ பட்டிநாயகரே! மறை சொல்லால் = வேதங்களிற்கூறிய மகாமந்திரங்களாற் றியானித்து, அடி = தேவரீருடைய திருவடிகளை, தொழும் = வணங்குகின்ற, வல்லார்கள் நால்வர்க்கும் = (நூல்களில்) வல்லவராகிய சனகாதி நால்வருக்கும், தூய = பரிசுத்தமாகிய, நறை கல் ஆல் அடியிருந்து = மணம் பொருந்திய கல்லால் விருக்ஷத்தின் கீழிருந்து, யோகம் ஞானம் = யோகத்தையும் ஞானத்தையும், கரைந்த = உபதேசித்தருளிய, நினையல்லால் = தேவரீரையன்றி, அடி எங்கட்கு = அடிமையாகிய எங்களுக்கு, யார் துணை = யாவர் துணையாவார்கள்?. ஒருவருமில்லை. (எ-று.) சொல் — ஆகுபெயர். (84)

## பிரிவுணர்த்தல்.

அருமா மணியு மகிலுந் துகிருமம் பொன்னுமுந்தி
வருமா மணிபுனற் காஞ்சித்தண் பேரை மகிழ்மயிலே
பெருமா மணிற்பொரு ளன்றில்லை யின்பெனப் பேசவிறை
கருமா மணியின் மணிசிந் தினளந்தக் காரிகையே.

(இ-ள்.) இறை = தலைவனானவன் (தலைவியை நோக்கி), அருமாமணியும் = பெறுதற்கரிய மிகுந்த நவமணிகளையும், அகிலும் = அகிற்கட்டைகளையும், துகிரும் = பவளங்களையும், அம் பொன்னும் = அழகிய பொன்னையும், உந்தி = (இருகரைகளிலுந்) தள்ளி, வரு = வருகின்ற, மா மணி = பெருமையும் அழகுமுள்ள, புனல்காஞ்சி = நீருள்ள காஞ்சிமா நதியையுடைய, தண்பேரை = குளிர்ந்த பேரூர் ஆகிய திருப்பதியை, மகிழ் மயிலே = விரும்புகின்ற மயில்போலுஞ் சாயலையுடைய பெண்ணே! பெருமாமண்ணில் = பெரிய மேன்மையுள்ள இப்பூமியில், இன்பு = (இருமை) யின்பங்களையுந் (தரத்தக்கது), பொருள் அன்று இல்லை என = பொருளல்லாமல் (வேறு) இல்லை என்று, பேச = சொல்ல, அந்த காரிகை = அந்தலைவி, கருமாமணியின் = கரியநிறமுள்ள கண்களினின்றும், மணி சிந்தினள் = முத்துப்போலும் நீர்த்துளிகளைச்சிந்தினாள். அழுதாள் என்றபடி. (எ-று.)

மணில்—இடைக்குறை. காரிகை வருந்தினளென்பது,

§ செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

என்னுந்திருவாக்காலுணர்க.

இருமையின்பமாவன:—

இம்மை மறுமை யின்பங்கள். இவற்றைத்தருவது பொருளென்பது,

* 'முனிவரு மன்னரு முன்னுவ பொன்னான் முடியும்.'

எனவும்,

‡ 'வடுவிலா வையத்து மன்னிய மூன்றின்
நடுவண தெய்த விருதலையு மெய்தும்.'

எனவுங் கூறிய ஆன்றோர் வாக்குக்களாலுணர்க.

பிரிவுணர்த்தல் என்பது:—

புணர்ச்சியின்பத்தாற் களிப்புற்று, யாங்கள் இவ்வாறே எஞ்ஞான்றும் சுகித்திருக்கப்பெறுவேமென்று எண்ணிய தலைமகளது மகிழ்ச்சியை குறிப்பாலுணர்ந்த தலைமகன், பிரிவெனபது ஒன்று உளதென்பதை முன்னரேயுணர்வளாயின் அஞ்ஞான்று கவலாளென உட்கொண்டு, மயில்போல்வாய்! 'மக்கள் இருமையினும் அடையும் இன்பங்கள் பொருளன்றிப் பிறிதில்லை' யென்றுதான் பொருளீட்டல் காரணமாகச்செல்வேன் என்பது குறிப்பான் விளங்கத் தனதுபிரிவை அத்தலைமகட்குக்கூறு நிற்றல். (85)

---

§ திருக்குறள் பிரிவாற்றாமை 1.
* திருக்கோவையார் 332.
‡ நாலடியார் மெய்மை 4.

## நற்றாய் தலைவியன வலங்கூறி யிரங்கல்.

காா்க்கு வளைக்கஞ்சஞ் சேர்வயற் பேரைக் கடவுளருந்
தேர்க்கு வளைக்கர மான்சென்று கண்டு திகைத்தணிமெய்
வேர்க்கு வளைக்கண் புனலுகுப் பாளுடை விட்டனளாற்
பார்க்கு வளைக்கண்ட பாவையர் யாரும் பழிப்பதற்கே.

(இ-ள்.) கார் குவளை = கரிய நீலோற்பலமும், கஞ்சம் = தாமரையும், சேர் = பொருந்திய, வயல் = வயல்கள் சூழ்ந்த, பேரை கடவுள் = திருப்பேருரின்கண்ணெழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ பட்டிநாயகர் (எழுந்தருளிவருகின்ற) அரு = அருமையாகிய, தேர்க்கு = தேரைத் தெரிசிக்கும் பொருட்டு வளை கரம் மான் = வளையல்களை யணிந்த கைகளையுடைய மான்போல்வாளாகிய எங்கள்பெண், சென்று = போய், கண்டு = தெரிசித்து, திகைத்து = மயங்கி, அணி = அழகிய, மெய்வேர்க்குவள் = தேகத்தில் வேர்வையரும்பாநின்று, ஐ கண் புனல் உகுப்பாள் = அழகிய கண்களினின்றும் நீரைச்சிந்தி, பார்க்கு = (இப்) பூமியின்கண், உவளை = அவளை, கண்ட பாவையர் = பார்த்த பெண்கள், யாரும் = எவரும், பழிப்பதற்கு = பழிக்கும் வண்ணம், உடை விட்டனள் (அணிந்த) சேலையையும் நழுவவிட்டாள். இஃதென்னை ஆச்சரியம் என்பது எஞ்சிநின்றது. (எ-று.)

குவளைக்கஞ்சம்—எதுகைநோக்கி வலிமிகுந்தது. தேர்க்கு, பார்க்கு—முன்னது இரண்டாம்வேற்றுமை மயக்கம், பின்னது ஏழாம்வேற்றுமை மயக்கம். மான், பாவையர்—உவமையாகுபெயர்கள். உகுப்பாள், வேர்க்குவள்—முற்றெச்சங்கள்.

உகரச்சுட்டு சேய்மைக்கண் வந்தது.

† உப்பக்கம் நோக்கி.

§ உவனெறி கடற்கிறை.

எனக்கூறியவைபோல. (86)

பதக்குத் திருமங்கை நாதன்கண் சூட்டு பராமையோர்
டுதக்குத் திருமலை மேவுதென் பேரை யொருவரன்றிக்
கதக்குத் திருமலை மேலாய்ப் பொறிகள் கலங்குமந்நாள்
இதக்குத் திருமலர்த் தாள்காட்டி யாள்பவ ரின்றுநெஞ்சே.

---

† திருவள்ளுவமாலை 21.
§ நைடதம், நளன்றூதுப்படலம் 16.

(இ-ள்.) நெஞ்சே = மனமே! கதம் குத்து = வலிமையுள்ள வாயுக்குத் தாலும், இருமல் = சுக்கல்நோயாலும், ஐ = கோழையானது, மேலாய் = அதிகமாய், பொறிகள் = ஐம்பொறிகளும், கலங்கும் அ நாள் = தத்தம் நிலைமை மாறுபட்டு வருந்துகின்ற அந்த (மரண) காலத்தில், இதக்கு = நன்மைசெய்வதற்காக, திருமலர்த்தாள் = அழகிய தாமரை மலர்போன்ற பாதங்களை, காட்டி ஆள்பவர் = தரிசிப்பித்து இரட்சிப்பவர், பதக்கு = தமது திருவடிக்கு, திருமங்கைநாதன் = இலக்குமி நாயகனாகிய திருமால், கண் = தனை கண்களை, சூட்டுபரர் = (தாமரை மலராகக்கொண்டு) அருச்சிக்கப்பட்ட சிவபெருமானும், உமையோடு = பார்வதி தேவியாரோடு, உதக்கு திருமலை = வடக்கிலுள்ள கைலாயமலையின்கண், மேவு = எழுந்தருளியிருப்பவரும், பேரை ஒருவர் = திருப்பேரூரிலுள்ள ஒப்பற்றவருமாகிய ஸ்ரீ பட்டிநாயகர், அன்றி = அல்லாமல், இன்று = (வேறு கடவுளர்) இல்லை. (எ-று.)

ஆதலால்—அப்பெருமானது திருவடியை வணங்குவாய் என்பது எஞ்சி நின்றது. பதக்கு, இதக்கு—அத்துச்சாரியைகள் தொக்குவந்தன. (87)

இன்னம் பலவன் பிறப்பிடை யான்சென் றிளைத்தலின்றிப்
பன்னம் பலவ மொழித்துன் றிருவடி பாலித்தருள்
அன்னம் பலவ மருந்துங் கழனி யணியதில்லைப்
பொன்னம் பலவதென் பேரையின் மேவிய புண்ணியனே.

(இ-ள்.) அன்னம் = அன்னப்பறவைகள், பல்லவம் அருந்தும் = தளிர்களை உண்ணுகின்ற, கழனி = வயல்கள் சூழ்ந்த, அணிய = அழகினையுடைய, தில்லை பொன் அம்பலவ = சிதம்பரத்தின் கண்ணுள்ள கனகசபையை யுடையவரே! தென்பேரையின் மேவிய = அழகிய திருப்பேரூரின்கண் எழுந்தருளிய, புண்ணியனே = புண்ணியவடிவமான ஸ்ரீ பட்டிநாயகரே! யான் = நான், இன்னம் = மேலும், பல வன்பிறப்பு இடை = பலவாகிய கொடிய பிறவிகளில், சென்று = போய்ப்பிறந்து, இளைத்தல் இன்றி = மெலிவடையாமல், அம்பல் = பழிச்சொல்லும், அவம் = வீண்செயல்களும், ஒழித்து = (என்னையடையாமல்) நீக்கி, உன் = தேவரீரது, திருவடி = திருவடிதரிசனத்தை, பாலித்தருள் = கொடுத்தருள்வீராக. (எ-று.)

பலவம்—இடைக்குறை. தில்லை—தில்லைமரங்கள் சூழ்தலால் அப்பெயர் பெற்றது. (88)

புண்ணிய மாகருங் காலனைத் தாக்கிய பூங்கடுக்கைக்
கண்ணிய மாகரும் பாருந்தென் பேரைய காவெனமன்
நண்ணிய மாகர் பரவும் பதமலர் நாடுநெஞ்சே
அண்ணிய மாகரு நோயுந் தவிர்க்குமவ் வஞ்சுடரே.

(இ-ள்.) நெஞ்சே = மனமே! மாகர் = விண்ணுலகவாசிகளாகிய தேவர்கள், நண்ணிய = (நாடோறும்) வந்து, புண்ணிய = புண்ணியவடிவானவரே! மா = பெரிய, கரு காலனை = கருமையாகிய இயமனை, தாக்கிய = (மார்க்கண்டேயனைக் காக்கும் பொருட்டு) உதைத்தருளிய, பூ = பொலிவுள்ள, கடுக்கை = கொன்றைமலராலாகிய, கண்ணிய = மாலையையுடையவரே! மா = வயல்களில், கரும்பு ஆரும் = கரும்புகள் நிறைந்த, தென்பேரை = அழகிய திருப்பேரூரை வாசத்தானமாகவுடைய ஸ்ரீ பட்டிநாயகரே! கா என = (எங்களை) இரட்சிப்பீராகவென்று, மன = மிகவும், பரவும் = துதிக்கின்ற, பதம் மலர் = திருவடித்தாமரைகளை, தாடு = நீ விரும்புவாயாக, (விரும்பின்) அ = அந்த, அம் சுடர் = அழகிய சோதிவடிவாகிய சிவபெருமான், அண்ணிய = பொருந்திய, மா = மிகுதியாகிய, கரு நோயும் = (இம்மையில் வாதம், பித்தம், ஐய முதலியவைகளால் உண்டாகிய பிணிகளையெல்லாமல், மறுமையில் ஒரு தாய் வயிற்றில்) கருப்பத்திற்படும் பிணிகளையும், தவிர்க்கும் = நீக்கியருளுவார். (எ-று.)

நண்ணிய—செய்யியவென்னும் வினையெச்சம். உம்—இறந்தது தழுவியது. கடுக்கை—ஆகுபெயர். (89)

அஞ்சக் கரத்த வயல்சூழும் பேரை யமலனயன்
அஞ்சக் கரத்தன் முதல்வா னவரை யடர்த்தவெஞ்சூர்
அஞ்சக் கரத்தயி லேந்திய வேளை யளித்ததெய்வ
அஞ்சக் கரத்த னடிப்போதெங் கட்கென்று மாதரவே.

(இ-ள்.) அம் = நீரையும், சக்கரத்த = சக்கரவாளமென்னும் பறவைகளையுமுடைய, வயல் சூழும் = வயல்கள் சூழ்ந்த, பேரை அமலன் = திருப்பேரூரிலெழுந்தருளிய களங்கமற்றவரும், அயன் = பிரமனும், அம் சக்கரத்தன் = அழகிய சக்கராயுதத்தையுடைய திருமாலும், முதல்வானவரை = (இவர்கள்) முதலாகிய தேவர்களை, அடர்த்த = (கொல்லும் வண்ணம்) நெருங்கிவந்த, வெம் சூர் அஞ்ச = கொடிய சூரபன்மன் என்னும் அசுரன் பயப்படும்படி, கரத்து அயில் ஏந்திய = (திருக்) கரத்தில் வேலாயுதத்தைக் கொண்டருளிய, வேளை = முருகக்கடவுளை, அளித்த = பெற்ற, தெய்வம் = தெய்வத்தன்மையுள்ள, அஞ்சு அக்கரத்தன் = ஸ்ரீ பஞ்சாக்கரத்தையுடைய பட்டிநாயகரது, அடிப்போது = திருவடித்தாமரைகள், எங்கட்கு = எங்களுக்கு, என்றும் = எக்காலத்தும், ஆதரவு = துணையாம்.

என்றும்—உம் முற்றுப்பொருளில் வந்தது. (90)

ஆதர வாக வடைந்தார்ப் புரக்கு மணிகயிலைப்
பூதர வாகம நூல்விரித் தாய்நமன் போதருநாள்
சீதர வாக னயன்போற் றியதவ சித்திபுரத்
தோதர வாகன வெள்விடை மீதென் னுளத்திடையே.

(இ-ள்.) ஆதரவு ஆக = விருப்பமாக, அடைந்தார் புரக்கும் = (தமது திருவடித்தாமரைகளைத் தரிசிக்கும்பொருட்டு) சேர்ந்தவர்களைக் காப்பாற்றுகின்ற, அணி = அழகிய, கயிலை பூதர = கயிலாயமலையையுடையவரே! ஆகமம் நூல் விரித்தாய் = ஆகம (முதலாகிய) நூல்களைத் (தேவரீரது திருவாக்கால்) விரித்துச்சொல்லியருளியவரே! சீதர ஆகன் = இலக்குமிதேவி தங்கிய மார்பையுடைய திருமாலும், அயன் = பிரமனும், போற்றிய = துதித்த, தவசித்தி புரத்து = தவசித்திபுரமென்னுந் திருப்பேரூரிலெழுந்தருளிய, ஓது அர = யாவராலுந் துதிக்கப்பட்ட ஸ்ரீ பட்டிநாயகரே! நமன் = இயமன், போதரு நாள் = (என்னிடத்து) வருகின்ற காலத்தில், கனம் வெள்விடை மீது = சீர்மையையுடைய இடபவாகனத்தின்மீது (எழுந்தருளி), என் உளத்து இடை = எனது மனத்தின்கண், வா = யான் தரிசிக்குமாறு வந்தருளுவீராக. (எ-று.) அடைந்தார்ப்புரக்கும்—இயல்பின்விகாரம்' (91)

## மெய்தொட்டுப் பயிறல்.

இடையஞ் சுறவிறு மாந்து பரந்த வெழின்முலைகாள்
தொடையஞ் சுவணக் கருங்குழற் பாரஞ் சுமக்குமன
னடையஞ் சுகமொழி வாடற வோங்க னலமலகாண்
கடையஞ் சுகமுற வாள்பேரை யீசன் கனவரைக்கே.

(இ-ள்.) கடையம் = கீழோராகிய நாங்கள், சுகமுற = பேரின்பத்தையடைய, ஆள் = ஆளுகின்ற, பேரை ஈசன் = திருப்பேரூரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகரது, கனம் வரைக்கு = மேகந்தவழ்கின்ற (வெள்ளி) மலைப்பிரதேசத்தில், இடை அஞ்சுஅற = இடையானது வருந்துமாறு, இறுமாந்து = கருவித்து, பரந்த = பெருத்த, எழில் முலைகாள் = அழகு பொருந்திய தனங்களே! தொடை = பூமாலைகளணிந்த, அஞ்சு வண்ணம் கருங்குழல் = ஐந்து வகையையுடைய கரிய கூந்தலினது, பாரம் = பாரத்தை, சுமக்கும் = சுமக்கின்ற, அனம் நடை = அன்னம்போலும் நடையையும், அம் = அழகிய, சுகம் மொழி = கிளிபோலுஞ்சொல்லையுமுடைய இப்பெண், வாடுஅற = வாட்டமடைய, ஓங்கல் நலம் அல = உயர்ந்து வளர்வது நன்மையல்ல, காண் = அறிவீராக.(எ-று.)

வணம், அனம்—இடைக்குறைகள். காண்—பால்வழுவமைதி. முன்னிலை யசை யெனினுமாம். வனாக்கு—ஏழாம்வேற்றுமை மயக்கம். மொழி—உவமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

மெய்தொட்டுப் பயிறல்—வேழம் முதலாயவற்றை வினயவழி யானும் விடைபகராது நாணி நின்றதலைமகளைக் கூடக்கருதிய தலைமகன் அவனது மெலிவிற்கு வருந்துபவன்போன்று தனங்களைத்தீண்டாநிற்றல். (92)

கனகா சலவில்லர் பேரையில் வேதன் களிப்பொடுசெய்
அனகா சகல்குண்ட வெண்ணீற்றை நாளு மணியகிலார்
மனகா சகல வாயுமென்று போற்றிட வாழ்ந்திடினும்
வனகா சகத்தினர் காணச்சென் றேபின் வருந்துவரே.

(இ-ள்.) கனகம் அசலம் வில்லர் = பொன்மலையை வில்லாகவுடைய பட்டிநாயகர் எழுந்தருளிய, பேரை இல் = திருப்பேரூரில், வேதன் = பிரமனானவன், களிப்பொடு = விருப்பத்தோடு, செய் = செய்கின்ற, அனகம் = பரிசுத்தமாகிய, ஆசு அகல் = குற்றமற்ற, குண்டம் வெண்ணீற்றை = யாககுண்டத்திலுள்ள வெண்மையாகிய திருநீற்றை, நாளும் = தினந்தோறும், அணியகில்லார் = அணியாதவர்கள், மனகா = அரசனே! சகலவையும் = யாவரையும், கா என்று = காக்கக்கடவாயென்று, போற்றிட = (உலகத்தார்) துதிக்க, வாழ்ந்திடினும் = வாழ்ந்தாலும், சகத்தினர் காண = உலகத்தார் அறியும்வண்ணம், வனம் கா சென்று = காட்டின்கண்சென்று, வருந்துவர் = வருந்துவார்கள். (எ-று.) கனகாசலம், தீர்க்கசந்தி.

மன—இடைக்குறை. வனம்கா—ஒருபொருட்பன்மொழி. (93)

வருந்தா தடியர் பவத்திடை வாழ்வருள் வள்ளலணி
யருந்தா தலர்கொன்றைத் தேனுபு ரேசர்தம் மாலயத்துட்
பொருந்தா தவர்மெய் மரமைந் தெழுத்துமெண் ணார்புனெஞ்சங்
கருந்தா துவந்தலங் காணார்கண் மூங்கில்வெங் கண்ணுறைக்குமே.

(இ-ள்.) அடியர் = தொண்டர்கள், பவத்திடை = பிறப்பினிடத்து, வருந்தாது = (சென்று) வருந்தாமல், வாழ்வு அருள் வள்ளல் = (பேரின்ப) வாழ்வைக் கொடுத்தருளுகின்ற (பெருங்) கொடையையுடையவரும், அணி = அழகிய, அரும் = மேன்மையாகிய, தாது அலர் கொன்றை = மகரந்தங்கள் நிறைந்த கொன்றைப்பூமாலையணிந்த, தேனுபுரம் ஈசர் = தேனுபுரமென்னுந் திருப்பேரூரிலெழுந்தருளியவருமாகிய ஸ்ரீ பட்டிநாயகரது, ஆலயத்

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
THIRUVANMIYUR, MADRAS-41.

துள் = (திருக்)கோயிலுள், பொருந்ாதவர் = போய்ச்சேர்ந்து (வணங்காதவர்கள்), மெய் = தேகம், மரம் = மரமாம், ஐந்து எழுத்தும் = ஸ்ரீ பஞ்சாக்கரமகாமந்திரத்தையும், எண்ணார் = தியானியாதவர்கள், புல் நெஞ்சம் = அற்பமாகிய மனம், கரும் தாது = கருமையாகிய இரும்பாம், தவம் அவம் = (அவர்கள் செய்யும்) தவங்கள் வீணாம், காணார் கண் = தரிசியாதவர்களுடைய கண்கள், மூங்கில் வெம் கண் ஒக்கும் = மூங்கிலின் இடத்துள்ள வெவ்விய கணுக்களை யொக்கும். (எ-று.) பேரின்ப வாழ்வாவது—முத்தியுலகத்தில் அனுபவிக்கும் கெடாத இன்பம்.

கொன்றை—பொருளாகுபெயர், தேனுபுரேசர்—குணசந்தி, தேனுபுரம்—முதற்குறை. எழுத்தும்—உம் சிறப்பு. (94)

கண்ணப் பருக்குப் பதந்தருநாதகல் யாணபுரத்
தெண்ணப் பருக்கு மணிகேள்வன் போற்று மிறைவபர
அண்ணப் பருக்குக் குடர்நோய்தந் தாண்ட வரவளிதேன்
உண்ணப் பருக்கும்பன் னீர்மூல வென்றென்று மோதுவனே.

(இ-ள்.) கண்ணப்பருக்கு = கண்ணப்பநாயனாருக்கு, பதம் = (தமது) புண்ணியலோகத்தை, தரு = கொடுத்தருளிய, நாத = சிவபெருமானே! கல்யாணபுரத்து = கல்யாணபுரமென்னுந் திருப்பேரூரிலெழுந்தருளிய, என் அப்ப = (யாவருந் தியானிக்கின்ற) தந்தையானவரே! ருக்குமணி = உருக்குமணி தேவியாரது, கேள்வன் = நாயகனாகிய திருமால், போற்றும் = துதிக்கின்ற, இறைவ = கடவுளே! பர = மேலானவரே! அண் = பெருமையையுடைய, அப்பருக்கு = திருநாவுக்கரசுநாயனாருக்கு, குடர் நோய் = சூலை நோயை, தந்து = கொடுத்து, ஆண்ட = அடிமைகொண்ட, அர = எப்பொருட்குமிறைவரே! அளி = வண்டுகள், தேன் உண்ண = தேனையுண்ணுமாறு, பருக்கும் = (நாடோறும்) உயர்கின்ற, பன்னீர் மூல = பன்னீர் விருட்சத்தின் அடியில் (எழுந்தருளிய) ஸ்ரீ பட்டிநாயகரே! என்ற = என்றுசொல்லி, என்றும் = எக்காலத்தும், ஓதுவன = (யான்) வாழ்த்துவேன, என்னை ஆள்வீராக என்பதெஞ்சிநின்றது. (எ-று.) (95)

ஓதத் தமரக் கடல்கடைந் தோனுவந் தோதுதிருப்
பாதத் தமரர் பரவும் பரம்புரர் பார்த்தன்வல்வில்
வாதத் தமர வடியுண்ட சென்னியில் வானவராப்
போதத் தமர வடிச்சுவ டுற்றதும் பொற்புடைத்தே.

(இ-ள்.) ஓதம் = குளிர்ச்சியும், தமரம் = பேரொலியுமுள்ள, கடல் = பாற்கடலை, கடைந்தோன் = கடைந்த திருமால், உவந்து ஓது = மகிழ்ச்சி கொண்டு துதிக்கின்ற, திரு பாதத்து = அழகிய பாதங்களினிடத்து, அமரர் பரவும் = தேவர்கள் வணங்குகின்ற, பரம்புரர் = பரம்புரமென்னுந் திருப்பேருரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகர், பார்த்தன் = அருச்சுனனுடைய, வல் வில் வாதத்து = வலிய விற் போரில், அமர அடியுண்ட சென்னியில் = பொருந்தும்படி அடிபட்ட சிரசின்மேல், வானவர் = தேவர்களுடைய, ஆ போதம் = பசுவாகிய காமதேனுவின் கன்றினது, அடிச்சுவடு = காற்றழும்பு, அமர = அடங்குமாறு, உற்றதும் = ஏற்றுக்கொண்டதும், பொற்பு உடைத்து = (மிக்க) அழகினையுடையது. (எ-று.)

கடைந்தோன் — வினையாலணையும் பெயர். ஓது—வினைத்தொகை. உடைத்து—குறிப்புவினைமுற்று. (96)

## இடமணித்தென்றல்.

பொன்னஞ் சிலம்பு குழைத்தடை யார்புரம் பொன்றுவித்த
அன்னஞ் சிலம்பு வயற்பேரை நாத னணிகளத்து
வன்னஞ் சிலம்பு முடியி லிடத்து மையிலணித்தாம்
பன்னஞ் சிலம்புறு தாண்மா திருவேம் பதிநிலத்தே.

(இ-ள்.) பன் — (விசேடித்துச்) சொல்லப்பட்ட, அம் = அழகிய, சிலம்பு உறு = சிலம்பு என்னும் ஆபரணம் பொருந்திய, தாள் மாது = பாதங்களையுடையபெண்ணே! அம் பொன் சிலம்பு = மேகந்தவழ்கின்றமேருவை, குழைத்து = வளைத்து, அடையார் புரம் = பகைவரது மும்மதில்களையும், பொன்றுவித்த = அழியச்செய்த, அன்னம் = அன்னப்பறவைகள், சிலம்பு = சத்திக்கின்ற, வயல்பேரை நாதன் = வயல்கள் சூழ்ந்த திருப்பேருரிலெழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகரது, அணி களத்து = அழகிய கண்டத்தினிடத்துள்ள, வல் நஞ்சு இல் = வலிய விடம்போலவும், முடி அம்பு இல் = முடியினிடத்துள்ள கங்கைபோலவும், இடத்து உமை இல் = வாமபாகத்தினிடத்துள்ள பார்வதி தேவியார் போலவும், நிலத்து = இப்பூமியின்கண், இருவேம் பதி = நம்மிருவருடைய ஊர்களும், அணித்து ஆம் = சமீபமாம். (எ-று.)

கவலற்க வென்பதெஞ்சி நின்றது. இல்—மூன்றும் ஐந்தாம் வேற்றுமை ஒப்பு உருபிடைச்சொற்கள்.

மும்மதில்களை அழியச்செய்ததற்கு உதாரணம் :—

* அடையார் புரங்கள்,

இகல்குன்ற வில்லிற் செற்றோன்றில்லை யீசன்.

இடமணித்தென்றலென்பது—தலைமகனைக்கூடிய தலைமகள் அவனது பதிசேய்த்தோ அணித்தோ, பிரியப்பெறின் எக்காலங் கூடப்பெறுவேமோ? எனக்கருதிக் கவலுற்றதைக் குறிப்பாலறிந்த தலைமகன், அவளை நோக்கி, பெண்ணே! ஸ்ரீ பட்டிநாதரது கண்டமும், விடமும், முடியும், கங்கையும், வாமபாகமும், உமாதேவியும் போல, நின்பதியும் என்பதியும் அணித்தாயுள்ளனவன்றிச் சேய்த்தன்று, நீ கவலற்கவென அவளதவலத்தை யொழித்து மகிழ்வித்தல். (97)

நிலவே யரும்பு நிகர்முர லார்க்கு நெடிதுருகிப்
பலவே யரும்பு பணிபுரி வேனைக்கண் பார்த்தருள்வாய்
புலவே யரும்பு ணரியுண்ட மாதவன் போற்றுறுசீர்
நலவே யரும்பு மலையார்தென் பேரைய நற்பணியே.

(இ-ள்.) புலவு ஏய் = புலால் நாற்றம் பொருந்திய, அரும் புணரி = (அளவிடுதற்கு) அரிய சமுத்திரத்தை, உண்ட மாதவன் = அருந்திய மகா தவத்தையுடைய அகத்தியமுனிவர், போற்றுறு = துதிக்கின்ற, சீர் = சிறப்புப்பொருந்திய, நலவேய் = நல்ல மூங்கில்கள், அரும்பு = தோன்றிய, மலை ஆர் = வெள்ளிமலை பொருந்திய, தென் பேரைய = அழகிய திருப்பேரூரி லெழுந்தருளியவரே! நிலவு ஏய் = ஒளிபொருந்திய, அரும்பு நிகர் = (முல்லை) அரும்பைப்போன்ற, முரலார்க்கு = தந்தபந்திகளையுடைய பெண்களுக்கு, நெடிது உருகி = மிகவும் (மனம்) கரைந்து, பல அரும்பு = பலவாக உண்டாகிய, பணி = (அவர்கள்) குற்றேவல்களை, புரிவேனை = செய்துழல்கின்ற என்னை, நின் கண் பார்த்து = தேவரீருடைய திருக்கண்களாற்பார்த்து, நல்பணி அருள்வாய் = (உமக்குத்தொண்டுசெய்தல் முதலாகிய) நல்லவேலைகளை எனக்கு அனுக்கிரகஞ்செய்தருளுவீராக. (எ-று.)

ஏ—அசைநிலை. புரிவேன்—வினையாலணையும் பெயர். நல்ல—இடைக்குறை. (98)

---

* திருக்கோவையார் 4.

## பொய் பாராட்டல்.

பணிய வரையிலர் சூழ்காம தேனுப் பதிமயினின்
கணிய வரைகுழல் கண்டோ டினவெள்கிக் காரதன்றி
அணிய வரைவருத் துங்கொங்கைச் சீர்கண் டரியசெம்பொன்
திணிய வரைவளைந் தன்றென் றுலகினர் செப்புவரே.

(இ-ள்.) பணிய=வணங்குமாறு, வரையிலர்சூழ் = அளவில்லாத மாந்தர்கள் வந்து சூழ்கின்ற, காமதேனுப்பதி=காமதேனுபுரமென்னுந் திருப்பேரூரின்கண்ணுள்ள, மயில்=மயில்போலுஞ் சாயலையுடைய பெண்ணே! நின் = உனது, கண்ணிய வரைகுழல் = பூமாலைகளையுடைய கட்டபட்ட கூந்தலை, கார் கண்டு = மேகங்கள் பார்த்து, வெள்கி ஓடின =நாணியோடின, அது அன்றி=அதல்லாமல், அணி=அழகிய, அரைவருத்தும் = இடையை வருத்துகின்ற, கொங்கை சீர்கண்டு = தனங்களி னழகைப்பார்த்து, அரிய = அருமையாகிய, திண்ணிய=வலிமையுள்ள, செம் பொன் வரை = மேருமலையானது, வளைந்தன்று என்று=வளைந்தது என்று, உலகினர் செப்புவர் = உலகத்திலுள்ள மாந்தர்கள் சொல்லுவார்கள். (எ-று.)

மயில்—உவமையாகுபெயர். கணிய, திணிய—இடைக்குறைகள்.

பொய் பாராட்டலென்பது:— தலைமகளுடன் கூடி யின்பம் நுகர்ந்த தலைமகன் தனக்குண்டாய மகிழ்ச்சியால் அவளிடத்து உள்ளது கூறலன்றி, யில்லதுங் கூறிக்கொண்டாடல். அஃதாவது, அவளது அவயவங்கட்கு உவமையாகிய பொருள்களை வேறு காரணங்கள் கற்பித்துக் குறைகூறி உவமேயமாகிய குழலையும் கொங்கையையும் புகழ்தல். இவ்வகப்பொருட்டுறையை —குழல், கொங்கை இவைகளின்மேன்மையைக்கூறலால் நலம்புனைந்துரைத்தல் என்னுந் துறையாகக்கொள்ளினும் இழுக்காது. (99)

செவ்வந்தி யார்நந் தனத்தில்லை யின்னடஞ் செய்தனசீர்ச்
செவ்வந்தி யார்ந்தன தீபே ருளத்துந் திகழ்ந்தனமாச்
செவ்வந்தி யார்தரு பிட்டுண்டு வையைக்கட் சென்றனவான்
செவ்வந்தி யார்வண்ணர் பேரைப்பட் டீசர் திருவடியே.

(இ-ள்.) செவ் அந்தி வான் = செம்மை நிறத்தையுடைய மாலைக்காலத்து ஆகாயம் போல, ஆர் வண்ணர் = நிறைந்த நிறத்தையுடையவராகிய, பேரை பட்டீசர் = திருப்பேரூரின்கண் எழுந்தருளிய ஸ்ரீ பட்டிநாயகரது, திரு அடி = அழகிய பாதங்கள், செவ்வந்தி = செவ்வந்தியென்னும் பூஞ்செடிகளையும், ஆர் = ஆத்திமரங்களையும் உடைய, நந்தனம் = பூஞ்சோலைக

ள்சூழ்ந்த, தில்லையில் = சிதம்பரத்தில், நடம் செய்தன = (பதஞ்சலிவியாக்கிரபாதர்பொருட்டு) ஆனந்ததாண்டவத்தைச் செய்தருளின, சீர் = சிறப்புப்பொருந்திய, செவ்வந்தி = செவ்வந்தியென்னுந் திருச்சிராப்பள்ளியில், ஆர்ந்தன = எழுந்தருளியிருந்தன, தீயேம் உளத்தும் = தீமையையுடைய எங்கள் மனத்தினிடத்தும், திகழ்ந்தன = (அஞ்ஞான இருளை நீக்கி) விளங்கின, செவ் = நற்குணமமைந்த, வந்தியார் = வந்திநாச்சியாரால், தரு = கொடுக்கப்பட்ட, மா பிட்டு = மாவினலாகிய பிட்டை, உண்டு = சாப்பிட்டு, வையை கண் சென்றன = வையையாற்றினிடத்து (அதன் கரையை யடைக்கும் பொருட்டு) போயின. (எ-று.)

பின்னைய, செம்மை — இரண்டனுள் முன்னையது செப்பத்தின் கண்ணும், பின்னையது நிறத்தின் கண்ணும் வந்தன. செவ்வந்தி — ஓர்வகைப்பூச்செடி. திருச்சிராப்பள்ளி — சோழநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று.

வையை யடைக்கச் சென்றதென்பது,

* உரகன் வாய்க்கீண்ட மாதவன்போல
மண்ணகழ்ந் தெடுத்து வருபுனல் வையைக்
கூலஞ் சுமக்கக் கொற்றாளாகி
நரைத்தலை முதியொளிடித்தடு கூலிகொண்
டடைப்பது போலவுடைப்பது நோக்கி.

என்றதாலுணர்க. (100)

கார்வாழி வாழி மறைவேள்வி சைவங் ககனபுரி
யூர்வாழி வாழி யுமைபட்டி நாத ரொளிர் கடுக்கைத்
தார்வாழி வாழி யடியார் தென்பேரையந் தாதிபடிப்
போர்வாழி வாழி மணிநீ றெழுத்தைந்தும் பூதலத்தே.

திருப்பேரூர்க் கலித்துறையந்தாதி

மூலமும், உரையும் முற்றுப் பெற்றன.

---

* கல்லாடம் 49.

MAHAMAHOPADHYAYA

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 30 | நன்னூல் பெயரியல் 60 | தொல், சொல்லதிகாரம் வேற்றுமை மயங்கியல் 106. |
| 8 | 30, 31, 32 | திகரி ... | திகிரி. |
| 9 | 8 | விடு ... | வீடு |
| 16 | 21 | கோதத்திரம் ... | கேஷத்திரம். |
| 18 | 3,4 | தந்திரி ... | தந்தரி. |
| 18 | 32 | இடத்து ... | அகத்து. |
| 20 | 8 | காளத்தார் ... | காளத்தர். |
| 20 | 26 | பாதாம்புயம் ... | பதாம்புயம். |
| 23 | 28 | பேனை ... | பேரைப. |
| 24 | 18 | பேருரும் ... | பேருரையும். |
| 26 | 23 | செல்வத்தையும் ... | செல்வமும் |
| 29 | 7 | எறி ... | எறி |
| 29 | 16 | வீடு ... | விடு |
| 41 | 17 | திருவடிகளையும்— ... | திருவடிகளையும்—எங்கட்கு= எங்கட்கு. |
| 42 | 18 | கோபத்தையும் ... | கோபமும். |
| 42 | 20 | பேனை— ... | பேனை பரமன் |
| 48 | 18 | மனமே ... | மனனே. |
| 54 | 2 | விட்டுணும் ... | விட்டுணுவும். |
| 57 | 9 | இதென்னே ... | இஃதென்னே. |
| 57 | 10 | பேதமை ... | பேதமை! |
| 65 | 9 | போதம் ... | போதத்து. |
| 66 | 28 | நல்ல ... | நல. |
| 68 | 18 | முதியொ ... | முதியோ. |